Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 20+16 | விலை - 30 ரூபா    செய்தி: 021 493 0000    விளம்பரம்: 021 493 1111

சுடர் :35    கதிர் :78    மாசி 03ஆம் நாள்    சனிக்கிழமை    15 பெப்ரவரி 2020    வள்ளுவர் ஆண்டு 205

உள்ளே

# யாழ். பல்கலையில் மீண்டும் பகிடிவதை

## ராக்கிங்கில் ஈடுபட்ட கலைப்பீட மாணவன் அதிகாரிக்கு மிரட்டல்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 15

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்ற பாலியல் பகிடிவதை விவகாரம் அடங்கும் முன்னரே மற்றொரு சம்பவம் பதிவாகியுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட புதுமுக மாணவன் ஒருவன் தவறான முடிவு எடுக்க செல்லும் அளவுக்கு பகிடிவதை எல்லை மீறியது. எனினும் அதிகாரிகளின் தலையீட்டால் மாணவன் காப்பாற்றப்பட்டான். பகிடிவதையில் ஈடுபட்ட கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் முக்கிய பொறுப்பில் இருக்கும் மாணவனிடம் விசாரணைகளை மேற்கொண்ட அதிகாரி, மாணவனால் மிரட்டப்பட்டதையடுத்து அவர் பதவி விலகல் கடிதத்தை யாழ். பல்கலையின் தகுதி வாய்ந்த அதிகாரியிடம் கையளித்துள்ளார்.

13 ▶



"பகிடிவதைக்கு பச்சை மட்டை அடிதான் நல்ல மருந்து பாருங்கோ"...

## பெண்ணின் சடலம் மீட்பு

வவுனியா, பெப். 15

வவுனியா குடியிருப்பு பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் பெண்ணின் சடலம் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது. பெண்ணின் சடலத்தை அவதானித்த சிலர் வவு

13 ▶

## குடும்பத் தலைவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.15

குடும்பத் தலைவர் சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் சண்டிலிப்பாயில் நேற்று இடம் பெற்றது.

ஆறுமுகம் யோகநாதன் (வயது- 53) எனும் 4 பிள்ளைகளின் தந்தையே

13 ▶

## ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தோம்

### இலங்கை உத்தியோகபூர்வமாக ஜெனிவாவுக்கு நேற்று அறிவிப்பு

கொழும்பு, பெப். 15

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கை தொடர்பில் சமர்பிக்கப்படவுள்ள அறிக்கை இலங்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கைக்கு பதிலடியாக, ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்ற செய்தியை இலங்கை அரசு ஜெனிவாவுக்கு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்

13 ▶

## அடுத்த கட்ட நகர்வு என்ன?

### ஜெனிவாவில் கூட்டமைப்பு நேற்று தீவிரமாக ஆராய்வு

ஜெனிவா, பெப். 15

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று இலங்கை அரசு அறிவித்துள்ள நிலையில், இலங்கை தொடர்பில் அடுத்த கட்ட நகர்வை எவ்வாறு முன்னெடுப்பது என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும்,

13 ▶

## 5 கிலோ கஞ்சா மீட்பு

கிளிநொச்சி, பெப். 15

பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுத்துறைப் பகுதியில் இருவேறு சந்தர்ப்பங்களில் 5 கிலோ கஞ்சா நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகத்தில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உடுத்துறையிலிருந்து இயக்கச்சி நோக்கிப் பய

13 ▶

மனித உரிமை மீறல் விவகாரம்:

## இராணுவத் தளபதி சவேந்திரவின் குடும்பத்துக்கு உள் நுழைய தடை

### அமெரிக்கா அதிரடி அறிவிப்பு!

கொழும்பு, பெப். 15

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இணங்கி ஏற்றுக் கொண்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று இலங்கை அரசு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள நிலையில், இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர

12 ▶

மறுவீட்டு அழைப்புக்குச் சென்ற

## தம்பதியர் விபத்து மனைவி உயிரிழப்பு

### கணவன் படுகாயம்

வவுனியா, பெப். 15

வவுனியா முருகனூர் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரது கணவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர்கள் இருவருக்கு இரண்டு தினங்க

13 ▶

கொக்குவில்

## தொழில்நுட்பக் கல்லூரிக்குள் வாள்வெட்டுக் குழு அட்டகாசம்

### மடக்கப்பட்ட தமது சகபாடியை மீட்க மீண்டும் வந்த கும்பல்

யாழ்ப்பாணம், பெப். 15

கொக்குவிலில் அமைந்துள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் புகுமுக மாணவனுக்கு ஆதரவாக மோதலில் ஈடுபடக் களமிறங்கிய வாள்வெட்டுக் குழுவின் அட்டகாசத்தால் கல்

13 ▶

யானையும் இல்லை இதயமும் இல்லை

## அன்னத்தில் களமிறங்க ரணில்– சஜித் இணக்கம்

கொழும்பு, பெப். 15

பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டிய சின்னம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டிருந்த மோதல் நேற்று மாலையுடன் நிறைவுக்கு வந்தது. இதன்படி பொதுச் சின்னத்தின் கீழ் தேர்தலை எதிர்கொள்வதற்கு இரு தரப்புகளும் இணக்கம்

13 ▶

மாணவர்களிடம்

## காதலர்தினப் பரிசு பொருள்கள் பறிமுதல்

பெற்றோரிடம் ஒப்படைப்பு

13 ▶

உதயன்
newuthayan.com

# வளைந்து கொடுப்பவரில்லை மாவட்டச் செயலர் வேதநாயகன்

## பிரிவுபசார நிகழ்வில் பலரும் புகழாரம்

யாழ்ப்பாணம், பெப். 15

ஒரு காட்டிலே எப்போதும் முதலில் வெட்டப்படுவது நேரான மரங்கள்தான். வளைந்த மரங்கள் வெட்டப்படுவதில்லை. இதனையே எமது மாவட்டச் செயலரின் இடமாற்றம் நினைவுபடுத்துகின்றது. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் (காணி) சு.முரளிதரன் தெரிவித்தார்.





2015ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டச் செயலராக பதவியேற்ற நா.வேதநாயகனுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இதனையடுத்து அவர் தனது ஓய்வை அறிவித்தார். இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அவருக்கு பிரிவுபசார நிகழ்வு நடத்தப்பட்டது.

மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகன் தம்பதியினர் மலர் மாலை அணிவித்து அழைத்து வரப்பட்டு பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னமும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். கலந்துகொண்ட உத்தியோகத்தர்களும் பொன்னாடை போர்த்தி, வாழ்த்து மடல்களை வழங்கி ஓய்வு பெற்றுச் செல்லும் மாவட்டச் செயலரை மதிப்பளித்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மேலதிக மாவட்டச் செயலர், வேதநாயகன் நேரகாலம் பார்க்காது பணியாற்றிய ஒருவர் என்று குறிப்பிட்டார். மக்கள் அவரை எந்த நாளும் சந்திக்கக் கூடிய நிலமை ஏற்பட்டது. மக்களின் கோரிக்கைகளை தனது நாள் குறிப்பில் பதிவு செய்து அது முடியும் வரையில் தனது பதிலிருந்து நீக்கமாட்டார். இவரது காலத்திலேயே அதிகளவு காணிகள் விடுக்கப்பட்டன என்றும் அதிகளவான வீடுகள் அமைக்கப்பட்டன என்றும் குறிப்பிட்டார்.

மாவட்டச் செயலக பிரதம கணக்காளர், நாளைக்கும் நிலவு வரும் நாம் இருக்க மாட்டோம் என்ற பாடல் வரிகள்தான் இன்றைய நிலையில் நிர்வாக அதிகாரிகளுக்குப் பொருந்தும். 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வு ஏற்பட்டது. அப்போது அவரது மகள் கைக் குழந்தை. அவரோடு இடம்பெயர்ந்து சாவகச்சேரி பிரதேச செயலகம் வந்தார். கடமையாற்றினார். எதனை எடுத்தாலும் அதிகமாக, திறமாக முடித்திருக்க வேண்டும் என்பதற்காக இரவு பகலாக் தானும் தூங்க மாட்டார், பணியாளர்களையும் தூங்க விட மாட்டார். மனிதநேயம் கொண்ட மேலதிகாரியான மனிதனோடு பணியாற்றியுள்ளேன் என்று பெருமைகொள்கின்றேன், என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மாவட்டச் செயலர், அரசியல் அபிலாசைகள் இருக்கின்றதே தவிர நான் ஒரு அரசியல் கட்சியையும் சேர்ந்தவன் அல்ல. நான் எந்தவொரு அரசியல் கட்சி சார்பாக நடக்கவும் இல்லை. எனது சேவையை நேர்மையாகச் செய்தேன். நான் ஒரு அரசியல் கட்சி சார்ந்து வேலை செய்தேன் என்று யாராவது நிரூபிக்க முடிந்தால் நிரூபித்து காட்டட்டும். தேர்தலில் போட்டியிடப் போகின்றீர்களா என்று பலர் வந்து என்னிடம் கேட்டார்கள். அவ்வாறு ஒரு முடிவு என்னிடம் இல்லை என்றார், மாவட்டச் செயலர் வேதநாயகன்.

(ஒ.5,105,111)

# விக்கியின் கூட்டு பொருத்தமற்றது

## சங்கரி கருத்து

கிளிநொச்சி, பெப். 15

விக்னேஸ்வரன் உருவாக்கியுள்ள கூட்டு பொருத்தமற்றது. அவருடன் இணைந்திருப்பவர்கள் தொடர்பில் அவர் ஆராய்ந்து பார்த்திருக்கவேண்டும். இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது உருவாக்கப்படும் கட்சிகளின் கூட்டுக்கள் தங்களைப் பாதுகாப்பதற்காகவே அமைக்கப்பட்டுள்ளன. விக்கியும் அவரது கூட்டணியும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து செயற்பட முன்வரவேண்டும். 2004ஆம் ஆண்டில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது போன்று காணப்பட்ட சூழலே இன்றும் இருக்கின்றது. 2004ஆம் ஆண்டில் பெயரோடும், புகழோடும், பொருளாதாரத்தோடும் வாழ்ந்த தமிழினம் இன்றைய கூட்டமைப்புக்களால் சிதைக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் வாக்குப் பலத்தை சிதைத்த பெருமை மாவை.சேனாதிராசாவுக்கே உரித்தானது. அவர் தலைமைப் பதவியிலிருந்து விலகிப்போனால் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்கும் - என்றார்.

(ஒ.5,214)

# திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய்வு

மன்னார், பெப். 15

திருக்கேதீச்சரத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி சிவராத்திரி திருவிழா பெரும் எடுப்பில் இடம்பெறவுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பான முன்னாயத்தக் கூட்டம், கேதீச்சர சம்பந்தர் மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

திருக்கேதீச்சரத்துக்கு லட்சக்கணக்கான பக்கதர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவர்களுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்து சங்கம் என்பன சேவைகளை வழங்கவுள்ளன. இ.போ.சவின் 50 பேருந்துகளும், தனியாரின் 50 பேருந்துகளும் சேவையில் ஈடுபடவுள்ளன. ரயில் திணைக்களத்தையும் போக்குவரத்துக்கு உதவுமாறு கோருவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதியிலிருந்து திருவிழா முடியும் வரையில் 4 மருத்துவர்கள் ஆலயத்தில் இருப்பார்கள். நோயாளர் காவு வண்டியும் தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

ஆலயச் சுற்றாடலில் பொலித்தீன் மற்றும் புகைத்தல் பொருள்கள், போதைப் பொருள்கள், மதுபானம் என்பன முழுமையாகத் தடை செய்யப்பட்டிருக்கும். அதைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டிருப்பார்கள். சுமார் 300 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படும் அதேவேளை, தேவை ஏற்படின் இராணுவத்தினரும் களமிறக்கப்படுவார்கள்.

மின்சாரம் தடைப்படும்போது 250 கே.பி. மின்பிறப்பாக்கியை வழங்குவதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

சிவராத்தி திருவிழா சிறப்பாக நடைபெறுவதற்கு அனைத்துத் திணைக்களங்களையும், ஆலய பரிபாலன சபையுடன் ஒத்துழைத்துச் செயற்படுமாறு மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கோரினார்.

**ஒருங்கிணைப்பு அலுவலகம்**

சிவராத்திரிக்கு வரும் பக்தர்களுடைய சிரமங்களை தவிர்ப்பதற்காக திருக்கேதீச்சர ஆலய சூழலில் மன்னார் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்பு செயலகம் எதிர்வரும் 20ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதி வரையில் இயங்கவுள்ளதாக மன்னார் பிரதேச செயலர் ம.பிர தீபன் தெரிவித்தார்.

(ஒ.5,213)

# ஏக்கர் வரி அறவீடு

சாவகச்சேரி.பெப்.15

நுணாவில் மேற்கு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் வரி அறவிடப்படவுள்ளது.

நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நுணாவில் மேற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமைப்புக்கு உட்பட்ட அனைத்து விவசாயிகளும் 2019 ஆம் ஆண்டு ஏக்கர் வரி கட்டிய பற்றுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, சந்தாப் பணம் 100 ரூபா, கிராம அலுவலகர் உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கமக்கார அமைப்புத் தலைவர் உறுதிப்படுத்திய கடிதம் போன்றவற்றுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# ரெலோவின் ஆண்டு நிறைவு

வவுனியா.பெப்.15

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) 50 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ரெலோ இயக்கத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-110)

# கீரிமலையில் ஆளுநர் ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப். 15

வடக்கு மாகாண ஆளுநர் கீரிமலை தீர்த்தக்கரை மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களுக்கு, மக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய பயணத்தை மேற்கொண்டார்.

(ஒ.5)

## திருடி விற்பதற்கு பேரம் சிசிரிவியால் சிக்கினார்

சாவகச்சேரி, பெப். 15

ஓட்டோவுக்குள் வைக்கப்பட்டிருந்த டிரில்லரைத் திருடி விற்பதற்காகப் பேரம் பேசியவர் மறைகாணி உதவியுடன் பிடிக்கப்பட்டார்.

சம்பவம் சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் திருத்த வேலை மேற்கொள்வதற்கென்று வந்தவர்கள் ஓட்டோவுக்குள் ஒரு சில பொருள்களை வைத்துவிட்டு கட்டடத்தின் மாடியில் வேலைசெய்து கொண்டிருந்தனர். அந்த வேளையில் ஓட்டோவுக்குள் வைக்கப்பட்டிருந்த டிரில்லரை ஒருவர் எடுத்துக்கொண்டு வெளியேறுவதை அவதானித்த பிரதேச செயலக அலுவலர் அங்கு நின்ற பணியாளர்களுக்குத் தெரிவித்துள்ளார். பணியாளர்கள் பின்தொடர்ந்து சென்றவேளையில் சற்றுத் தொலைவில் உள்ள வியாபார நிலையத்தில் அதை விற்பனை செய்வதற்காக விலை பேசிக் கொண்டிருந்த வேளையில் சிக்கினார். திருடப்பட்ட பொருள் மீட்கப்பட்டது. திருடியவர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

## சீனாவில் இருந்து வந்தவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைப்பு

கொழும்பு, பெப்.15

"கொரோனா" வைரஸ் தொற்றுக்கு இலக்காகியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தியத்தலாவயிலுள்ள இராணுவ பயிற்சி முகாமில் அமைக்கப்பட்டிருந்த விசேட மருத்துவ அறைகளில் தங்கவைக்கப்பட்டிருந்த மாணவர்களும், அவர்களின் உறவினர்களும் நேற்று அவர்களின் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

கடந்த இரு வாரங்களாக அவர்கள் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தனர். எவரும் 'கொரோனா' வைரஸ் தொற்றுக்கு இலக்காகவில்லை என்பது உறுதியானதையடுத்தே அவர்கள் மருத்துவ கண்காணிப்பில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

'கொரோனா' வைரஸின் பிறப்பிடமான சீனாவின் வுஹான் மாகாணத்திலிருந்து கடந்த பெப்ரவரி முதலாம் திகதி சிறப்பு விமானம் மூலம் அங்கிருந்த இலங்கை மாணவர்களும், அவர்களின் உறவினர்களுமாக மொத்தம் 33 பேர் அழைத்து வரப்பட்டனர். வைரஸ் தொற்று ஏற்படாதவகையில் அனைத்து விதமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

மத்தள விமான நிலையம் வந்த மாணவர்கள் அங்கிருந்து விசேட பஸ்ஸில் தியத்தலாவயிலுள்ள இராணுவ பயிற்சி முகாமுக்கு அழைத்துவரப்பட்டனர். அனைத்து வசதிகளுடன் கூடிய இரண்டு புதிய கட்டடங்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்தன. தனிமைப்படுத்தப்பட்ட அறைகளில் வந்தவர்கள் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

14 நாள்கள் மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் எவருக்கும் வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இலங்கை இராணுவத்தின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் சிறப்பு மருத்துவ நிபுணர்கள், மருத்துவ பரிசோதனைகளை நடத்தினர்.

தியத்தலாவயிலிருந்து நேற்று கொழும்புக்கு அழைத்துச்செல்லப்பட்டவர்கள், இராணுவ தளபதியைசந்தித்து நன்றி தெரிவித்தபின்னர் வீடுகளுக்கு திரும்பினர். (எ-44)

## வைக்கோலுக்கு பெரும் கிராக்கி

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.குடாநாட்டில் வைக்கோலுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தற்போது பெரும் போக நெற்செய்கைக்கான அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், வைக்கோலைப் பலர் கொள்வனவு செய்து வருகின்றனர்.

பெரும்பாலும் கால்நடை வளர்ப்போர் வைக்கோலைப் பெற்றுக் கொள்வதற்கு அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

ஒரு லோட் வைக்கோல் பத்தாயிரம் ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது. வன்னிப்பகுதியில் இருந்தும் வைக்கோல் எடுத்து வரப்பட்டு யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (க-17)

# கச்சதீவு திருவிழாவுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

### 10 ஆயிரம் யாத்திரிகர்கள் எதிர்பார்ப்பு



யாழ்ப்பாணம்,பெப்.15

**கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழாவில், 10 ஆயிரத்துக்கும் அதிகமான யாத்திரிகர்கள் இம்முறை கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

யாத்திரிகர்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட மேலதிக செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகள் தொடர்பானகலந்துரையாடல், யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

மார்ச் மாதம் 6 ஆம் திகதி அதிகாலை 6 மணி முதல், இரவு 10 மணிவரை கச்சதீவுக்குச் செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் தரிப்பிடத்தில் இருந்தும், தனியார் பஸ் தரிப்பிடத்தில் இருந்தும், குறிகாட்டுவானுக்கான போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குறிகாட்டுவானில் இருந்து, கச்சதீவுக்கான படகுச் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குறிகாட்டுவானில் இருந்து, கச்சதீவுக்கான படகு சேவைக் கட்டணமாக, ஒரு வழிக் கட்டணம் 325 ரூபாவும், நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கான கட்டணம் 250 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவில், உணவு மற்றும், சுகாதாரம், உள்ளிட்ட பல்வேறு ஏற்பாடுகள் செய்வதற்கான தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து மற்றும் யாத்திரிகர்கள் தங்குமிட வசதிகள், பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும், கடற்படை பொலிஸார் மற்றும் இராணுவமும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

இம்முறை நடைபெறவுள்ள திருவிழாவில் இந்தியாவில் இருந்து, 3 ஆயிரத்துக்கும் அதிகமான யாத்திரிகர்களும், இலங்கையில் இருந்து 7 ஆயிரம் யாத்திரிகர்களும் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திருவிழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை அனைத்துத் தரப்பினர்களும் இணைந்து செய்துள்ளனர். யாத்திரிகர்கள் எந்தவித அச்சமும் இன்றி, பாதுகாப்பான முறையில்தமது வழிபாட்டில் ஈடுபட முடியும் என்று யாழ்.மாவட்ட மேலதிக செயலர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பொலிஸ் அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், இராணுவத்தினர், அரச மற்றும் தனியார், போக்குவரத்துத் துறைசார்ந்த அதிகாரிகள், சிறைச்சாலை அதிகாரிகள், நீதிமன்ற அதிகாரிகள், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் கலந்து கொண்டனர். (க-106-7)

## வவு. வளாக மாணவருக்கான சான்றிதழ் வழங்கலில் சர்ச்சை

வவுனியா பல்கலைக் கழகம் தனியான பல்கலைக் கழகமாக உருவாக்கிய பின்னர் தற்போதைய மாணவர்களுக்கு வழங்கும் சான்றிதழ் தொடர்பில் கேள்வி எழுப்பப்படுகின்றது.

வவுனியா பல்கலைக் கழக வளாகம் தனியான பல்கலைக் கழகமாக இயங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் சட்ட ரீதியிலான நெருக்கடி நிலைமை சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதாவது தற்போதைய வவுனியா வளாகம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து பிரிந்து, தனியாக அறிவிக்கப்பட்டு ஆரம்பிக்கும் ஆண்டுகளில் தற்போதைய மாணவர்களுக்கான சான்றிதழை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்க முடியாது. அதேநேரம் ஆரம்பித்த ஆண்டுகளில் வவுனியா வளாகமும் வழங்க முடியாது. இதனால் சட்ட ரீதியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமே வழங்கும் வகையிலான சட்ட ரீதியிலான அனுமதிக்கான முன்மொழிவு தயாரிக்கப்பட்டு அதை மானியங்கள் ஆணைக்குழுவின் சிபாரிசுடன் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து, அமைச்சரவையின் அனுமதிபெற்று வர்த்தமானி அறிவித்தலின் மூலமே நடைமுறைப்படுத்த முடியும். விரைவில் இதற்கான ஏற்பாடுகளையும், அதற்குரிய முன்மொழிவுகளையும் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று மானியங்கள் ஆணைக்குழு ஆராய்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-105)

## பதவி உயர்வுடன் இடமாற்றலாகிறார் உதவிச் செயலர்

யாழ்ப்பாணம்,பெப்.15

கரவெட்டிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் ரஜீவ் பதவி உயர்வு பெற்று பிரதேச செயலராக மடுவுக்கு இடமாற்றலாகிச் செல்லவுள்ளார்.

வடக்கில் மிக வேகமாக அதிரடி இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், பதவி பறிப்புக்கள் இடம்பெறும் நிலையில், இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-105)

## வீதியில் சிமெந்து கலவையிட தடை

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டுமானப் பணிகளுக்காக வீதிகளில் சிமெந்து கலவையிடுவது தடை செய்யப்பட்டுள்ளது. தடையை மீறினால் அதன் உரிமையாளருக்குத் தண்டம் விதிக்கப்படும் என்று சாவகச்சேரி நகரசபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் அமர்வு நடைபெற்றது.

கட்டடப் பணிகளில் ஈடுபடுவோர் வீதிகளில் சிமெந்துக் கலவையிடுவதால் வீதியில் செல்வோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். நடுவீதியில் வைத்து சிமெந்து கலவையிடுவதால் வாகனங்கள் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது என்று வரியிறுப்பாளர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இதனால் கட்டடப் பணிகளில் ஈடுபடுவோர் தமது காணிக்குள் சிமெந்து கலவையிட்டு கட்டடப் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். (த - 9)

# அரசியல் தீர்வை எட்டும் வழி விக்கி கூட்டணியிடம் இல்லை

## சிறிதுங்க ஜயசூரிய கூறுகின்றார்



கொழும்பு, பெப்.15
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதுள்ள அதிருப்தியால் மட்டும் அரசியல் நடத்திவிடமுடியாது. தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வென்றெடுப்பதற்கான உறுதியான வேலைத்திட்டம் என்னவென்பதை விக்னேஸ்வரன் தலைமையிலான புதிய கூட்டணி அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

வடக்கிலுள்ள சில தமிழ்க்கட்சிகள் இணைந்து விக்னேஸ்வரன் தலைமையில் 'தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி' எனும் பெயரில் புதியதொரு அரசியல் கூட்டணியை அமைத்துள்ளன.

தமிழ் மக்கள் பேரவை, ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ்த் தேசியக் கட்சி, ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகியன இதில் அங்கம் வகிக்கின்றன. அண்மையில் புரிந்துணர்வு உடன்படிக்கைகூட கைச்சாத்திடப்பட்டது.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே சிறிதுங்க ஜயசூரிய மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பயணம் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலை உருவாகியுள்ளமை உண்மையே. எனினும், இந்த அதிருப்தியை மட்டும் அடிப்படையாகக்கொண்டு புதிய கூட்டணிகளை அமைத்து எதையும் சாதித்துவிடமுடியாது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் விக்னேஸ்வரன் தலைமையில் கூட்டணியொன்று அமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி பாராட்டத்தக்கது. எனினும், தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை வென்றெடுப்பதற்கான உரிய வேலைத்திட்டம் அக்கட்சியிடம் இல்லை என்றே தெரிகிறது. மோடியின் பின்னால் சென்று ஒப்பாரி வைப்பதாலோ, ஐ.நா. மனித உரிமைகள் பேரவை போன்ற சர்வதேச அமைப்புகளிடம் சென்று அழுது புலம்புவதாலோ இனப் பிரச்சினைக்குத் தீர்வை கண்டுவிட முடியாது.

அதற்கான உறுதியான வேலைத் திட்டம் என்னவென்பதை புதிய கூட்டணி அறிவிக்கவேண்டும்.

அதேபோல் வடக்கிலுள்ள அரசியல் கட்சிகள் உரிமை அரசியல் என்பதற்கு அப்பால் தமது இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்கு அரசியல் நடத்த முற்படுவதையே காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்த நிலைமை மாறவேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வென்றெடுக்க வடக்கிலுள்ள கட்சிகளுடன் இணைந்து செயற்பட நாம் தயார்.

எமக்கு அழைப்பு விடுக்கப்படுமானால் அது பற்றி பரிசீலிக்கப்படும். என்றார். (எ-44)

# முன்னணியின் அரசியல் இல்லாமற் போய்விடும்!

## சிறிகாந்தா சீண்டல்



யாழ்ப்பாணம், பெப். 15
தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தான் மாற்றுத் தலைமை என்றும் அதனை மழுங்கடிக்கவே தமிழ்மக்கள் தேசிய கூட்டணி உருவாக்கப்பட்டது என்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்த கருத்தை நிராகரித்த தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிறீகாந்தா எதிர்காலத்தில் முன்னணியின் அரசியல் தானாகவே இல்லாமல் போய்விடும் என்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி உருவாக்கப்பட்டு 24 மணித்தியாலத்திற்குள் தமிழ்க் கட்சிகளிடமிருந்து பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. அவ்வாறான விமர்சனங்களை நாம் எமது கூட்டணிக்கு கிடைத்துள்ள வாழ்த்துக்களாகவே பார்க்கின்றோம். குறிப்பாக தமிழரசுக் கட்சியின் தலைவர் இறுமாப்புடன் எமக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்று தெரிவித்துள்ளார். அதேபோல தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்மை கடுமையாக விமர்சித்துள்ளார்.

தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தவரையில் தற்போதைய சூழ்நிலையில் தமிழ் தேசியக் கட்சிகள் எதிர்கால நலனை கருத்தில்கொண்டு ஒன்றுபட வேண்டும் என்றே நாம் விரும்பினோம். அதனையே நாம் வலியுறுத்தி வந்தோம். அந்த அடிப்படையிலேயே தற்பொழுது நான்கு கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு மாற்றுத் தலைமையை உருவாக்கியுள்ளன. தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரான தாம்தான் மாற்றுத் தலைமையென்றும்அதனை மழுங்கடிக்கவே தமிழ்மக்கள் தேசிய கூட்டணி உருவாக்கப்பட்டது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார். அவ்வாறான எந்தத் தேவைகளும் எமக்கு கிடையாது.

ஏனெனில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் தானாகவே இல்லாமல் போய்விடும். நாம் நாற்காலிகளுக்காக தேர்தலில் போட்டியிடுகிறோம் என்றால் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேர்தலில் முக்காலிக்காகவா போட்டியிடுகின்றது என்பதை நாம் கேட்கவில்லை. ஏனென்றால் நமக்கென்று சில அரசியல் நாகரிகம் உள்ளது. நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ் மக்கள் சரியான முடிவினை எடுப்பார்கள் அது தேர்தலில் நிச்சயமாக வெளிப்படும் என நம்புகின்றோம்தமிழினத்தின் தலைமைப்பதவி தங்களுடைய பரம்பரை என நினைத்துக்கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பை நாசமாக்கிய தமிழரசுக் கட்சி எமது கூட்டணிக்கு எதிராக பல விமர்சனங்களை முன்வைத்து வருகின்றது. ஒற்றுமையின் பெயரால் எம் மீது குற்றங்களை சுமத்தி வருகிறது. நாம்ரெலோவை விட்டு மூன்று தடவை வெளியேறியதாகவும் பின்னர் சேர்ந்ததாகவும் தம்பி ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளர். எனினும் நாம் இம்முறை தீர்க்கமான ஒரு முடிவிலேயே வெளியேறி இருந்தோம். ஏனெனில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு குறிப்பாக தமிழரசுக் கட்சி அரசாங்கத்திற்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றது.

நாம் தமிழ் தேசிய அரசியல் பரப்பில் அனைத்துத் தரப்பும் குறிப்பாக தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைய வேண்டுமென வலியுறுத்தி வந்தோம். அந்த நிலைப்பாட்டிலேயே தற்போதும் உள்ளோம் - என்றார். (ம-20)

# மதமாற்றத் தடைச் சட்டத்தை தடுத்து வருபவர் சுமந்திரனே!

## மறவன்புலோ சச்சி குற்றச்சாட்டு

மதமாற்றத் தடைச்சட்டத்தைக் கொண்டு வரவிடா மல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனே தடுத்து நிறுத்துகின்றார் என்று சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலோ சச்சிதானந்தம் குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் ஊடகவியலாளர் சந்திப்பு நடந்தது. இதன்போது அங்கிருந்த ஊடகவியலாளர்களால் மதமாற்றத் தடைச்சட்டம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மதமாற்ற தடைச்சட்டம் தேவை என்பதை நாங்கள் தொடர்ந்து கோரி வருகின் றோம். நாடாளுமன்றத்தில் அந்தச் சட்டத்தை நிறை வேற்ற முன் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றியி ருக்கலாம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்த வடக்கு மாகாணசபையின் மதமாற்ற சட்டத்தை நிறைவேற்றி நடைமுறைப்படுத்துமாறு கோரினேன். ஆனால் எனது கோரிக்கை மறுக்கப்பட்டது. அதை மறுத்தவர் வேறு யாரும் இல்லை. சைவராக உள்ளவரும், இப்போதும் வடமாகாண சபையின் பேரவைத் தலைவராக உள்ள சி.வீ.கே.சிவஞானம் தான் அதற்கு மறுப்புத் தெரிவித்தார். மதமாற்றத் தடைச்சட்டம் என்பது தமிழர்களின் முன்னுரிமையான விடயம் இல்லை என்றும் சி.வீ.கே.சிவஞானம் என்னிடத்தில் நியாயப்படுத்தியும் இருந்தார். மதமாற்ற தடைச்சட்டம் வடமாகாணத்தில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்என்றமாதிரிவரைவையும் நான் பேரவைத் தலைவரிடம் கொடுத்திருந்தேன். அதனையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

இங்கு மதமாற்றத் தடைச்சட்டத்தை வரவிடாமல்தடுத்து, மதமாற்றத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனே.

இலங்கையில் மெதடிஸ்த சபை என்ற ஒன்று உள்ளது. அதற்கு உட்பட்ட அதிக தேவால்யங்கள் இங்கு உள்ளன. அந்தச்சபையின்துணைத் தலைவராக சுமந்திரனே பதவி வகிக்கின்றார். 2018 ஆம் ஆண்டின் மெதடிஸ்த சபையின் ஆண்டறிக்கையை சுமந்திரனே எழுதியிருந்தார். அந்த அறிக்கையில்; நாங்கள் இந்த ஆண்டில் மதமாற்றத்தை வேகமாக எடுத்துச் செல்ல முடியவில்லை. சிவசேனை தொண்டர்கள் வந்து தடுக்கின்றார்கள். தெருவிலே எங்களைப்போக விடுகின்றார்கள் இல்லை. கல்லால் அடிக்கின்றார்கள். ஓடஓட விரட்டுகிறார்கள் என்று அதில் சுமந்திரன் எழுதியுள்ளார்.

சுமந்திரனின் தனது வருவாய் பற்றிய அறிக்கை ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அந்த அறிக்கையில் எனது மனைவியான சாவித்திரி சுமந்திரனின் வருவாய் ஆயிரத்து 100 டொலர் என்று தகவல் கொடுத்திருந்தார். அந்த வருமானத்தை ஐ.எவ்.இ.எஸ் என்ற நிறுவனமே சுமந்திரனின் மனைவிக்குக் கொடுக்கின்றது.

இலங்கைப் பணத்தின் மதிப்பில் 2 இலட்சம் ரூபாவை மதமாற்றம் செய்வதற்காகவே அந்த நிறுவனம் சுமந்திரனின் மனைவிக்குக் கொடுக் கின்றது. இந்த நிலையில் எவ்வாறு வடக்கு மாகாண சபையில்மதமாற்றதடைச்சட்டம் கொண்டு வரப்படும். மத மாற்றத் தடைச்சட்டம் வருவதை பௌத்தர்கள் தடுக்கவில்லை. அவர்கள்அந்தச்சட்டத்தை கொண்டுவர விரும்புகின்றார்கள் - என்றார். (ம-20)

## விமானச் சிட்டை முகவர்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,பெப்.15
யாழ்ப்பாணம் விமான நிலையம் ஊடாகப் பயணிக்கும் பயணிகளிடம் அதிகரித்த கட்டணம் அறவிடப்படுவது தொடர்பில், குடாநாட்டில் இயங்கும் விமானச் சிட்டை விற்பனை முகவர்களை, சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகள்சந்திக்கவுள்ளனர்.

எதிர்வரும் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திப்பு நடைபெறவுள்ளது என்று யாழில் இயங்கும் விமானச் சிட்டை விற்பனை முகவர்களுக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிக்கும் பயணிகளிடம் இருந்து அதிக பணம் அறவிடப்படுவதாகத் தொடர்ந்தும் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளால் தனித்தனியாக ஆய்வுகள்மேற்கொள்ளப் படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (க-105)

## மெய்ஞ்ஞானத்துடன் விஞ்ஞான சங்கமம்

### கொக்குவிலில் 22இல் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 15
மனவளக் கலை தலைமையகம் நடத்தும் அறிவுத் திருக்கோவில் அகவை நான்கில் மெய்ஞ் ஞானத்துடனான விஞ்ஞான சங்கமம் நிகழ்வு கொக்குவிலில் அமைந்துள்ள அறிவுத் திருக்கோவிலில் 22ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மனித குலத்துக்கு அளிக்கவென்று 40 ஆண்டுகளுக்கும் மேலாக ஆராய்ச்சிசெய்து விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஏற்றுக்கொண்டவையே வேதாத்திரி மகரிஷி மனவளக்கலை யோகா பயிற்சிகள்.

மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், பேராசிரியர் வி.சொக்கலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(த-105)

### பொருளாதார வளர்ச்சி எனும் பெயரில்

# தமிழர் தாயகம் இனி சிங்களவர் மயமாகும்

### கஜேந்திரகுமார் இடித்துரைப்பு



யாழ்ப்பாணம், பெப். 15
பொருளாதார வளர்ச்சி எனும் பெயரில் இனி வரப்போகின்ற ஐந்து வருட காலமும் தமிழர் தாயகத்தை சிங்கள மயமாக்கலுக்கான அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெறப்போகின்றன இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வேம்படி உடுத்துறை முத்தமிழ் சன சமூக நிலைய மண்டபத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் வடமராட்சி கிழக்கு கலாசார பேரவையும் இணைந்து நேற்றுமுன்தினம் நடத்திய பண்பாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-
பொருளாதார வளர்ச்சி எனும் பெயரில் இனி வரப்போகின்ற ஐந்து வருட காலத்தில் சிங்கள மயமாக்கலுக்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இதில் முற்றுமுழுதாக பாதிக்கப்படப்போவது கடற்றொழிலாளர்களே. ஏனெனில் வடக்கு கிழக்கின் மிகப் பெரிய பொருளாதாரம் மீன்பிடியே. ஆகவே இதனை மட்டுப்படுத்தினால் தமிழர் பொருளாதாரம் முடக்கப்படும் எனும் நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது. எம்மைப் பொறுத்தவரை இந்தச் சவாலுக்கு முகம் கொடுப்பதற்கு மிகப்பெரிய பலம் எமது புலம் பெயர் சமூகம். ஸ்ரீலங்கா அரசு 35 வருட யுத்தத்தை முடிப்பதற்காக பெற்ற கடன்களை திரும்ப செலுத்த முடியாது மூழ்கிப்போய் இருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசு தாம் பெற்ற கடனின் வட்டியை வருடா வருடம் கட்டமுடியாத நிலைக்கு வந்துள்ளதாக அண்மையில் சர்வதேச நாணய நிதியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்தளவுக்கு ஸ்ரீலங்கா அரசு பொருளாதாரத்தில் நலிவடைந்துள்ளது. புலம் பெயர் நாடுகளில் உள்ள 10 ல்ட்சம் மக்களும் உழைக்கின்ற ஒரு ரூபா இங்கு இருநூறு ரூபாவாக மாறுகிறது. அவர்களுக்கு கடன் கிடையாது. அவர்கள் உழைக்கின்ற பணம் இலங்கை அரசின் வருமானத்திற்கு சமம் அல்லது அதற்கு அதிகமானது. இந்தளவுக்கு எமக்கு மிகப் பெரிய பலம் உள்ளது. எமக்குக் கைகொடுக்க அவர்களால் முடியும். ஆனால் அதனை செய்வதற்கு ஒரு வியூகம் இருக்க வேண்டும். ஒரு திட்டம் இருக்க வேண்டும். தேசிய உணர்வு இருக்க வேண்டும். இந்தத் தேசம் தொடர்ந்து நின்று பிடிக்க வேண்டும் என்கின்ற ஒரு கொள்கை இருக்க வேண்டும், அந்த அனைத்தையும் கொண்ட ஒரே தரப்பு தமிழ் தேசிய மக்கள் முன்னணி மட்டுமே.

எங்களுடைய கலை கலாசாரம் என்பன எல்லாம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. தமிழ் தேசத்துடைய அடையாளம் நின்று பிடிப்பதாக இருந்தால் இந்த கலாசாரம் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும். எந்தளவு தூரத்துக்கு எமது பொருளாதாரத்தை காப்பாற்றுகிறோமோ அந்த அளவுக்கு இந்த கலாசாரத்தை காப்பாற்ற வேண்டும். இனி வரப்போகின்ற ஐந்து வருட காலம் மிகப்பெரும் சவாலாக இருக்கப்போவது மட்டுமல்ல எங்களுடைய கடைசி ஐந்து வருடமாகக்கூட இருக்கலாம் என்றார்.

மேற்படி நிகழ்வு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சிக் கிழக்கு அமைப்பாளர் இரத்தினசிங்கம் முரளிதரன் தலைமையில் நடைபெற்றது. தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் சி.காண்டீபன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் பிரிவு பொறுப்பாளர் திருமதி கிருபா மற்றும் கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (மு-160)

## கிளிநொச்சி மருத்துவமனைக்கு நரம்பியல் மருத்துவ நிபுணர்

கிளிநொச்சி, பெப். 15
கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு வரலாற்றில் முதற்தடவையாக நரம்பியல் மருத்துவ நிபுணர் ஒருவர்நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் நரம்பியல் சார்ந்த பிரச்சினைகளுக்கு, சிகிச்சைகளுக்கு நோயாளர்களை யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு அல்லது வவுனியா மருத்துவமனைக்கு அனுப்பும் நிலை காணப்பட்டது. இனி கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையிலேயே அது பற்றிய சிகிச்சைகளை நோயாளர்கள் பெற்றுக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-214)

## கிராமத்துக்கு தகவல் உரிமை நடமாடும் சேவை

வவுனியா,பெப்.15
கிராமத்துக்குத் தகவல் உரிமை நடமாடும் சேவை வவுனியா நகர சபை உள்ளக மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. வெகுசன ஊடகத்துறை அமைச்சு மற்றும்'பவ்ரல்'இளைஞர்அமைப்பு என்பன ஒன்றிணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடுசெய்திருந்தன. இதில் தகவல் சட்டம் தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்தல் மற்றும் அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனை வழங்கல் என்பன நடைபெற்றன.

'பவ்ரல்' இளைஞர் வலையமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரவீந்திர டீ சில்வா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக செயலர் தி. திரேஸ்குமார், ஊடக அமைச்சின் உதவி செயலாளர் எம்.பி பண்டார மற்றும் ஊடக அமைப்பின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஜ -18)

## விமானச் சிட்டை விற்பனை நிலையங்களில் பரிசோதனை

யாழ்ப்பாணம்,பெப்.15
யாழ். குடாநாட்டில் இயங்கும் விமானச் சிட்டை விற்பனை நிலையங்கள், சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் தற்போது 22 விமான நிலைய சிட்டை ஏற்பாடு அல்லது விற்பனை நிலையங்கள் இயங்கும் நிலையில், அவற்றில் 6 விற்பனை நிலையங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 3 விற்பனை நிலையங்கள் கொழும்பில் பதிவு செய்யப்பட்ட நிலையில், அதன் கிளை நிலையங்கள் யாழ்ப்பாணத்திலும் இயங்குகின்றன.

சட்ட பூர்வமான அனுமதியுடன் 9 நிறுவனங்கள் மட்டுமே உள்ள நிலையில், ஏனைய 13 நிலையங்களும் பதிவு செய்யப்படாமல் இயங்குகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

அதனால் அனுமதி இன்றிச் செயல்படுபவர்கள் விரைவில், அதற்கான அனுமதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அல்லது தொடர்ந்தும் இயங்க அனுமதிக்கப்பட மாட்டாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-105)





## 132 ஆவது வருடத்தில் கலைமகள் வித்தி.

வவுனியா,பெப்.15
நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் 132 ஆவது பிறந்த தினத்தை நேற்றுக்கொண்டாடியது.

வித்தியாலய அதிபர் கதிரேசு சிவநாதன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் விசேட விருந்தினராக மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் கலந்து கொண்டார்.

1888 ஆம் ஆண்டு இதே தினத்தில் நாகமணி உடையாரால், நெளுக்குளம் வித்தியாலயம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. 1962 ஆம் ஆண்டு நெளுக்குளம் அ.த.க. பாடசாலை எனவும், 1972 ஆம் ஆண்டு நெளுக்குளம் உயர்தர வித்தியாலயம் எனவும், 1990 ஆம் ஆண்டு நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் எனவும் பெயர் மாற்றப்பட்டது.

தேசிய, சர்வதேச சாதனைகள் கொண்ட இந்தப் பாடசாலை, பல துறைகளிலும்சிறந்துவிளங்குகிறது என்று அதிபர் நிகழ்வில் தெரிவித்தார். (க-222)

# மாற்றுத்தலைமையால் கூட்டமைப்புக்குப் பீதி

## சொல்கிறார் சுரேஸ்

யாழ்ப்பாணம், பெப். 15

தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பு என்ற புதிய மாற்றுத்தலைமையைக் கண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பலர் அஞ்சுகின்றார்கள் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பு என்ற புதிய முன்னணி ஒன்று உருவாகிய பின்னர் சில விமர்சனங்கள் அல்லது குற்றச்சாட்டுக்கள் போன்றவை முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர இந்த புதிய கூட்டணித் தொடர்பில் சிலர் அச்சம் கொண்டுள்ளமையையும் எங்களால் பார்க்கக் கூடியதாக உள்ளது.

குறிப்பாக தமிழரசுக் கட்சியின் தலைவராக உள்ள மாவை சேனாதிராசா இதுதொடர்பில் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். குறிப்பாக நாங்கள் மக்களுடைய வாக்குகளைப் பிரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் என்றும், இதனால் எந்தப் பயனும் வரப்பேவதில்லை என்றும் கூறியுள்ளார்.

வாக்குகள் பிரிந்தால் தமக்கு கிடைக்கும் ஆசனங்கள் கிடைக்காமல் போய்விடும் என்ற பிரச்சினையே தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு ஏற்பட்டுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த காலங்களில் விட்ட தவறுகளைப் பற்றி சிந்திப்பதை விட ஆசனங்கள் தங்களை விட்டுப் போய்விடக் கூடாது என்பதில் மிகக் கவனமாக உள்ளார்கள்.

பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குதற்கும், வடக்கு கிழக்கு இணைப்பைக் கைவிட்டும், சமஷ்டியைக் கைவிட்டும், அரசாங்கத்தை முழுமையாகப் பாதுகாக்கும் நடவடிக்கையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

இதனாலே மாற்றுத் தலைமை என்ற ஒன்றின் உருவாக்கம் தேவைப்பட்டது. 2017 ஆம் ஆண்டே இந்த மாற்றுத்தலைமை பற்றிப் பேசப்பட்டுவந்தது. அப்போதுகூட தாங்கள்விட்ட தவறைத் திருத்திக் கொண்டு, எல்லோரையும் இணைத்து சரியான பாதையில் போவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு தவறிவிட்டது.

மிக நீண்டகாலமாகப் போராடி, பல இலட்சம் மக்கள் உயிர் தியாகம் செய்து குறைந்தபட்சம் ஒன்றுபட்ட நாட்டுக்குள் தீர்வைப் பெற்றுக் கொடுக்காமல், வெறுமனே அரசைப் பாதுகாத்துக் கொள்வதன் மூலம் தங்களுக்குத் தேவையான சலுகைகளைப் பெற்றுக் கொள்வதைத்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் செய்தார்கள்.

இதைத்தான் கடந்த நான்கரை வருடங்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தொடர்ந்து செய்து வந்தது. இதனால்தான் இன்று மாற்று அணி ஒன்று உருவாகியுள்ளது. இந்த மாற்று அணி நிச்சயமாக தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிப் பயணிக்கும். இது குறித்து இந்தியாவுடன், மட்டுமல்லாமல் அமெரிக்க, பிரித்தானிய நாடுகளுடனும் பேசி அதற்கான நடவடிக்கைளை முன்னெடுப்போம்-என்றார். (ம-20)

# மெய்வன்மைப் போட்டி

சாவகச்சேரி,பெப்.15

சாவகச்சேரி நாமகள் முன்பள்ளி யின் இல்லமெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிராம அலுவலர் மகாலிங்கம் அமலதீபன் தலைமையில் நடை பெறவுள்ள போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் கலந்து கொள்ளவுள்ளார்.

# சட்ட நடைமுறையை பின்பற்றாது கிளிநொச்சியில் தொங்கு பாலம்!

## தேசிய கணக்காய்வு அலுவலக விசாரணை அறிக்கையில் தகவல்

கிளிநொச்சி, பெப்.15

கிளிநொச்சி, பசுமைப் பூங்காவில் கரைச்சிப் பிரதேச சபையால் அமைக்கப்பட்டுள்ள தொங்குபாலம் சட்ட விதிமுறை களுக்கு உட்படாது அமைக்கப்பட்டுள்ளது என்று தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தத் தொங்கு பாலம் தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின் பிரதி கிளிநொச்சி உள்ளூராட்சித் திணைக்களத்தில் தகவல் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டது. அதன்போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் மேற்கொண்ட விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

தொங்கு பாலத்தின் வேலைகள் நிறைவேற்றப்பட்டபோதும் 1986 ஆம் ஆண்டு வர்த்தமானி அத்தியாயம் vii இன் 169 -173 பிரிவு களில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக செலவு மதிப்பீட்டுகள் எதுவும் மேற்கொள்ளப்படாது பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

வடக்குமாகாணசபையின் 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதிய NP/09/FRM/CIR2017 இலக்கச் சுற்றறிக்கை PF/06/ 2015(1) படி பிரதேச சபைகள் பிரிவு பெறுகைகள் குழுவின் கீழ் ஆகக் குறைந்தது மூன்று கூறுவிலை கோரல் பெறப்பட்டிருக்க வேண்டும் என்ற நடைமுறை தொங்கு பாலம் அமைக்கப்படுவதில் நடைபெறவில்லை.

2019. 12.30 திகதி கடிதத்தில், இறைமகன் ஒட்டுத் தொழிற்சாலை உரிமையாளர் 2019 நவம்பர் 16 ஆம் திகதியிலிருந்து 2019 டிசெம்பர் 30 ஆம் திகதிவரை கரைச்சிப் பிரதேச சபையுடன் எந்தவித வேலை உடன்படிக்கையும் இன்றி 18 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதிக்கு சபையின் வேண்டுகோளுக்கு அமைய தன்னால் வேலைகள் செய்யப்பட்டன என எழுத்து மூலம் தெரிவித்துள்ளார்.

1985 ஏப்ரல் 15 ஆம் திகதிய வர்த்தமானிக்கு அமைய இதில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. திணைக்கள நடவடிக்கைக்கு அமைவாக மூலதன வேலை ஒன்றை மேற்கொள்ள வேண்டுமாயின் வருடப் பாதீட்டில் அது உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கரைச்சிப் பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் தொங்கு பாலம் உள்ளடக்கப்படவில்லை-என்றுள்ளது.

தொங்கு பாலம் அமைத்து முடிக்கும் வரை கரைச்சிப் பிரதேச சபையால் எந்தவித சட்ட நடைமுறைகளுக்கும் உட்படாது பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (எ-214)



## Building space for commercial activities at New Market, Jaffna.

New Market building at Jaffna town belongs to Jaffna Municipal Council (JMC) has two bigger space open areas (2/ 70'x 40')at the first floor. Those may be utilized for any commercial activities by the successful bidder and could be allowed to the bidder to fix the necessary fittings and other connected improvements works with the approval of the JMC administration. Rental period may be five years from the date of agreement signed, considering with the past performances of the selected bidder. The basic expected rental rate for each block is 0.75 Mn per month.

In these connections, interested bidders are kindly requested to submit their proposal along with the monthly rental rate and any other offers through the self-prepared sealed document on or before 06.03.2020. The terms and conditions of JMC are applicable in all steps under these selection processes.

**The Chairman,**
**Procurement Committee,**
**Jaffna Municipal Council,**
**Pointpedro Road,Jaffna.**
**14.02.2020**

## Public Toilets Cleaning Services within the Jaffna Municipal Areas

Jaffna Municipal Council is expected from eligible qualified service providers to undertake the above mentioned cleaning services from 6.00am to 10.00 pm at the following locations.

- Eight toilet compartments in New Market, Jaffna.
- Three toilet compartments in Sinnakadai market,Jaffna.

It is expected to be cleaned at accepted very high quality level during the service time. In these connections, interested bidders are kindly requested to submit their daily cleaning rates including other offers for these cleaning services in a closed document on or before 06.03.2020. The terms & conditions of JMC are applicable in all steps under these selection processes.

**The Chairman,**
**Procurement Committee,**
**Jaffna Municipal Council,**
**Pointpedro Road, Jaffna.**
**14.02.2020**

## பனைமட்டைகளை விற்றுத்தீர்த்தல்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பனை மரங்களில் இருந்து வெட்டிய கற்றப்பட்ட பனை மட்டைகளை விற்றுத்தீர்ப்பதற்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது அண்ணளவாக 4,000 எண்ணிக்கையான பனை மட்டைகள் இக்குறித்த ஏலத்தில் விற்பனை செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் கூடிய அலகு விலை கோரும் கேள்விதாரருக்கே பனைமட்டைகள் விற்கப்படும் என்பதனைத் தெரியப்படுத்த விரும்புகின்றேன். குறித்த ஏல விற்பனை எதிர்வரும் 06.03.2020 அன்று யாழ். மாநகரசபை வளாகத்தில் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெறும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை,யாழ்ப்பாணம்.** **14.02.2020.**

## பழைய இரும்பினை விற்றுத்தீர்த்தல்

மாநகரசபையின் வேலைத்தலத்தில் பயன்படுத்திக் கழிக்கப்பட்ட பழைய இரும்புகளை விற்றுத்தீர்ப்பதற்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது அண்ணளவாக 5,000 Kg அளவுள்ள இரும்புகள் இக்குறித்த ஏலத்தில் விற்பனை செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் கூடிய அலகு விலை கோரும் கேள்விதாரருக்கே இரும்பு விற்கப்படும் என்பதுடன் அதன் மொத்த நிறை நிறுப்பதனூடாக தீர்மானிக்கப்படும் என்பதனையும் தெரியப்படுத்த விரும்புகின்றேன். குறித்த ஏல விற்பனை எதிர்வரும் 06.03.2020 அன்று யாழ். மாநகரசபை வளாகத்தில் முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெறும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை,யாழ்ப்பாணம்.** **14.02.2020.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அரங்கேறும் ஆறப்போடுதல்கள்

வெட்ட வெட்டத் தழைக்கும் அசுரர்களின் தலைபோல, மாறி மாறி பகிடிவதை பற்றிய தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. சில நாட்களுக்கு முன்னர் கிளிநொச்சி வளாக புகுமுக மாணவர்களுக்கு, வட்ஸப்பில் பாலியல் ரீதியாக இம்சை கொடுத்த சிரேஷ்ட மாணவர்கள் குறித்த தகவல்கள் வெளிவந்து பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தன. அதுகுறித்த ஆரம்ப விசாரணைகள் 'ஜெட்' வேகத்தில் நடைபெற்று , குற்றம் செய்தார்களெனச் சந்தேகிக்கப்படும் சிலருக்கு வகுப்புத்தடையும் விதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அதன் பின்னர் விசாரணைகள் மிக மந்தமாகவே நடைபெறுவதாகப் பாதிக்கப்பட்டோர் விசனிக்கின்றனர்.

அதேவேளை இந்த விவகாரத்தை மெல்ல இழுத்தடித்துவிட்டு, அப்படியே கைவிடும் வேலையும் நடக்கின்றதோஎன்னுமளவுக்கும்சிலகாரியங்கள்திரைமறைவில் நடந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் அது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை என்ற காரணத்தைக் காட்டியே, விசாரணைகள் ஆறப்போடப்பட்டிருப்பதாகத் தகவல். இன்னொரு பக்கத்தில் வகுப்புத்தடை விதிக்கப்பட்ட மாணவன் ஒருவனின் வீட்டுக்குள் புகுந்து தாக்கிய ஆவாக்கும்பல் , தனக்கு நல்லபேரைத் தேட முனைந்திருக்கிறது. இதுவரை மக்களால் வெறுக்கப்பட்ட ஆவாக்கும்பலை, சட்டென மக்கள் நல்லவிதமாக நினைக்க வைத்தமைக்கு முக்கிய காரணம், பகிடிவதை பற்றிய விசாரணைகளின் தாமதமும், தண்டனைகளின் தளர்வும் தான். குற்றம் செய்தவர்களை நோகாமல் அடிப்பது போல பாவனை செய்து கொண்டு, விசாரணைகளையும் இழுத்தடித்தால், மக்கள் அதை மறந்துவிடுவார்கள் என்று பல்கலைக்கழகத்தினர் எண்ணுகின்றனர் போலும். ஆனால் அப்படி குற்றம் செய்த மாணவர்களைக் காக்க முயல்வதும் , குறைந்தளவான தண்டனைகளை வழங்குவதும் , இனியும் குற்றம் செய்ய நினைப்பவர்களுக்கு குளிர்விட்டு போகச் செய்வதாகவே இருக்கும்.

அதை நிரூபிப்பது போல, இன்னொரு பகிடிவதை பற்றிய தகவலும் இப்போது வெளிவந்திருக்கிறது. பகிடிவதையைத் தாங்க முடியாத புகுமுக மாணவன்" இனியும் என்னால் பொறுக்க முடியாது. நான் தற்கொலை செய்யப்போகிறேன்" என்று கதறி அழுதிருக்கிறான். குறித்த மாணவன் மீது பகிடிவதை புரிந்தவர், பல்கலையில் உள்ள ஒரு பீடத்தின் மாணவர் ஒன்றியத்தின் முக்கியமான பொறுப்பில் உள்ளவர் என்றும் சொல்லப்படுகின்றது. தன்னை விசாரிக்க வந்த பல்கலைக்கழக அதிகாரியிடமும், அவர் தன் திமிரைக் காட்ட முற்பட்டு விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்துள்ளார். ஒரு மாணவர் ஒன்றியத்தின் முக்கியமான பொறுப்பில் உள்ளவர் என்பதால் , அதிகாரியும் பொறுமை காத்துவிட்டு, இப்படிப்பட்டவர்களைம் மேய்க்க முடியாதென பதவி விலகல் கடிதத்தையும் கொடுத்துள்ளார்.இனி, இந்தச் சம்பவமும் பரபரப்பாகப் பேசப்பட்டு, பின்னர் அடங்கிவிடும்.அதன் பின்னர் இன்னொரு இடத்தில் இன்னொரு விதத்தில் ராக்கிங் என்ற ஒக்டோபஸ் தன்னுடைய இன்னொரு வேலையைக் காட்டும். அப்போதும் இதேபோல, ஆறப்போடலும், மூடிமறைப்புமே அரங்கேறும்.

தாய்மார் சிலர் தங்கள் பிள்ளைகள் என்ன செய்தாலும் அதனை மூடிமறைப்பதிலேயே குறியாக இருப்பார்கள். அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, பிள்ளையின் மீதுள்ள பாசம். இரண்டாவது, பிள்ளை செய்த பிழை வெளியே தெரிய வந்தால் குடும்ப மானம் போய்விடும் . பகிடிவதை விடயத்தில் பல்கலைக்கழக மானம் போய்விடக் கூடாது என்பதற்காகவே இப்படிப் மூடி மறைக்கிறார்கள். ஆனால், ஆயிரம் கரங்கள் மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லை என்பது போல, என்னதான் பகிடிவதை அசிங்கங்களைப் பல்கலைக்கழக நிர்வாகம் மூடி மறைத்தாலும் அது எப்படியோ வெளியே வரத்தான் போகின்றது. எனவே இனியாவது இழுத்தடிப்பு, ஆறப்போடப்படும் விசாரணை, மூடிமறைப்பு என்று குருட்டாட்டம் ஆடாமல், வெளிப்படைத்தன்மையோடு பகிடிவதை விடயங்களைக் கையாண்டால், அதனை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்த முடியும். ஆனால் அவர்கள் அதனைச் செய்தால் தானே..?

நாடு திரும்பிய ராஜபக்சக்களின் உறவினர்

# உதயங்கவீரதுங்க சி.ஐ.டியால் கைது!

கொழும்பு, பெப். 15

சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரும் ராஜபக்ச குடும்பத்தின் உறவினருமான உதயங்க வீரதுங்க நேற்று நாடு திரும்பிய நிலையில் கைது செய்யப்பட்டார்.

ரஷ்யாவில் தூதுவராக இருந்த வேளையில் மிக் ரக விமானக் கொள்வனவின்போது நிதி மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுக்கமைய கடந்த ஆட்சியில் அவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது. வழக்கு விசாரணையை எதிர்கொள்ள அவர் இலங்கைக்கு வரவில்லை. உக்ரெய்னில் சில காலம் தங்கியிருந்த அவர் பின்னர் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் தங்கியிருந்தார். இதையடுத்து அவர் மீது சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்துக்கும் இடையில் கைதிப் பரிமாற்ற உடன்பாடு இல்லாமை காரணமாக அவரை இலங்கை அரசால் நாடு கடத்துமாறு கோர முடியாமல் இருந்தது.

இந்தநிலையில், அவர் நேற்றுக் காலை மஸ்கட்டில் இருந்து வந்த விமானத்தில் இலங்கை வந்தார். கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அவரைக் கைதுசெய்தகுற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், விசாரணைகளை மேற்கொண்டனர். விசாரணைகளின் பின்னர் அவர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை நாளை மறுதினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ.5,22)

## புதையல் அகழ்வு: இருவர் கைது

வவுனியா, பெப்.15

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் புதையல் தோண்டினர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் போராளி உட்பட இரண்டு பேரை கனகராயன்குளம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை புதையல் தோண்டுகின்றனர் என்று கிடைத்த தகவலின்படி அங்கு சென்று அவர்களைக் கைது செய்தோம் என்றும் அவர்களில் ஒருவர் முன்னாள் போராளி என்றும்பொலிஸார்தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து நிலத்தைத் தோண்டுவதற்குப் பயன்படும் பிக்கான், அலவாங்கு மற்றும் பூசணிக்காய் போன்றன மீட்கப்பட்டுள்ளன என்றும் விசாரணையின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (கு-110)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் கிழக்கு முக்கியஸ்தர் கூட்டமைப்புடன்இணைவு

மட்டக்களப்பு, பெப். 15

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியுடனான தனது செயற்பாடுகள் அனைத்தையும் நிறுத்தியுள்ளதாக கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் அந்தக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான இரா.துரைரத்தினம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரையில் அமைந்துள்ள அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கில் வாக்குகள் பிரியக் கூடாது என்பதற்காக கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களின் போது, கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டேன். எதிர்காலத்திலும் இடம்பெறவுள்ள அனைத்து தேர்தல்களின் போதும் ஏனைய முடிவுகளிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக்



கூட்டமைப்புடன் இணைந்து செயற்படவே விரும்புகின்றேன். அதற்காக என்னையும் ஒரு குழுவாக இணைத்துக் கொள்ளுமாறுகூட்டமைப்பிடம் கோரியுள்ளேன். எனது இந்த முடிவுக்கும் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை, என்றார்.

இதேவேளை கட்சியின் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தனை உதயன் தொடர்பு கொண்டு கேட்டபோது, உத்தியோகபூர்வமாக அவர் எதனையும் அறிவிக்கவுமில்லை. இது சம்பந்தமாகக் கட்சியுடன் அவர் எந்தக் கலந்துரையாடல்களையும் இதுவரை மேற்கொள்ளவில்லை - என்றார். (ஒ.ந)



பூநகரி - பரந்தன் வீதியில் நேற்று கப் ரக வாகனம் ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. வாகனத்தின் சக்கரத்தில் காற்று வெளியேறிய தால் கட்டுப்பாட்டை இழந்து வாகனம் தடம்புரண்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## கூட்டம்

கொழும்புத்துறை,பெப்.15

யாழ்ப்பாணம் மறை மாவட்ட கத்தோலிக்க அரச மற்றும் திணைக்களங்களில் பணியாற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ள கத்தோலிக்க பதவிநிலை பணியாளர்களைக் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாண மறை மாவட்ட பொது நிலையினர் கழகம் கேட்டுள்ளது. (ஐ-135)

உ
சிவமயம்


சைவத் தமிழ்ச் சங்கம்
அருள்மிகு சிவன் கோவில்

# அற்றார் அழிபசி தீர்த்தல் - 2020

நாள் : 03.05.2020 ஞாயிற்றுக்கிழமை
Sporthalle Unterrohr
UNTERROHRSTRASSE2, 8952 SCHLIEREN, ZÜRICH

சிவன் TV HD சிவன் தொலைக்காட்சியின்
பேராதரவில்

# குறும்படப் போட்டி



படத்தின் கருப்பொருளாக பின்வருவனவற்றில் ஒன்றேனும் இடம் பெறல் வேண்டும்

* தமிழைக் காப்போம்
* சைவத் தமிழ்
* அற்றார் அழிபசி தீர்த்தல்
* பிளாஸ்டிக் உயிர்க்கொல்லி
* ஈழ மண்ணின் விவசாயி
* போதைவந்து உன்னைக் கொல்லும்
* தொடர் நாடகங்களும் தொடர்பறுந்த குடும்பங்களும்
* இயற்கை உணவு
* இயற்கையைப் போற்றுவதும் பாதுகாப்பதும் இறையம்சமே
* அகதித் தமிழர்
* தமிழா என்னசெய்யப் போகிறாய்?

* ஒருவர் எத்தனை படங்களையும் தயாரித்து அனுப்பலாம்.
* போட்டிக்கு அனுமதிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
* தங்கள் படைப்பில் சமயங்களை அல்லது தனிநபரை இழிவுபடுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.
* தாங்கள் தயாரிக்கும் படங்களை போட்டி முடிவுறும்வரை (03.05.2020) தொலைக்காட்சிகளில் அல்லது சமூகவலைத்தளங்களில் வெளியிடக்கூடாது.
* நேரம் 30 நிமிடத்திற்குள் இருத்தல் வேண்டும்
* தேர்வுக்குழுவினால் தெரிவுசெய்யப்படும் ஐந்து படங்கள் நிகழ்விலன்று திரையிடப்படும்.
* நிகழ்விலன்று பார்வையாளர்களின் வாக்குகளும் சேர்த்துக்கொள்ளப்படும்.

படைப்புகள் கிடைக்கப்பெறவேண்டிய இறுதித்திகதி: 14.04.2020

சைவத் தமிழ்ச் சங்கத்தினால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் அற்றார் அழிபசி தீர்த்தல் நிகழ்வை முன்னிட்டு இவ்வருடம் ஈழத் தமிழ்க் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக குறும்படப்போட்டி நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்போட்டிக்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைக்கு அமைவாக உலகின் எப்பாகத்திலிருந்தும் ஈழத்தமிழர்கள் பங்குபற்றலாம்.

முதலாம் இடம்: 1000.- CHF
இரண்டாம் இடம்: 750.- CHF
மூன்றாம் இடம்: 500.- CHF

தொடர்புகட்கு :
SAIVA THAMIL SANGAN
Industriestrasse 34, 8152 Glattbrugg, Switzerland.
0041 78 819 31 09 film@sivankovil.ch



# தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)

# 50 ஆவது ஆண்டு நிறைவு விழா

(1969 - 2019)


இடம் : வவுனியா நகரசபை கலாசார மண்டபம்.
காலம் : 16.02.2020 ( ஞாயிற்றுக்கிழமை )
நேரம் : மாலை 3.00 மணி

## ஐம்பது ஆண்டுகள் கடந்த ஆயுத, அரசியல் விடுதலைப் பயணம்.

அடைந்திடும் பாதைகள் மாறினும் - கொண்ட இலட்சியங்கள் மாறுவனவல்ல.



" நாம் வன்முறை மீது காதல் கொண்டவர்களோ அது போன்ற நோயினால் பாதிக்கப்பட்ட மன நோயாளிகளோ அல்லர் மாறாக ஒரு இனத்தின், தேசத்தின் விடுதலைக்காகப் போராடும் உண்மையான போராளிகள் "
- ரெலோ ஸ்தாபக தலைவர் தங்கத்துரை -



" என்னைத் தூக்கிலிடுவதன் மூலம் ஆயிரக் கணக்கான குட்டிமணிகள் உருவாகுவார்கள் அவர்களனைவரையும் உங்களால் தூக்கிலிடமுடியாது "
-ஸ்ரீலங்கா நீதிமன்றில் செயலதிபர் குட்டிமணி -



தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO




" நான் வாழ்க்கையை நேசிக்கின்றேன் என்னிடம் நல்ல நோக்கங்களும் தூய சிந்தனைகளும் இருக்கும் வரை "
- தலைவர் சிறி சபாரத்தினம் -

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலைக்கான அகிம்சை வழிப்போராட்டங்கள் பயனற்றுப்போன கால கட்டத்தில் தமிழ் தேசிய இனத்தின் சுதந்திர தேசத்துக்கான தீர்வினை ஆயுத போராட்டத்தின் மூலமே வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் ஈழ விடுதலைக்கான ஆயுத போராட்ட களத்தில் முதன் முதலாக தோன்றிய தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின்
**ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவிற்கு அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.**

(cs.663)

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO) web: www. telo. org

## மரண அறிவித்தல்



### தம்பிராஜா சோமசுந்தரம்

(வாரிவளவு காரைநகர்)

காரைநகர் வாரிவளவை பிறப்பிடமாகவும் இல. 150/11 பேராதனை வீதி கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா சோமசுந்தரம் 13.02.2020 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா (ராஜா அன் சன்ஸ் - கண்டி) நல்லம்மா தம்பதிகளின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான புதுறோட்டு சண்முகம் கனகம்மா தம்பதிகளின் மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் தேசோமயானந்தசிவம், நகுலேஷ்வரி, விக்னேஷ்வரன் (லண்டன்), தவேந்திரன் (நோர்வே), மகேஷன் (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் கஜராஜா, விஷ்வராஜா, ரகுராஜா ஆகியோரின் அன்பு தந்தையாரும் பரமசிவம் (அதிபர்), கங்காதேவி, காலஞ்சென்ற நிர்மலா மற்றும் சாந்தி, சசிகலா, சோதிநாதன், பாலசுப்ரமணியம், பரஞ்சோதி, நடராஜா, காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் ஜெகதீஷ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (16.02.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் ஆரம்பமாகி பி.ப 1.00 மணியளவில் மகியாவை கண்டி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்:- மனைவி, பிள்ளைகள்**

(CS/31259)(11,17)

**081-383 8543, 077-269 7203**

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 01 . 1939



மறைவு
12 . 02 . 2020

### திருமதி துரைராசா தையல்நாயகி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், காரைநகர் புதுறோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராசா தையல்நாயகி கடந்த 12.02.2020 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், துரைராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருச்சிற்றம்பலத்தின் பாசமிகு அக்காவும், நேசமலர், ஈஸ்வரன், சிவமலர், புஸ்பலதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானசேகரம், சுமிதா, சிவா, சண்முகராசா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சரணியா, சுதாகரன், பாரதி, இளங்கோ, தயாபரன், ஜனனி, அனோயா, லங்கஜன், கவினயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், தம்பிராசா, குலசேகரம், சுப்பிர்மணியம், யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- குடும்பத்தினர்.**

(CS/31250)(11,17)

**077 579 1957**

## மரண அறிவித்தல்

# தாமோதரம்பிள்ளை பாலசுந்தரம்

(வரதன் - முன்னாள் ஹறிபேர்க் கல்லூரி ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், முறைசாராக் கல்விப் பிரிவு - தென்மராட்சி

கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை பாலசுந்தரம் நேற்று (14.02.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பமலரின் அன்புக் கணவரும், கந்தசாமி, பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற லோகநாதனின் (ரமணா) அன்புச் சகோதரனும், காயத்திரி, கல்பனா (லண்டன்), துஸ்யந்தி (கனடா), சாருலதா (கொழும்பு), சரச்சந்தர் (கனடா), உதயசந்தர் (சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்), ஆகியோரின் அன்புத் தந்தையும், பொபி (நோர்வே), சூரியபாலன் (லண்டன்), உதயதாஸ் (கனடா), கதாயுதன் (கொழும்பு), கிரிஜா (கனடா), திஷானி ஆகியோரின் அன்பு மாமனும், மிதூர்சன் (இலங்கை வங்கி - திருகோணமலை), கவாஸ்கர், பானுகா, சௌமியா, ரம்மியன், அஸ்விந், காருஜன், கார்த்திகா, சஸ்மிதா, சஜித், ப்ரதிக் ஷா, ப்ரக் ஷித் ஆகியோரின் அன்புப் பேரனும், சுசீந்திரன் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர்), சுகந்தி, சுமந்திரன் (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், ரத்தினம், சந்திரசேகரம் ஆகியோரின் மருமகனும், சுபத்திரா, ஷியாமா, காலஞ்சென்ற கவாஸ்கர் ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், ரவி, உதயன், சங்கர், குட்டி, காந்தன், அனுசியா, காலஞ்சென்ற ராங்கன் மற்றும் சித்திரா, இந்திரன் ஆகியோரின் அன்பு மச்சானும், சற்குணம் (கனடா), நவமலர், லோகேஸ்வரி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் சிவகுரு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**106, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

**077 849 6116, 075 508 7395**



**பிறப்பு**
**03.09.1947**

**இறப்பு**
**14.02.2020**

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி சிவலிங்கம்
மகேந்திராதேவி



தோற்றம்
10.08.1958

மறைவு
08.03.2018

திதி:- அபரபக்க சப்தமி

எங்கள் இனிய தெய்வமே
இப்பாரினில் இருந்து
நீங்கள் பிரிந்து இரண்டு வருடங்கள் ஆகிறது
எங்கள் உயிர் இருக்கும்வரை
எங்களுடன் நீங்கள் என்றும் இருக்கின்றீர்கள் அம்மா!
எங்கள் வாழ்வில் நீங்கள் ஏற்றி வைத்த தீபம்
என்றும் பிரகாசமாக ஒளிவீசிக் கொண்டே இருக்கும் அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்

93/9, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
(CS/31257) (11.17)

பிள்ளைகள்
குடும்பம்.

## காணி விற்பனைக்கு

கொட்டமனை வீதி, கம்பர் மலையில்
அமைந்திருக்கும் 6 பரப்புக் காணி வீட்டுடன்
விற்பனைக்குண்டு.

கந்தசாமி சுப்பிரமணியம்
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
**021 226 3176**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உடுத்துறை,
மருதங்கேணி வத்திராயன்
கிராம அலுவலகத்துக்கு
அருகில் 10 ஏக்கர் காணி
விற்பனைக்குண்டு.

**075 593 5814**

## ST. ANTONY`S COMPUTER

வட மாகாண முன்னணி கணினி விற்பனையாளர்





சகலவிதமான மடிக்கணினி (Laptop),
மேசைக்கணினி (Desktop), அச்சு இயந்திரம்
(Printer) எம்மால் உத்தரவாதத்துடன்
திருத்திக் கொடுக்கப்படும்

#189 K.K.S Road Jaffna 021 222 4865 / 075 069 8608

## தாதிய உதவியாளர் தேவை

யாழ் நகரில் உள்ள **பல் வைத்திய சாலைக்கு தாதிய உதவியாளர்களாக**
பணிபுரிய O/L, A/L படித்த
**பெண் பிள்ளைகள் தேவை.**

தொடர்பு:- 075 9759 828, 077 852 2401

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது வாகன சுத்தி
கரிப்பு நிலையத்திற்கு வேலையாள்கள் தேவைப்
படுவதால் உடன் தொடர்புகொள்ளவும்.
**சம்பளம் நேரில் பேசப்படும்.**

வேலை நேரம் 8.45Am - 07.00Pm மணிவரை

**தொடர்புக்கு:- 077 776 3533**

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20
02
1939

மறைவு
13
03
2015

**அமரர் கணபதிப்பிள்ளை கனகராசா**

திதி: அபரபக்க ஸப்தமி

விழிகளில் ஒளியாய்
நெஞ்சத்தில் நினைவாய்
எங்களின் இறைவனாய்
எம்மோடு நிரந்தரமாய்
இருந்து வழிநடத்த
வேண்டுகின்றோம்.

31/5, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



அன்னை மடியில்
26
12
1943

ஆண்டவன் அடியில்
10
02
2020

அமரர்.
**Dr. யுடிஷ்ரா குமதினி குலசேகரம்**
(இளைப்பாறிய வைத்திய கலாநிதி, யாழ் போதனா வைத்தியசாலை)

யாழ்ப்பாணம் நல்லூரை பிறப்பிடமாகவும், கொழும்பு, அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. திருமதி. யுடிஷ்ரா குமதினி குலசேகரம் அவர்கள் 10.02.2020 அன்று அமெரிக்காவில் இறையடி சேர்ந்தார். அன்னார் நல்லூரைச் சேர்ந்த அமர்ரகள் இராமநாதர். கமலாவதி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், அமரர் Dr. குலசேகரம் (பிரதிப் பணிப்பபார் தேயிலை ஆராய்ச்சி நிலையம்) அவர்களின் அன்பு மனைவியும், பிரியதர்ஷனி (ஆவுஸ்திரேலியா), Dr.ஸ்கந்தராஜ் (U.S.A) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கரதேவன் (ஆவுஸ்திரேலியா), Dr.சங்கீதா (U.S.A), ஆகியோரின் அருமை மாமியும், Dr. சிறிதரா (U.S.A), Dr.நளாயினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr.ஜெயந்தி (U.S.A), ஞானதேவன் ஆகியோரின் அருமை மைத்துனியும், காயத்ரீ, தீப்திகா, புவனேஷ், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் Dr. சரண்யாவின் அன்புப் பெரியம்மாவும், மேனகா, றியா, ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12.02.2020 அன்று Virginia, U.S.A.இல் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: மகன், மகள்

## இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்பெற்ற
**இரத்தினசாமி** அவர்கள்
**ஜாதகம், கைரேகை, எண்கணிதம்**
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடுசெல்லத்தடை மற்றும்
குழந்தை பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை,
தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில்தொடங்க
மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்

முன்பதிவுக்கு: 071 574 8358, 071 392 9703
இல.101 , Kandy Rd. Jaffna. (யாழ். நீதிமன்றத்திற்கு அருகில்)

## நீங்கா நினைவில் எட்டாம் ஆண்டு



மலர்வு
23
10
1952

உதிர்வு
15
02
2012


**அமரர் கந்தையா சண்முகராசா**
(உரிமையாளர் - அம்பாள் ஸ்ரோர்ஸ்,
வீரமாகாளி அம்மன் கோயிலடி )

எங்கள் ஒளி விளக்காய் திகழ்ந்த திருவிளக்கே அப்பா!
கணப்பொழுதில் ஆறவில்லை
எட்டு ஆண்டுகள் ஆகியும் மீளாப் பயணம்சென்ற தந்தையே!
உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு அகலாது
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

34/1, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
(cs.23327) (13.17)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தையா பூபாலு**

தோற்றம்
22.08.1937

மறைவு
25.02.2019

ஆண்டொன்று ஆனதையா
அல்லாடி நிற்கின்றோம்
அண்ணனும் அரேபியாவில்
ஆறாமல் நிற்கின்றார்
ஆவியாய் வந்தெம்மை ஆசீர்வதிப்பாய் நீ
(J/11544) (11.17)

நாகம்மாள் வீதி,
உடுவில், சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## நீங்கா நினைவுகளில்

6ஆம் ஆண்டு



பிறப்பு
01.08.1926

இறப்பு
21.02.2014

**அமரர் வேலுப்பிள்ளை அரியதுரை**

23ஆம் ஆண்டு



பிறப்பு
07.12.1926

இறப்பு
14.05.1997

**அமரர் புவனேஸ்வரி அரியதுரை**

ஆண்டுகள் பல கடந்தாலும்
ஆறாது எம் துயரம் - நீங்கள்
இம் மண்ணுலகை விட்டு பிரிந்தாலும் - நாம்
வாழும்வரை உம் நினைவுகளும் வாழும்.

43, வேலப்பர் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

**பணிப்பெண் தேவை**

நல்லூரில் வயோதிப பெண்ணுக்கு உதவி செய்யவும், மதிய, இரவு உணவு செய்யவும் **பணிப்பெண் தேவை.**
சேவை நேரம் காலை 10இல் இருந்து மாலை 4வரை மட்டும்
**சம்பளம் ரூபா 700/=**
தொடர்பு:- 0777 799 073

**எமது நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை**

- ஸ்பெயாபாட்ஸ் தெரிந்தவர்கள் பழகுபவர்கள் } பெண்கள்
- சேவிஸ் வேலை தெரிந்தவர்கள் பழகுபவர்கள் } ஆண்கள்
- கிளினிங் வேலை

இல. 102, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 5202**

**காணி விற்பனைக்கு**

யாழ் தொட்டிலடி சந்திக்கு அருகாமையில் விளான் வீதியில் வீதியோரமாக 14 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 077 245 3990

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

கொழும்புத்துறை கணக்கர் சந்திக்கு அண்மையில் மூன்றே முக்கால் பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு. 20 காய்க்கும் தென்னைகளும் நல்லதண்ணி கிணறும் உண்டு.
077 725 0587, 076 835 9276

**சுப்பர்மார்க்கெற்றுக்கு வேலையாள் தேவை**

- விற்பனையாளர்
- கணக்காளர்

} பெண்கள்

இல. 102, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 5202**

**பணிப்பெண் தேவை**

யாழ் நகரில் உள்ள 4 பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 722 2362


# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (17.01.2020)
வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த

அமரர்
**பொன்னையா நடராஜா**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (14.02.2020) வெள்ளிக் கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக் கிருத்தியக்கிரியைகள் நாளை (16.02.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

1 ஆம் கட்டை
டச்சு வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 22 .. 01 .. 1949 | 14 .. 02 .. 2020 |

## செல்வநாயகம் பாலச்சந்திரன்

(Retired Draughtsman, Colombo Municipal Council)

யாழ்ப்பாணம் கொக்குவிலை பிறப்பிடமாகவும் இல.66. ஸ்ரீ கதிரேசன் வீதி. கொழும்பு-13ஐ வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வநாயகம் பாலச்சந்திரன் நேற்று (14.02.2020) வெள்ளிக்கிழமையன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் திருமதி விமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் திருபரன் (Firmware Engineer, Verb Surgical Inc, California, America). திருமதி கலைமதி சிவரூபன் (Vice President / The One P.E Group LLC, Taxas, America). கிருபரன் (Assistant Manager - Senior Data Scientist, John keels Holdings PLC) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி கர்ஜினி திருபரன் (QA Engineer,Welocalize California, America). நவரத்தினராஜா சிவரூபன் (President / CEO The One P.E Group LLC, Texas, America). திருமதி கௌசிகா கிருபரன் (Assoicate Tech Lead, Unicorn Soloutions Pvt Ltd) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வி சயனிகா திருபரன். செல்வன் நேத்திரன் சிவரூபன். செல்வன் யதுசன் கிருபரன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.02.2020) சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை அன்னாரது இல்லத்தில் (இல.66. ஸ்ரீ கதிரேசன் வீதி. கொழும்பு-13) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (16.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் The Respect (by Jayaratne's) (பௌத்தாலோக மாவத்தை. கொழும்பு-8) பொரளை இந்து மயானத்திற்கு முன்னால் உள்ள மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணிமுதல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொரளை இந்துமயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர் - 077 1965512

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

கடந்த 15.01.2020 புதன்கிழமை
சிவபதமடைந்த

அமரர்
**சபாரத்தினம் ஜெயரத்தினம்**



அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நாளை (16.02.2020) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் யாழ்.வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்மன் (நாச்சிமார் கோவில்) ஆலய மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு அனுதாபத்தை தெரிவித்தவர்களுக்கும் மேலும்பல உதவிகளைப் புரிந்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

971/1, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12.08.1929 | 12.02.2020 |

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் நல்லூர் 113. பருத்தித்துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு அவர்கள் கடந்த (12.02.2020) புதன்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ் சென்ற அன்னபூரணத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் இராஜசேகரன் (இலங்கை) லோகநாயகி (கனடா). தயாநிதி (லண்டன்). குணசேகரம் (சுவிஸ்). கலாரதி (இலங்கை). அற்புதராஜன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் குணசிங்கம் (கனடா). குகேந்திரன் (லண்டன்). மதிவதனி (சுவிஸ்). சர்வானந்தன் (ஓய்வுநிலை ஆசிரியர்). சசித்திரா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா. கந்த சாமி. நித்தியானந்தன் மற்றும் சரஸ்வதி (கனடா). இளையதம்பி (அம்பாள் ஹாட்வெயர். நல்லூர்). லெட்சுமி (ஓய்வு நிலை ஆசிரியர்). இராசலிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர் களான விசுவலிங்கம் (ஓய்வுநிலை அதிபர்). கனகராசா. தனபாக்கியம் (ஓய்வுநிலை ஆசிரியர்) மற்றும் தில்லைநாயகி. பரராஜசிங்கம் (ஓய்வுநிலை எழுதுவினைஞர்). பத்மநிதி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் கனடாவில் வசிக்கும் காண்டீபன். ஜயத்ரா. ஜனுஷன் சுவிஸில் வசிக்கும் யோகாகிம் ஜனனி. கோபிகா. ஜஸ்மினி இலங்கையில் வசிக்கும் மதனிகா. மதுஷிகா. கருணிகா கனடாவில் வசிக்கும் கிருஷன். கிருஷா ஆகியோரின் அன்புப் பேரனும் அதீஸ் (கனடா). அகினேஸ் (கனடா) ஆகி யோரின் அன்புப்பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிக்கு ஆரம்பமாகி மு.ப 9.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

113, பருத்தித்துறை வீதி, நல்லூர்

தகவல்: குடும்பத்தினர்

# வடக்கு-கிழக்குக்கு அதிவேகப்பாதை

## விரைவில் அமைக்க ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு பெப்.15

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்கு விரைவாக பிரவேசிக்கக் கூடியதாக மத்திய அதிவேகப்பாதை மற்றும் ஏனைய அதிவேகப் பாதைகளை மிக அவசரமாக நிர்மாணிக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

வீதி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்விலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்ததாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடவத்தை தொடக்கம் தம்புள்ளை வரையிலான அதிவேகப் பாதையின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்ததன் பின்னர் வாகனங்கள் வடக்கு, கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களுக்கு மிக விரைவாக பிரவேசிக்கக்கூடியதாக இருக்கும்.

மக்களுக்கு மிகவும் இலகுவாகப் போக்குவரத்து மேற்கொள்வதற்கு வழி செய்வதே இதன் நோக்கமாகும். தற்போது பகுதியளவு நிறைவு செய்யப்பட்டுள்ள வீதி மற்றும் பாலங்களின் நிர்மாணப் பணிகளை துரிதமாக நிறைவு செய்ய வேண்டுமென்றும் கிராமிய வீதி முறைமையை ஏனைய வீதி முறைமைகளுடன் இணைந்ததாக நவீனமயப்படுத்த வேண்டும் என்றுள்ளது. (ந)



சேவைநலன் பாராட்டு

யாழ். போதனா வைத்தியசாலையில் 31 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும், பொறுப்பு தாதிய உத்தியோகத்தராகவும் கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும்

திருமதி புவனேஸ்வரி லோகநாதன்

அவர்களது சேவையை பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டுகாலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய நலன்புரிச் சங்கம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## இராணுவத்...

சில்வா மற்றும் அவரது குடும்பத்தினர் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

'சவேந்திர சில்வாவும், அவரது குடும்ப உறுப்பினர்களும் தனிப்பட்ட மற்றும் அரச பயணங்களாக அமெரிக்கா வர தடைவிதிக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற அமைப்புகளால் ஆவணப்படுத்தப்பட்ட சவேந்திர சில்வா மீதான மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுகள் தீவிரமானவை மற்றும் நம்பகமானவை.

மனித உரிமைகளை ஊக்குவிக்கவும், போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பான நபர்களை பொறுப்புக்கூற வைக்கவும், பாதுகாப்புத் துறை சீர்திருத்தத்தை முன்னெடுக்கவும், நீதி மற்றும் நல்லிணக்கத்தைத் தொடர அதன் பிற கடமைகளை ஆதரிக்கவும் இலங்கை அரசை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கை அரசுடனான எங்கள் கூட்டாண்மை மற்றும் இலங்கை மக்களுடன் நாங்கள் பகிர்ந்து கொள்ளும் நீண்டகால ஜனநாயக பாரம்பரியத்தை மிகவும் மதிக்கிறோம். இலங்கையுடனான இருதரப்பு உறவை வலுப்படுத்துவதற்கும், தற்போதைய மற்றும் வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களைச் சமாளிக்க அதன் பாதுகாப்புப் படைகளை மாற்றியமைக்க உதவுவதற்கும் அமெரிக்கா உறுதியுடன் உள்ளது. உலகெங்கிலும் உள்ள மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களை எப்போது நிகழ்ந்தது அல்லது யார் செய்தார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல், கிடைக்கக்கூடிய அனைத்து கருவிகளையும் அதிகாரிகளையும் அமெரிக்கா தொடர்ந்து பயன்படுத்துகிறது. இன்றைய நடவடிக்கைகள் மனித உரிமைகளை ஆதரிப்பதற்கும், குற்றவாளிகளுக்கு பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்கும், அமைதியான, நிலையான மற்றும் வளமான இலங்கைக்கு ஆதரவாக நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கும் எங்கள் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன' என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,5)

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

நிகழும் மங்களகரமான விகாரி வருடம்
மாசி மாதம் 3 ஆம் நாள் (15.02.2020) சனிக்கிழமை மதியம் 12 .15 மணி முதல் மதியம் 1.00 மணிவரையுள்ள விசாக நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரி திருவளர்செல்வி
வாகினி

அவர்களுக்கு காமாட்சி அம்பாளின் திருவருள் துணைகொண்டு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் பூப்புனித நீராட்டுவிழா நடத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து எமது மகளை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

தங்கள் நல்வரவை நாடும்
திரு.திருமதி கிருபாகரன் அமுதா
(6, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்)

(ஜ.31172)(13.17)

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"
SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST
5, CHAPEL ROAD, LONDON. W13 9AE. TEL: 0208 - 810 0835
Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - 840 0485
www.ammanealing.org Email: info@ammanealing.org



எமது ஆலயத்தில் பின்வரும் பணிகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
விண்ணப்பதாரிகள் மேல் குறிப்பிட்ட மின் அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**மகோற்சவ குரு**

ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தைத் திறம்பட நடத்த மகோற்சவ குரு பதவி. ஒரு மாதத்துக்கு மட்டும் இப்பதவி நீடிக்கும். குருக்கள் பட்டம் பெற்றவராகவும், தாயகத்தில் கொடியேற்றங்களை நடத்திய முன் அனுபவம் பெற்றவராகவும் இருக்க வேண்டும். தகுந்த வேதனம் வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவுதிகதி : **18.03.2020**

**மகோற்சவ இசை- தவில் நாதஸ்வர வித்துவான்கள்**

இந்த வருட (2020) ஆலய மகோற்சவ கால மங்கள இசை தவில் நாதஸ்வர வித்துவான்கள் வெற்றிடம். ஒரு மாதத்துக்கு மட்டும். தகுதியுள்ளோர் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி: 18.03.2020

**மூன்று ஆலய சிவாச்சாரியார்கள் பதவிகள்**

தகைமைகள்

விண்ணப்பதாரி குருக்கள் பட்டம் பெற்றுள்ளவராக இருக்க வேண்டும்.
சிவாச்சாரியாராகப் பணியாற்றிய அனுபவம் தேவை

ஓர் உதவி சிவாச்சாரியார் பதவி

சிவாச்சாரியாராகப் பணியாற்றிய அனுபவத்துடன், சுவாமி நெய்வேத்தியம், பூமாலை கட்டுதல், அலங்காரம் செய்தல் என்பனவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வேதனம்

பிரித்தானிய அரச விதிகளுக்கு அமைய வேதனம் வழங்கப்படும்.
அடியார்கள் தட்சணை பகிர்ந்து வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவு திகதி: 18.03.2020

மேற்படி பதவிகளுக்குத் தகுதியானோர் மட்டும் விண்ணப்பிக்கலாம். இப்பதவிகள் தொடர்பான தகைமைகள், வேதனம் என்பன பற்றிய விபரங்களுக்கு தலைவர் / செயலாளர் ஆகியோரைத் தொடர்பு கொள்ளவும்.

(CS/31252)(11,17)

45 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 12 . 09 . 1959
இறப்பு 02 . 01 . 2020

காசிப்பிள்ளை ஆனந்தன்

எம் குடும்ப பாசவிளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு இணைந்து வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த எங்கள் அன்புச் செல்வமே!
உங்களை நாம் எண்ணாத நாளில்லை ஐயா!

14, விதானையார் வீதி,
2ஆம் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்

நினைவுகளுடன் வாழும்
கா.திருநீலகண்டன் (சகோதரன்)
கா.இராசலிங்கம் (சகோதரன்)
கா. மார்க்கண்டு (சகோதரன் - ஜேர்மனி)
தி.பாலேந்திரன் (பெறாமகன் - ஜேர்மனி)
தி.பாலரூபன் (பெறாமகன் - ஜேர்மனி)

A member of the IDOL family
UV Water Solution
water science technologies
Right solution for water issues

நீர் தொடர்பான சகல பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்கு
T.P: +94775092737

## 5 கிலோ...

ணித்த மோட்டார் சைக்கிளில் கொண்டு கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படும் 3 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அதில் பயணித்த இருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர். இதேவேளை, அந்தப் பகுதியில் ஒவ்வொரு கிலோ கஞ்சாவை தமது உடமையில் வைத்திருந்த சந்தேகத்தில் இருவரைத் தாம் கைது செய்துள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டுள்ள இருவரில் ஒருவருக்கு ஏற்கனவே கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ள தாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் பளை பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஒ.ந.5,6)

## ஐ.நா...

எது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் தொடர்பில் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த, 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாவது தடவையாகவும் இரண்டு ஆண்டுகள் கால நீடிப்பை ரணில் அரசு கோரியிருந்தது. 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆட்சிக்கு வந்த கோத்தாபய அரசு, இலங்கையும் இணங்கி ஏற்றுக் கொண்ட ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்று அறிவித்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர், இலங்கை தொடர்பில் தனது வாய்மொழி மூல அறிக்கையை இந்த அமர்வில் சமர்பிக்கவுள்ளார். அவரது அறிக்கை இலங்கை அரசுக்கு முன்னரே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இலங்கை தொடர்பில் மிகக் காட்டமான, காரசாரமான விடயங்களை உள்ளடக்கியதாக அவரது அறிக்கை அமைந்துள்ளது.

இந்த நிலையில் இலங்கை அரசு, ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்று ஜெனிவாவுக்கு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (ஒ.5)

## யாழ்...

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட புதுமுகமாணவனை, மூத்த மாணவர்கள் பகிடிவதைக்கு உட்படுத்தியுள்ளனர். இதனால் மனமுடைந்த புதுமுக மாணவன் தான் உயிரிழக்கப் போவதாக சக மாணவர்களிடம் நேற்றுமுன்தினம் கூறியுள்ளான். சக மாணவர்கள், பல்கலைக்கழக நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

பகிடிவதையில் ஈடுபட்ட மாணவன் விசாரணைக்குழு முன்னிலையில் அழைக்கப்பட்டார். விசாரணையின் போது, புறொக்டரை (பிரதான முறைப்பாட்டு அதிகாரி) மிரட்டும் வகையில் நடந்து கொண்டுள்ளார். கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் முக்கிய பொறுப்பில் இருக்கும் மாணவனின் அதட்டலையடுத்து தான் பதவியிலிருந்து விலகுவதாக, புறொக்டர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு நேற்று முன்தினம் மாலையே கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து நேற்று மாலை, மிரட்டிய மாணவனை அழைத்து, புறொக்டரிடம் மன்னிப்புக் கோருமாறு தகுதி வாய்ந்த அதிகாரி கோரினார். மாணவன் மன்னிப்புக் கோரியதையடுத்து, புறொக்டர் தனது பதவி விலகல் கடிதத்தை மீளப் பெற்றுள்ளார். மாணவனுக்கு எந்தவொரு தண்டனையும் விதிக்கப்படவில்லை. (ஒ.5)

## தம்பதியர்...

ஞக்கு முன்னரே திருமணம் நடைபெற்றதாகவும், மறுவீட்டுக்குச் செல்லும் போதே விபத்து இடம்பெற்றதாகவும் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

முருகனூர் பகுதியில் அமைந்துள்ள தமது வீட்டிலிருந்து சிதம்பரபுரம் நோக்கி முச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி தடம்புரண்டு விபத்து இடம் பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்த கணவன் மற்றும் மனைவி இருவரும் நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். மனைவி அங்கு உயிரிழந்தார்.

தர்சினி (வயது-25) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். முச்சக்கரண வண்டியைச் செலுத்தி வந்த அவரது கணவரான கலைச்செல்வன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஒ.5,18,110)

## காதலர்...

யாழ்ப்பாணம், பெப். 15

காதலர் தினமான நேற்று, காதலர் தினப் பரிசுப் பொருள்கள் பாடசாலைகளை அண்டிய பகுதிகளில் அதிகமாக விற்பனை செய்யப்பட்டன. அவற்றை வாங்கிய மாணவர்களிடமிருந்து, பரிசுப் பொருள்களை பறிமுதல் செய்த பாடசாலை நிர்வாகங்கள், மாணவரின் பெற்றோரிடம் அவற்றை ஒப்படைத்துள்ளன.

யாழ்ப்பாண நகரிலுள்ள இரண்டு பாடசாலைகளில், மாணவர்களிடம் காதலர் தினப் பரிசுப் பொருள்கள் அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து சோதனை நடத்தப்பட்டது. அவர்களிடமிருந்து பரிசுப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பரிசுப் பொருள்களை வைத்திருந்த மாணவர்களின் பெற்றோருக்கு தகவல் வழங்கப்பட்டது. பாடசாலைக்கு அவர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களிடம் பரிசுப் பொருள்களை நிர்வாகத்தினர் ஒப்படைத்தனர். பரிசுப் பொருள்கள் பலவற்றில் மாணவர்கள் தங்கள் காதலர்களின் பெயர்களை எழுதியிருந்த நிலையிலேயே, பெற்றோரிடம் அவை ஒப்படைக்கப்பட்டன. (ஒ.5,105)

## பெண்ணின்...

னியா பொலிஸாருக்கு தகவல் தெரிவித்திருந்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு, சட்டமருத்துவ பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர். 45 வயதுடைய பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் நீண்ட காலமாக வவுனியா நகரில் யாசகம் செய்து வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5,18,110)

## தொழில்நுட்பக்...

லூரியே போர்க்களமாகியது. அந்தக் குழுவின் உறுப்பினர் ஒருவரை மடக்கிப் பிடித்த நிலையில், அவரை மீட்பதற்காக மீண்டும் வாள்வெட்டுக் குழுவினர் வந்த போதும், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அங்கு வந்ததையடுத்து அவர்கள் தலைதெறிக்க ஓடினர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் இருவருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலில் முடிந்துள்ளது. தாக்குதலில் ஈடுபட்ட மாணவன், வாள் வெட்டுக் குழுவினரை அழைத்துள்ளான். சுவர் ஏறிப் பாய்ந்து உள்ளே நுழைந்த கும்பல் அங்கு சரமாரியாகத் தாக்குதலில் ஈடுபட்டது. இந்தத் தாக்குதலைத் தடுப்பதற்கு விரிவுரையாளர்கள் முயற்சிகளை மேற்கொண்டனர். இதனால் அவர்கள் மீதும் தலைக் கவசங்களால் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மூன்று விரிவுரையாளர்கள் காயமடைந்தனர். வெளியிலிருந்து வந்து தாக்குதலில் ஈடுபட்ட கும்பலைச் சேர்ந்த ஒருவர் ஒருவாறு மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

பிடிக்கப்பட்டவரை மீட்பதற்காக வாள் வெட்டுக் குழுவைச் சேர்ந்த 6 பேர் மீண்டும் தொழில்நுட்பக் கல்லூரிக்குள் புகுந்து தாக்குதல் நடத்த முற்பட்டனர். வாயில் கதவுகள் பூட்டியிருந்ததையடுத்து அவர்கள் கல்லூரி மீது கல் வீச்சுத் தாக்குதலை நடத்தினர். பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு, பொலிஸாரும், இராணுவத்தினரும் அங்கு வந்ததையடுத்து வாள்வெட்டுக் குழுவினர் தலைதெறிக்க ஓடித் தப்பினர்.

மடக்கிப் பிடிக்கப்பட்டவரும், தொழில்நுட்பக் கல்லூரி மாணவனும் விசாரணைகளுக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஒ.5,20,105)

## அன்ன...

வெளியிட்டுள்ளன. பெரும்பாலும் அந்தச் சின்னம் அன்னமாகவே இருக்கும் என்று கூறப்படு கின்றது.

இதனையடுத்து சஜித் பிரேமதாச தலைமையில் உதயமாகியுள்ள ஐக்கிய மக்கள் சக்தி எனும் அரசியல் கூட்டணியின் சின்னமாக அன்னத்தை ஏற்குமாறு கூட்டணியின் பொதுச்செயலர் ரஞ்சித் மத்துமபண்டாரவால் தேர்தல்ஆணைக்குழுவிடம் நேற்று மாலைகோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனவும்தெரிய வருகின்றது.

அத்துடன், அன்னம் சின்னத்தின் கீழ் களமிறங்குவதற்கு ஏதேனும் சட்ட சிக்கல் ஏற்படும் பட்சத்தில், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான யானை சின்னத்தின் கீழேயே இக்கூட்டணிபோட்டியிடும். பொதுத்தேர்தலில் போட்டியிட வேண்டிய விதம் குறித்தும், சின்னம் சம்பந்தமாகவும் கலந்துரையாடி இறுதி முடிவை எட்டுவதற்காக ரணில் தரப்பிலிருந்து ஐவரும், சஜித் அணியிலிருந்து ஐவருமாக 10 பேர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது யானை சின்னத்தின்கீழ் போட்டியிடுவதே சிறப்பு என்று ரணில் தரப்பும், இதயமே சிறந்தது என சஜித் அணியும் வாதங்களை முன்வைக்க இணக்கப்பாடு எதுவும் எட்டப்படாததால், பொது சின்னத்தின்கீழ் போட்டியிடுவது பற்றி ஆராயப்பட்டது. பொதுச்சின்னத்தை ஏற்பதற்கு இரு தரப்பும் இணக்கம் வெளியிட்டுள்ளன. (ஒ.5,22,44)

## குடும்பத்...

சடலமாக மீட்கப்பட்டவராவர்.

'கடந்த புதன்கிழமை மதுபோதையில் வந்து மனைவியுடன் சண்டையிட்டுள்ளதாகவும் அடுத்த நாள் காலையில் மனைவி கணவரை பேசியதன் பின்னர் காணாமல் போயுள்ளதாகவும் இதன் பின்னர் அவரைத் தேடியபோது அவருடைய பழைய வீட்டில் சடலமாக காணப்பட்டுள்ளதாகவும்' விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது சடலத்துக்கு அருகில் மருந்துப் போத்தல் ஒன்றும் காணப்பட்டுள்ளது. சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. இறப்பு விசாரணையை நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ந-26)

## அடுத்த...

நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் ஜெனிவாவில் நேற்று கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் பிரதி ஆணையாளரை நேற்றுக் காலை சந்தித்த அவர், கனடாவின் அனுசரணையுடன் கூட்டப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளின் கூட்டத்திலும் பங்கேற்று ஆராய்ந்தார். (ஒ.5)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 14.02.2020 | வெற்றி வாரம் 2769 | வர்ணம் கருநீலம்
கன்னி | வெற்றி இலக்கங்கள் 19 30 40 46 | சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000/=
15.02.2020 ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுக்களாகும்

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1126
சீட்டிழுப்பு திகதி 2020.02.13 வியாழக்கிழமை
P 24 33 59 75
8 4 2 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 95,703,560/-

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 883
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.02.14
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,459,820/-
வெற்றி இலக்கங்கள் 10 20 62 74 M

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 323
சீட்டிழுப்பு திகதி 14.02.2020 சிவப்பு
ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கங்கள் 23 55 61 | விதி எண் 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 51,850,188/=
19.02.2020 ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk



## இன்றைய நாள்

**மேடம்:** மனதில் இருந்த திட்டம் செயல் வடிவமாகும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**இடபம்:** இனிய அனுபவத்தை உறவினரிடம் சொல்லி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து வளர்ச்சி அதிகரிக்கும். உபரி வருமானம் கிடைக்கும்.

**மிதுனம்:** அவசரப்பணியால் மனதில் சஞ்சலம் உருவாகும். கருணை இல்லாதவரிடம் உதவி கேட்காமல் இருப்பது நல்லது. தொழில், வியாபார நடைமுறை சீராக இருக்கும்.

**கடகம்:** பேச்சை குறைப்பது மிகுந்த நன்மை தரும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணவரவு கிடைப்பதில் தாமதம் ஏற்படும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவது நல்லது.

**சிம்மம்:** மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். தொழில், வியாபார வளர்ச்சி புதிய இலக்கை எட்டும். பணப் பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி:** பிறருக்கு நன்மை செய்தாலும் மனவருத்தம் ஏற்படும் வாய்ப்புள்ளது. சமூக நிகழ்வுகளில் ஒதுங்கி இருப்பது நல்லது. பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**துலாம்:** பெரியவர்களின் வழிகாட்டுதலை பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரம் புதிய யுக்தியால் செழித்து வளரும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள்.

**விருச்சிகம்:** வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். அவப்பெயர் வராதபடி செயல்படுவது நல்லது. தொழில், வியாபார வளர்ச்சி கூடுதல் முயற்சியால் சீராகும்.

**தனுசு:** சாதனை புரிவதற்கான சூழல் அமையும். பணிகளை திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும். நிலுவை தொகை வசூலாகும்.

**மகரம்:** தாமதமான செயலில் கூட அனுகூல பலன் கிடைக்கும். உங்களின் தனித்திறமையை பலரும் அறிந்து பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** அடுத்தவர் மீதான நம்பிக்கை குறையும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை தாமதமின்றி சரிசெய்வது நல்லது.

**மீனம்:** வெளி வட்டாரத் தொடர்பு தொந்தரவு தரலாம். சொந்தப் பணிகளை விரைவாக நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரம் சீரான அளவில் இருக்கும்.

# உண்மை, நீதி, இழப்பீடு கோரி உறவுகள் கொழும்பில் பேரணி

கொழும்பு, பெப். 15

உலகெங்கிலும் உள்ள பலர் நேற்றைய தினத்தை காதலர் தினம் என்று கொண்டாடிய அதேவேளையில், இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் அன்புக்குரியவர்களின் தினமாக நேற்றைய நாளைக் கடைப்பிடித்தனர்.

நாடெங்கிலும் இருந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் நூற்றுக்க ணக்கான குடும்ப உறுப்பினர்கள் நேற்று தமது உறவுகளை நினைவுகூரும் வகையில் கொழும்பு விகார மகா தேவி பூங்காவில் கூடினர்.

அங்கிருந்து அவர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆகியோரின் அலுவலகங்களை நோக்கிப் பேரணியாகச் சென்று நீதி, உண்மை மற்றும் இழப்பீடு கோரினர்.

**மன்னிப்புச் சபை கோரிக்கை**

இதேவேளை, இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு நீதி வழங்குவதுடன் உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் எனவும், அந்தக் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

உலகின் மிக அதிக எண்ணிக்கையானோரைக் காணாமல் ஆக்கப்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இந்தநிலையில் சத்தியத்தையும் நீதியையும் தேடும் சாட்சிகளையும் குடும்பங்களையும் பாதுகாக்க அதிகாரிகள் தவறிவிட்டனர்.

மேலும், ஆள்களைக் கடத்திக் காணாமல் ஆக்கியமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொடர்பில் நீதி விசாரணை நடத்தி அவர்களைத் தண்டிக்கவும் இலங்கை தவறிவிட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளப் போராடும் குடும்பங்களின் முயற்சியை இலங்கை அரசு முன்வந்து ஆதரிக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அதிகாரிகள் உடனடியாகத் தகவல்களை வழங்க வேண்டும்.

போரின் இறுதிக்கட்டத்தில் பாதுகாப்புப் படையினரிடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் சுயாதீனமாக விசாரிக்கப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றுள்ளது. (ஒ.5,22)

# தொடர்கிறது இராணுவமயம்

கொழும்பு, பெப். 15

தாமரைக் கோபுரத்தின் புதிய முகாமைத்துவத் தலைவராக ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க நேற்று தனது பணிகளை பொறுப்பேற்றார்.

இராணுவத்தில் 35 வருட சேவையின் பின்னர் இலங்கை இராணுவத்தின் பணிக்குழாம் பிரதானியாக கடமையாற்றிய சமரசிங்க, தாமரைக் கோபுரத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டார்.

பாதுகாப்பு செயலர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஓஷத சேனாநாயக்க உள்ளிட்டோர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஒ.5)

# பொறியியலாளருக்கு இழப்பீடு வழங்கவும்

## பொறுப்பதிகாரிக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, பெப். 15

கஞ்சா கடத்தல் வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் வாதத்தையடுத்து விடுதலை செய்யப்பட்ட பொறியியலாளருக்கு 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

60 கிராம் கஞ்சாவை கனடாவிலிருந்து வர்த்தகத்துக்காகக் கடத்தியதாகப் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரியால் கொழும்புக் கோட்டை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு விசாரணையில் விடுதலையான பொறியியலாளரான சிவத்தம்பி மயூரனுக்கு 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கும்படி போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சந்திரசிறி கிரியாதெனவுக்கு கோட்டை நீதிமன்ற பிரதான நீதிவான் ரங்கா திசாநாயக்க நேற்று உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கினார்.

'போதைப்பொருள் தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி 60 கிராம் கஞ்சாவை கனடாவிலிருந்து வர்த்தகத்துக்காக கடத்தியதாக சிவத்தம்பி மயூரனுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணையில் குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு எந்தவிதமான முகத்தோற்றரளவிலான சான்றுகளும் இன்மையால், எதிரியாக பெயர் குறிப்பிட்ட சிவத்தம்பி மயூரனை நீதிமன்றம் சுற்றவாளியென விடுதலை செய்துள்ளது.

சந்தேகநபருக்கு எதிராக நடாத்தப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான போதிய சான்றுகள் இல்லையெனில் போதைப்பொருள் தடுப்புப்பிரிவுப் பொறுப்பதிகாரி குற்றவியல் சட்ட நடவடிக்கைகோவையின் 120(3) (ஆ) பிரிவின் கீழ் வழக்கு நடவடிக்கைகளை மீளப்பெறுவதாக நீதிமன்றுக்கு அறிவித்து நீதிமன்றத்தால் சந்தேகநபர் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் முறையான விசாரணைகளை நடாத்தாமல், நடாத்தப்பட்ட விசாரணையில் வழக்குத் தாக்கல் செய்ய போதிய சான்றுகள் இன்மையை நீதிமன்றுக்கு அறிவிக்காமல் கவனவீனமாக செயல்பட்டு போதிய சான்றுகளில்லாமல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதனால் இந்த இளைஞன் 9 நாள்கள் சிறையில் அடைக்கப்பட்டதுடன் இரண்டு வருடங்கள் வழக்கு விசாரணைக்கு முகம் கொடுத்ததுடன் மனஉளச்சலுக்கும் ஆளாகியதுடன் மேற்படிப்பை மேற்கொள்ள முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. குற்றவியல் சட்ட நடவடிக்கை கோவையின் 17(4) பிரிவின் கீழ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி சந்திரசிறி கிரியாதெனிய அடுத்த மாதம் 20ஆம் திகதி பாதிக்கப்பட்ட இளைஞனுக்கு 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கும்படி நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

பாதிக்கப்பட்ட இளைஞனின் சார்பில் சட்டத்தரணி தர்மஜா தர்மராஜாவின் அனுசரணையில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா முன்னிலையானார். (ஒ.5)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.15
யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் 21 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டம் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை இடம் பெறும் காலிறுதியாட்டத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிரத்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம் பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் பல்லசுட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் வெஸ்றோம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், பெப்.15
மடு பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் பெண்களுக்கான துடுப்பாட்டப்போட்டி இன்று சனிக்கிழமை மடு பிரதேச செயலக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், பெப்.15
சங்கானை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் ஆண்களுக்கான கால்பந்தாட்டப போட்டி இன்று சனிக்கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில பெறவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், பெப்.15
கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் ஆண், பெண் இரு பாலருக்குமான சதுரங்கப் போட்டி இன்று சனிக்கிழமை கண்டாவளை பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், பெப்.15
கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகமும் சனசமூக நிலையமும் வருடந்தோறும் நடத்தும் அணிக்கு 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விக்கிரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும். இதில் வட்டுக்கோட்டை ஓல் கோல்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ் ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், பெப்.15
மன்னார் மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தினால் புதிதாக இணைந்து கொண்ட துடுப்பாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு எருக்கலம்பிட்டி மகாவித்தியாலய மைதனத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் நானாட்டன் டைமன்ஸ் ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பனங்கட்டுக்கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், பெப்.15
யாழ். கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ.பி.சி. பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைஒளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், பெப்.15
வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆம் ஆண்டு நிறைவையிட்டு மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜயனார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு இறுப்பிட்டி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)





# கரணவாய் மத்தி, வல்வெட்டி ஒற்றுமை இரண்டாம் சுற்றுக்கு முன்னேற்றம்


யாழ்ப்பாணம், பெப்.15
வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆம் ஆண்டு நிறைவையிட்டு மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம், வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழக அணிகள் இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி ஆகிய அணிகள் இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

நேற்றுமுன்தினம் வல்வை தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 3மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வடமராட்சி நாச்சிமார் கோவிலடி சிறிஅம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. ஆட்டநாயகனாக அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி வீரர் வசீதரன் தெரிவு செய்யப்பட்டார்.

மாலை 4 மணிக்கு இடம்பெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி மோதியது. பரபரப்பான ஆட்டத்தில் வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்தசுற்றுக்கு முன்னேறியது. ஆட்டநாயகனாக வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி வீரர் கஜரூபன் தெரிவு செய்யப்பட்டார். (23)

# மெகா நைட் பிறீமியர் லீக் இன்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், பெப்.16
கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக் கழகத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின் ஒளியில் நடத்தும் மெகா நைட் பிறீமியர் லீக் மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

மேற்படி தொடர் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக் கழக மைதானதத்தில் இடம்பெற்றது.

முதலில் போட்டிகளில் பங்கு பற்றும் அணிகளுக்கான ஜெர்சிகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வெற்றி பெறும் அணிக்கு வழங்கப்படும் வெற்றிக் கிண்ணம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இதில் நல்லூர் ஜொலிபிரன்ஸ் அணி, நோ நேம் அணி, ஜப்னா றோயல் அணி, நொதன் ஸ்ரைக்கஸ் அணி, கல்வியங்காடு சுப்பர் கிங்ஸ் அணி, காரை கிங்ஸ் கொப்பிறாஸ் அணி, வல்வை புளூஸ் அணி, அரியாலை கில்லடி 100 அணி ஆகிய அணிகள் மேற்படி போட்டியில் மோதவுள்ளன.

## மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 11 . 1925



மறைவு
09 . 02 . 2020

### ராஜா விசுவநாதன் (மாக்)

(முன்னைநாள் பிரபல சட்டத்தரணி, முன்னைநாள் முதல்வர்- யாழ்.மாநகரசபை)

யாழ். வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜா விசுவநாதன் 09-02-2020 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான டாக்டர் கந்தப்பராஜா சுந்தர றாமாசிபிள்ளை தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணி (யாழ்.இந்துமகளிர் கல்லூரியின் முன்னாள் மாணவி, ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், உருத்ரகுமாரன் (சட்டத்தரணி, USA), சிவகுமாரன் (பொறியியலாளர், Australia), டாக்டர் தர்மாவதி (Australia), கிருஸ்ணகுமாரன் (நிதி ஆலோசகர், UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், மகேஸ்வரி, நவரத்தினம், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கீதாஞ்சலி (IT Analyst, USA), டாக்டர் கலைவாணி (Australia), டாக்டர் சுதாகரன் (Australia), சுரம்யா (சட்டத்தரணி,UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், கபிலயன் (USA), அபிராமி (USA), கிருஸ்ணா (Australia), கேசினி (Australia), யாதவன் (Australia), நேயவன் (Australia), நிருபமா (UK) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2020) ஞாயிற்றுக்கிழமை அன்று சிட்னியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்.

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

புதிய தொழில்நுட்ப வாழ்க்கைக்கான நுழைவாயில்
UKi
100 % புலமைப்பரிசில்
முற்றிலும் வேலைவாய்ப்பை
நோக்கமாகக் கொண்ட
கணினி மென்பொருள் பயிற்சிநெறி
◆ பயிற்சி நிலையங்கள்:
யாழ்ப்பாணம், கிளிநொச்சி
◆ பயிற்சிக்காலம்:
6 மாதங்கள்
◆ விண்ணப்ப முடிவுதிகதி:
24.02.2020
APPLY NOW
விண்ணப்ப படிவங்கள் பெறுவதற்கு
www.uki.life
யாழ்ப்பாணம்
+94 (77) 582 1661
info@uki.life
கிளிநொச்சி
+94 (21) 228 4647
kilinochchi@uki.life
(ak.a. 932) (13.17)

## மரண அறிவித்தல்

### துரையப்பா மகேஸ்வரி (குஞ்சக்கா)



யாழ்ப்பாணம், கந்தர்மடம், மணல்தரைலேனைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா மகேஸ்வரி நேற்று (14.02.2020) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் வசந்தியின் (நிர்வாக முகாமையாளர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சங்கானை) பாசமிகு தாயாரும் பரமேஸ்வரி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான Dr.திருஞானசம்பந்தர், சிவலிங்கம், பூபாலசுந்தரம், புவனேந்திரன் ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்றவர்களான தியாகராசா, சீதாலக்சுமி, இரத்தினேஸ்வரி மற்றும் மகேஸ்வரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : மகள் - வசந்தி, மகன் - கிருபாகரன் (கிரி)

## 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கணபதிப்பிள்ளை சண்முகநாதன்

உரிமையாளர் - யசி வர்த்தக நிலையம், யாழ்ப்பாணம்

மலர்வு 16.03.1950

உதிர்வு 25.02.2019

அன்பினிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தில் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஓராண்டு பறந்தோடிச் சென்றிருந்தாலும்
என்றென்றும் அவர் பாசம்
போற்றியே பணிந்திடுவோம்.

என்றும் நினைவுடன்

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்

குடும்பத்தினர்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 20

# சஞ்சீ

Registered as a Newspaper

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 மாசி 3 சனிக்கிழமை (15.02.2020) சிகரம் : 4

பலபஸ் ஏறி சிலபஸ் தாண்டி கம்பஸ் போனால்
துலைவார் ராக்கிங் கொண்டெமைக் கலக்கி – மேலுந்தான்
பாத்ரூம் போயுன் உடம்பைக் காட்டெனக் குலைக்கும்
நாத்தம் பிடிச்சவைதான் நாளையெம் தலைவர்களாம்!

*ஈழக்கவி*



03 ஆசியாவே அலேர்ட்!



சமரகூன் ரவீந்திரநாத் தாகூர்

09 இலங்கைத் தேசிய கீதத்தை இயற்றியவர் ரவீந்திரநாத் தாகூரே!!

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழங்கிய பிரத்தியேக **நேர்காணல்** 10 -11



# ராக்கிங்: தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து...

○ நிலாந்தன்

பல ஆண்டுகளுக்கு முன்பு கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தராகப் பேராசிரியர் ரவீந்திரநாத் பதவி வகித்த காலத்தில் ராக்கிங் தொடர்பாக ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. ஆசிரியர்களும் மாணவர்களும் அதில் கலந்து கொண்டு ராக்கிங்கை எப்படி நிறுத்தலாம் என்பது குறித்து சிந்தித்தார்கள். அதன் போது ஒரு மூன்றாம் வருட மாணவன் எழுந்து ஆசிரியர்களைப் பார்த்து பின்வருமாறு கேட்டிருக்கிறார், உங்களுடைய காலத்தில் ராக்கிங் செய்யாத யாராவது ஒருவர் என்னுடைய கேள்விக்கு பதில் சொல்லுங்கள் என்று. அங்கு கூடியிருந்த ஆசிரியர்களில் ஓர் இளம் விரிவுரையாளரைத் தவிர வேறு யாருமே அந்த மாணவருக்கு பதில் சொல்ல முன்வரவில்லை

ஏன் பதில் சொல்ல முடியவில்லை? ஏனெனில் ராக்கிங் பெரும்பாலான உயர் கல்வி நிறுவனங்களில் ஓர் உப பண்பாடாக வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு பண்பாடாக இருப்பதனால்தான் இன்று வரையிலும் அதை சட்டத்தின் மூலம் மட்டும் கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கிறது. ஜனநாயகம் ஒரு பெரும் பண்பாடாக, செழிப்பாக வளர்த்தெடுக்கப்படாத ஒரு சமூகத்தில் ராக்கிங் ஓர் உப பண்பாடாக தொடர்ந்தும் நிலைத்திருக்கும்.

எமது கல்விப் புலத்தில் பல்கலைக்கழகங்களில் மட்டும் அல்ல தொழில்நுட்பக் கல்லூரிகள், பாடசாலைகள் முதலாக பெரும்பாலான வளர்ந்தோருக்கான கல்விப் பரப்புகளில் அதுவோர் உப பண்பாடாகப் பேணப்படுகிறது. எனவே ராகிங்கை கட்டுப்படுத்துவது என்பது தனியே ஒரு சட்ட விவகாரம் மட்டும் அல்ல. அதற்கும் அப்பால் அது ஒரு பண்பாட்டு விவகாரம். எமது கல்விப் பரப்பில் ஜனநாயகத்தை ஒரு பாரம்பரியமாகக் கட்டி எழுப்பும்போதே ராக்கிங் என்ற உப பண்பாடு வழக்கொழியும். எமது கல்விப் பரப்பில் ஜனநாயகம் குறைவு. வகுப்பறைகளில் ஜனநாயகம் குறைவு. அதிபர் அலுவலகங்களில் ஜனநாயகம் குறைவு. கல்வித் திணைக்களத்தில் ஜனநாயகம் குறைவு. மாணவர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவில் ஜனநாயகம் குறைவு. மா ணவர்களுக்கும் ஆசிரியருக்கும் இடையிலான உறவில் ஜனநாயகம் குறைவு. ஆசிரியருக்கும் அதிபருக்கும் இடையிலான உறவில் ஜனநாயகம் குறைவு. அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் கல்வித் திணைக்களத்திற்கும் இடையிலான உறவில் ஜனநாயகம் குறைவு. கல்விப்புலத்தில் மட்டுமல்ல சமூகத்தின் எல்லா நிறுவனங்களிலும் இக்குறைபாடு இருக்கிறது. தனக்குக் கீழ் வேலை செய்யும் அலுவலர்களை எழுப்பி வைத்துக் கேள்வி கேட்க விரும்பும் எந்த ஓர் உயரதிகாரியிடமும் ஜனநாயகப் பண்பு இல்லை. மேலதிகாரியுடன் கைபேசியில் பேசும்போதும், எழுந்து நிற்கும் கீழ்ப்படிவுள்ள அலுவலர்கள் உள்ளவரை உயர் அதிகாரிகள் கீழதிகாரிகளை நிறுத்தி வைத்துக் கேள்வி கேட்பார்கள்தானே? என்று ஒரு மூத்த சிவில் அதிகாரி பகிடியாகச் சொன்னார்.

ஆஸ்பத்திரிகளில் மருத்துவருக்கும் தாதியருக்குமிடையே மருத்துவர், தாதியர் நோயாளருக்குமிடையே எப்படிப்பட்ட உறவு உண்டு? மதநிறுவனங்களின் அதிகாரக் கட்டமைப்பு ஜனநாயகமானதாக உள்ளதா? வீடுகளில் ஆண் பெண் உறவு உட்பட எல்லா உறவுகளிலும் ஜனநாயகம் உள்ளதா? எந்தத் தமிழ்க் கட்சியில் உட்கட்சி ஜனநாயகம் உண்டு? எந்த ஆயுதப் போராட்ட இயக்கத்திடம் உட்கட்சி ஜனநாயகம் இருந்தது?

கடந்த வாரம் உருவாக்கப்பட்ட விக்னேஸ்வரன் தலைமையிலான புதிய கூட்டணிக்குள் பங்காளிக் கட்சிகளுக்கும் விக்னேஸ்வரனின் கட்சிக்கும் இடையே சம அந்தஸ்து பேணப்படவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. விக்னேஸ்வர னின் கட்சிக்குள் மட்டுமில்லை பேரவைக்குள் மட்டுமில்லை கூட்டமைப்புக்குள் மட்டுமில்லை தமிழ் மிதவாத பாரம்பரியத்திலேயே உட்கட்சி ஜனநாயகம் எந்த அளவுக்கு பேணப்பட்டிருக்கிறது? சம்பந்தர் ஒரு ஜனநாயகச் சர்வாதிகாரி என்று ஒரு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சில ஆண்டுகளுக்கு முன்பு எனக்குக் கூறினார். ஆயுதப் போராட்டத்தில் உட்கட்சி ஜனநாயகம் அனேகமாக இருக்கவேயில்லை. 1980களில் இறுதியில் தனது கருத்துக்களை துணிச்சலாக முன்வைத்த காரணத்துக்காக கொல்லப்பட்டவர் மருத்துவர் ரஜனி திரணகம. இவர் அந்த நாட்களில் தன்னோடு பணிபுரிந்த ஓர் இளம் மருத்துவரிடம் (அவர் இப்பொழுது யாழ் போதனா மருத்துவமனை) யில் ஒரு மூத்த மருத்துவராக உள்ளார். இந்த அளவுக்கு ஜனநாயக மீறலை மனித உரிமை மீறலை எமது இளையவர்கள் எங்கிருந்து கற்றிருக்கிறார்கள்? எமது சமூக நிறுவனங்களிடமிருந்து தானே ? எமது பாடசாலைகள், எமது மத நிறுவ னங்கள், எமது சனசமூக நிலையங்கள், எமது வீடுகள் போன்றவற்றிலிருந்துதானே எமது இளைஞர்கள் மனித உரிமை மீறல்களை கற்றிருக்கிறார்கள்? எனவே இந்த வன்முறைகளுக்கு நாங்களும் பொறுப்புத்தானே என கேட்டுள்ளார்.



உண்மை. ஆயுதப்போராட்டம் எனப்படுவது, இன ஒடுக்கு முறையின் விளைவு. ஆனால் ஆயுதப் போராட்டத்தில் காணப்பட்ட மனித உரிமை மீறல்கள் சமூகத்தின் பண்பாட்டு வேர்களில் இருந்துதான் வந்தன. அதற்கு இன ஒடுக்குமுறை முழுஅளவு காரணம் அல்ல. குறிப்பிட்ட சமூகத்தின் ஜனநாயகப் பாரம்பரியம் பலவீனமாக இருந்திருக்கிறது என்பதே உண்மை.

இதுதான் ராக்கிங் போன்ற சகல விவகாரங்களுக்கும் காரணம். தமிழ்ச் சமூகத்தின் ஜனநாயகப் பாரம்பரியம் மிகவும் பலவீனமாக இருக்கிறது. பாலர் பாடசாலைகளிலேயே சிறந்த பெறுபேறுகளுக்காக பிள்ளைகள் மிரட்டப்படுகிறார்கள், தண்டிக்கப்படுகிறார்கள். பிள்ளைகளைத் திருத்துவதற்காகப் பிரம்பைத் தூக்கும்போது வகுப்பறை ஜனநாயகம் பலியிடப்படுகிறது. வீட்டில் ஜனநாயகம் பலியிடப்படுகிறது. சிறந்த பெறுபேறுகளுக்காக முதலில் பலியிடப்படுவது சிறுவர் உரிமைகள் அல்லது மாணவர்கள் உரிமைகளே. இது பாலர் பாடசாலையில் இருந்தே தொடங்குகிறது.



மாணவர்களை உடல் ரீதியாகவோ உளரீதியாகவோ தண்டிப்பது இலங்கைதீவின் சட்டங்களைப் பொறுத்தவரை தண்டனைக்குரிய குற்றம். ஆனால் சிறந்த பெறுபேறுகளுக்காகவும், ஒழுக்கத்தைப் பேணுவதை உறுதிப்படுத்தவும் மாணவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

இதைச் சமூகமும் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்கிறது. குறிப்பாக பெற்றோர் ஏற்றுக் கொள்கிறார்கள். அடியாத மாடு படியாது என்று கூறி தண்டனை நியாயப்படுத்தப்படுகிறது.

(02ஆம் பக்கம் பார்க்க)

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது சட்டப்படி குற்றமாக இருந்த போதிலும் பள்ளிக்கூடங்களிலும் வீடுகளிலும் அது ஒரு வழமையாகக் காணப்படுகிறது. இங்கிருந்து தொடங்குகிறது கல்விப் பரப்பில் ஜனநாயக மீறல், மனித உரிமை மீறல் இதைத் தடுப்பதற்காக இப்பொழுது திறன் வகுப்புகள் (பிள்ளை நேய வகுப்ப றைகள்) பள்ளிக்கூடங்கள் தோறும் உருவாக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு அணை என்ற பெயரில் ஓர் அமைப்பு செயல்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு எதிரான வன்முறை சார்ந்த தண்டனைகளை கட்டுப்படுத்துவதே இந்த அமைப்பின் இலக்காகும்.

எனினும் வகுப்பறைகளில் உடல் சார் தண்டனை பரவலாக நடைமுறையில் உண்டு. அது ஒரு பண்பாடு. அதைச் சட்டத்தின் மூலம் மட்டும் தடுக்க முடியாது. வகுப்பறை ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பும் போதே அது சாத்தியப்படும். வகுப்பறை ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவது என்றால் அதைக் கல்வித் திணைக்களத்தில் இருந்து தொடங்க வேண்டும். திணைக்களத்திற்கும் அதிபர்களுக்கும் இடையிலான உறவிலும் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான உறவிலும் திணைக்களத்துக்கும் ஆசிரியர்களுக்கும் கிடையிலான உறவிலும் இல்லாத ஜனநாயகத்தை வகுப்பறைகளில் உருவாக்க முடியாது. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் வீடுகளில் இல்லாத ஜனநாயகத்தை வகுப்பறைகளில் உருவாக்க முடியாது. எனவே இது பரந்த தளத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய ஒரு பண்பாட்டு மாற்றம். இதைச் சட்டங்களால் மட்டும் உருவாக்க முடியாது.

இவ்வாறானதோர் கல்விச் சூழலில் தான் உயர் கல்வி நிறுவனங்களில் ராக்கிங் ஒரு பண்பாடாக வளர்கிறது. கிளிநொச்சி வளாகத்தில் நடந்த ராக்கிங் தொடர்பில் சில மாணவர்கள் அகப்பட்டிருக்கிறார்கள். நவீன தொழில்நுட்பம் குறிப்பாக கைபேசிச் செயலிகள் அவர்களைக் காட்டிக் கொடுத்திருக்கின்றன. சில மாணவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கு கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால் சில மாணவர்களைக் குற்றவாளிகளாகக் காட்டிவிட்டு மற்றவர்கள் தப்பிக் கொள்ளப் பார்க்கிறார்கள். இதில் ஒரு கூட்டுப் பொறுப்பு உண்டு. ஒரு பண்பாட்டை ஏற்றுக்கொண்ட, அதை பின்பற்றுகின்ற எல்லோருக்கும் இதில் கூட்டுப்பொறுப்பு உண்டு. இது ராக்கிங் சம்பந்தப்பட்ட விடயம் மட்டுமல்ல, சமூகத்தின் ஜனநாயகப் பாரம்பரியம் சம்பந்தப்பட்ட ஒரு விவகாரமும் கூட. எனவே இதை அந்தத் தளத்தில் வைத்தே அணுக வேண்டும். இதை ஒரு சட்டப் பிரச்சனையாக மட்டும் அணுகாமல் அதற்கும் அப்பால் ஒரு பண்பாடாகக் கருதி எதிர்கொள்ள வேண்டும். ராக்கிங் தொடர்பில் சில பல்கலைக்கழக மாணவர்களின் நேர்காணல்களை பார்த்தேன். அவர்களில் பெரும்பாலானவர்கள் ராகிங்கை நியாயப்படுத்தவில்லை. அதே சமயம் இது தொடர்பில் மாணவர்களைக் குறை கூறும் எவரும் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய அரசியல் போராட்டங்களை கவனத்தில் எடுக்க வேண்டும் என்ற தொனி அவர்களுடைய கருத்துக்களில் இருக்கிறது. ஓர் ஒடுக்குமுறைக்கு எதிராக போராடும் ஒரு மாணவ சமூகம் தனக்குள் இருக்கும் ஒடுக்குமுறைக்குரிய ஓர் உப பண்பாட்டை எப்படிப் பார்க்கிறது? இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் ஒரு மாணவ சமூகம் சீனியர் ஜூனியர் என்ற அடிப்படையில் தனக்குள் ஒடுக்குமுறைப் பண்பாட்டை எப்படிப் பேண முடியும்?

யாழ் பல்கலைக்கழகம் ஈழப் போராட்டத்தின் முன்னணி மாணவப் படையாக செயற்பட்டிருக்கிறது. ராக்கிங் தொடர்பில் விடுதலைப்புலிகள் இயக்கத்தோடு முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. ஒரு மாணவன் காணாமல் போயிருக்கிறார். எனினும் தமிழ்ப் பல்கலைக்கழகங்கள் ஈழப்போராட்டத்தில் சரியான நேரத்தில் துணிச்சலான முடிவுகளை எடுத்துப் போராடி வந்திருக்கின்றன. குறிப்பாக 2009க்கு பின் எந்த ஒரு அரசியல் இயக்கமும் செய்யத் தயங்கிய போராட்டங்களை பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்தி ருக்கிறார்கள். இதற்காக சிலர் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல கடந்த ஆண்டு மாணவ ஒன்றியத்தின் இரண்டு தலைவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள். இப்பொழுதும் அந்த வழக்கு அவர்களைத் தொடர்கிறது. அந்த மாணவத் தலைவர்கள் இப்பொழுது மாணவர் ஒன்றியத்தின் பொறுப்புக்களில் இல்லை. அவர்களுடைய படிப்பு முடிந்துவிட்டது. ஆனால் மாணவர்கள் என்ற ஒரு கூட்டு அடையாளத்துக்காக அவர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்கை அவர்கள் இப்பொழுது உதிரிகளாக எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

இவ்வாறு தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் முன்வந்து போராடும் ஒரு மாணவ சமூகம் ஏன் ராகிங்கை நிறுத்த முடியாதிருக்கிறது? இங்கேதான் தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக உள்ளடக்கத்தித்தின் பலவீனம் தெரிகிறது.

ஏனெனில் தேசியம் எனப்படுவது ஒரு மக்கள் கூட்டத்தைத் திரளாக்குவது. எந்த அடிப்படையில் திரள் ஆக்குவது ? நிச்சயமாக மத அடிப்படையில் அல்ல. பிராந்திய அடிப்படையில் அல்ல. சாதி அடிப்படையில் அல்ல. பால் அடிப்படையிலும் அல்ல. சீனியர் ஜூனியர் என்ற அடிப்படையிலும் அல்ல. அவ்வாறு சமூக அசமத்துவத்தின் பேரால் மக்களை, மாணவர்களைத் திரளாக்குவது தேசியம் அல்ல. மாறாக ஒருவர் மற்றவருக்குச் சமம் என்ற அடிப்படையில், அதாவது ஜனநாயக அடித்தளத்தின் மீது மக்களை, மாணவர்களைத் திரளாக்க வேண்டும். இதைத்தான் தேசியவாதத்தை நியாயப்ப டுத்தும் அறிஞர்கள் அதன் உள்ளடக்கம் ஜனநாயகமாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

இதன்படி ஜனநாயகத்தை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்றால் அது தேசிய விடுதலைப் போராட்டம் அல்ல. எனவே சீனியர் ஜூனியர் என்ற அசமத்துவம் இருக்கும் வரை அந்த அசமத்துவத்தைப் பேணும் ஓர் உப பண்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அரசியற் சூழல் இருக்கும் வரை, அது முழுமையான பொருளில் ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக இருக்க முடியாது. ராக்கிங்கையும் நியாயப்படுத்தி, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தையும் நியாயப்படுத்த முடியாது. ராக்கிங் என்ற உப பண்பாட்டை ஏற்றுக் கொண்ட ஒருவர் ஒரு தேசியவாதியாக இருக்க முடியாது. இந்த முரண்பாட்டை தமிழ்ப் பல்கலைக்கழகங்கள் அதன் ஆழமான பொருளில் விளங்கிக் கொள்ளும் பொழுதே ராக்கிங் கட்டுப்பாட்டுக்குள் வரும். தமிழ் தேசிய தேசியத்தின் ஜனநாயகப் உள்ளடக்கமும் செழிப்படையும்.



# ஆசியாவே அலேர்ட்!

ஆர்.பிரகாஷ்

சீனா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், இலங்கை என்று ஒட்டுமொத்த ஆசியாவுமே அலேட்ர்டாகியுள்ளது. உலக வல்லரசின் தளபதி அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இந்தியாவுக்கு எதிர்வரும் 24ஆம் திகதி செல்லவுள்ளார். ஆசியாவின் வல்லரசாக வரத் துடித்துக் கொண்டிருக்கும் இந்தியாவுக்கு, உலக வல்லரசின் ஜனாதிபதி மேற்கொள்ளவுள்ள இந்தச் சுற்றுப் பயணம் ஒட்டுமொத்த ஆசியாவின் கவனக் குவிவையும் ஒருங்கே பெற்றுள்ளது. அதற்கு ஆசியாவின் மீதான அதீத அமெரிக்கத் தலையீடும் ஒரு காரணம் என்றால் அதில் மிகையில்லை.

**இந்தியா - ரஷ்யா ஒப்பந்தம்**

சுமார் 130 கோடி மக்கள் தொகையைக் கொண்டுள்ள இந்தியாவை, அமெரிக்கா தனக்கான மிகப்பெரும் சந்தையாகவே பார்க்கின்றது. அதுவே உண்மையும்கூட. ஒபாமாவின் ஆட்சிக்கால முடிவு வரை இருந்த இந்த நிலைப்பாடு ட்ரம்பின் ஆட்சியில் சற்றுத் தடம்மாறி நடைபோட ஆரம்பித்துள்ளது. ட்ரம்ப் ஆட்சிபீடம் ஏறியபின்னர், அந்நிய நாடுகளின் பொருள்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி வரிகளால் சீனா பெரிய அளவு பாதிப்பை எதிர்கொண்டாலும், இந்தியாவும் கணிசமான பாதிப்பை எதிர்கொண்டது என்பதை மறுப்பதற்கில்லை. இதனால், போர்த் தளபாடங்கள் முதல் உணவுப் பொருள்கள் வரை அமெரிக்காவிடம் இருந்து பெற்றுக் கொண்ட பொருள்களை படிப்படியாக ரஷ்யா பக்கம் மாற்றி வருகின்றது இந்தியா. ரஷ்யாவிடம் இருந்து இமாலயத் தொகைக்கு இந்தியா பெற்றுக்கொண்ட ரபேல் போர் விமானங்கள் அமெரிக்காவுக்கு விழுந்த பலத்த அடியாகவே கருதப்படுகின்றது. இந்தநிலையில், இந்தச் சுற்றுப் பயணத்தின் மூலம் இந்தியாவை பழையபடி தம் பக்கம் இழுத்துச் செல்வதற்கே ட்ரம்ப் விரும்புவார். இந்தியாவுக்கான பயணத்தை ஆரம்பிப்பதற்கு இரண்டு வாரங்கள் முன்னதா கவே இந்தியா தொடர்பில் ட்ரம்ப் மேற்கொண்டுள்ள அதீத புகழாரங்கள் இதையே பறைசாற்றுகின்றன.

> **ஆசிய வல்லரசாவதற்கு இந்தியாவுடனும் உலக வல்லரசாவ தற்கு அமெரிக்காவுடனும் பெரும் போட்டிபோட்டுக் கொண்டிருக்கும் சீனாவுக்கு எதிராக ஓரணியில் இணைவதற்கு ட்ரம்ப் - மோடி இடையிலான சந்திப்பில் காத்திரமான முடிவுகள் எட்டப்படலாம்.**

**சீனாவுக்கு எதிரான அணி**

ஆசிய வல்லரசாவதற்கு இந்தியாவுடனும், உலக வல்லரசாவதற்கு அமெரிக்காவுடனும், பெரும் போட்டிபோட்டுக் கொண்டிருக்கும் சீனாவுக்கு எதிராக ஓரணியில் இணைவதற்கு ட்ரம்ப் -மோடி இடையிலான சந்திப்பில் காத்திரமான முடிவுகள் எட்டப்படலாம்.

ஆசிய வட்டகையைப் பொறுத்தவரையில் பல தசாப்தங்களாக மிகப்பெரும் சர்ச்சைக்குள் இருக்கும் தென்சீனக் கடற்பகுதி, கேந்திர முக்கியத்துவம் மிக்க நிலையமாகவும் அமைந்துள்ளது. உலகின் மூன்றில் ஒரு பகுதி கப்பல் போக்குவரத்தும், ஆண்டுதோறும் சுமார் ஐந்து லட்சம் கோடி டொலர்கள் மதிப்பிலான சரக்குகள் பரிமாற்றமும் இந்தப் பகுதி யூடாக நடைபெறுவதாலும், இந்த கடலின் அடிப்பகுதியில் எண்ணெய், இயற்கை எரிவாயு வளம் இருப்பதாகச் சொல்லப்படுவதாலும், இது முக்கியத்துவம் பெற்றுள்ளது. தென்சீனக் கடல்பகுதியை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இதற்கெதிராக பிலிப்பைன்ஸ் சர்வதேசத் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடர்ந்தது. சீனாவுக்கு அதில் உரிமை இல்லை என்று முடிவாகியது. எனினும் சீனா விடுவதாயில்லை. இதனால் சீனாவுக்கு எதிராக ஏனைய நாடுகளை ஓரணியில் திரட்டிவரும் அமெரிக்கா இந்தியாவிடமும் தனக்கான ஆதரவைக் கோரும்.

அதுமட்டுமல்ல சீனாவிடம் இருந்து பிரிந்து செல்லவேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கின்ற ஹொங்கொங்குக்கு ஆதரவான முடிவுகளும் இந்தச் சந்திப்பில் எட்டப்படலாம். அதுபோன்று சீனாவின் ஆளுகைக்கு உட்பட்டுள்ள திபெத் தொடர்பிலும் மோடி - ட்ரம்ப் இடையிலான சந்திப்பில் கலந்துரையாட வாய்ப்புண்டு.

**பாகிஸ்தானுக்கு எதிர்ப்பு**

சீனாவுக்கு எதிராக இந்தியாவைப் பயன்படுத்துவதற்கு அமெரிக்காவுக்கு எத்தகைய தேவை இருக்கின்றதோ, அதேயளவு தேவை பாகிஸ்தானுக்கு எதிராக அமெரிக்காவைப் பயன்படுத்துவதற்கு இந்தியாவுக்கு இருக்கின்றது. மும்பைத் தாக்குதல், ஊரித் தாக்குதல், பாலகோட் அத்துமீறல், காஷ்மீர் பிரச்சினை என்று கடந்த சில வருடங்களில் மாத்திரம் எண்ணற்ற மோதல்கள் இந்தியா - பாகிஸ்தான் இடையில் ஏற்பட்டுள்ளது. இதனால், பாகிஸ்தானை சர்வதேச அரங்கில் இருந்து தனிமைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுவரும் இந்தியா, அதற்காக மிகச் சிறந்த பகடைக்காயாக அமெரிக்காவுடனான இந்தச் சந்திப்பைப் பயன்படுத்தும்.

உலக அரசியல் என்பதே, ஒன்றுடன் இன்னொன்று நெருங்கித் தொடர்புடைய பின்னணி கொண்டது. ஆதலால் இந்தியாவுடனான அமெரிக்காவின் இந்தச் சந்திப்பு, இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிவற்றுக்கு மட்டுமன்றி, ஒட்டுமொத்த ஆசிய வட்டகைக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றே முடியாததே. சுருங்கச் சொல்லின் ஆசியாவே தற்போது அலேர்ட்.

## மீண்டும் 'அதிபர் வருத்தம்'

வடமராட்சி வலயத்தில் உள்ள பிரபலமான மகளிர் பாடசாலை அது.

வழக்கமாக இப்போது பெரிய பாடசாலைகளுக்கு வரும் 'அதிபர் நியமன' வருத்தம் அந்தப் பாடசாலைக்குத் திரும்பவும் வந்துவிட்டது. ( முன்னரும் யார் அதிபர் என்ற அதிகாரப் போட்டி நீதிமன்றம் வரை சென்றமை குறிப்பிடத்தக்கது)

அந்தப்பாடசாலையில் இதுவரை அதிபராக இருந்தவர், கடந்த வருட இறுதியோடு ஓய்வு பெற்றிருந்தார். அப்படி ஓய்வு பெறுவதற்கு முன்னர், அவர் அதிபர் தரத்தில் இல்லாத ஆசிரியை ஒருவரை பிரதி அதிபர்களில் ஒருவராக ஆக்கி அழகு பார்த்திருந்தார். இத்தனைக்கும் அந்தப் பாடசாலையில் அதிபர் தர நிலையில் உள்ள இருவர், பிரதி அதிபர்களாக உள்ளனர். அவர்களுக்கு மேலதிகமாக , இப்படி அதிபர் தரத்தில் இல்லாதவரை பிரதி அதிபர் ஆக்கியமை, பாடசாலை வட்டாரத்தில் பெரும் புகைச்சலை உருவாக்கி இருந்தது.

இப்போது அதிபர் ஓய்வு பெற்றுவிட, அடுத்த அதிபர் யார் என்ற கேள்வி எழுந்தது. அதிபர் தரப் பரீட்சையில் சித்தியடைந்திருந்த இரண்டு பிரதி அதிபர்களில் ஒருவர், பதில் அதிபராக நியமிக்கப்பட்டார்.

இருப்பினும், அதிபர் தரப் பரீட்சையில் சித்தியடையாமலே பிரதி அதிபராக்கப்பட்ட ஆசிரியை, தானே அதிபர் என்ற ரீதியில் சக ஆசிரியர்களுக்கு நாட்டாமை காட்டத் தொடங்கியுள்ளார். இன்னும் அதிபர் பதவிக்கு எவரும் நிரந்தரமாக நியமிக்கப்படாததால், அதிபர் தர நிலையில் உள்ள மற்றைய இருவரும் கொஞ்சம் அடக்கி வாசிப்பது, இந்த ( அதிபர் தர நிலை இல்லாத) நாட்டாமைப் பிரதி அதிபருக்கு வசதியாகப் போய்விட, தனி ஆவர்த்த னம் வாசித்து, ஆசிரியர்களை அடக்கி ஆண்டு, தானே அதிபர் என்னும் மாயையை உருவாக்க நினைக்கிறாராம். அதனால் யார் அதிபர் என்று பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் குழம்பத் தொடங்கியுள்ளனர்.

இது விடயத்தில் "வடமராட்சி வலயம் பொறுப்பாக நடந்து, பழைய அதிபர் ஓய்வுபெற்றவுடன் புதிய நிரந்தர அதிபரை நியமிக்க உடனடி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யாமல் வலயம் காட்டிவரும் அசமந்தத்தால் ஒரு பாடசாலை நிர்வாகம் குழம்பிக் கொண்டிருக்கிறது. இனியாவது வலயம் நிரந்தர அதிபரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமா?" என பாடசாலை நிர்வாகத்தினர் கேள்வியெழுப்பு கின்றனர். இதற்கு வலயம் என்ன பதில் சொல்லப்போகிறது?

## கூட்டமைப்பின் ஆள்



யாழ். மாவட்டச் செயலர் பதவியில் இருந்து நா.வேதநாயகன் ஓய்வு பெற்றுள்ள பின்னணியில் மிகப்பெரிய அரசியல் பழிவாங்கல் இடம்பெற்றுள்ளதைச் சகலருமே அறிவர். எனினும் அந்தப் பழிவாங்கலின் சில ஆழ, அகலங்கள் பொதுவெளிக்கு வராததால் அவைபற்றி காதில் கேட்டவற்றை இங்கே பகிர்கிறோம்.

ஆட்சி மாற்றம் நிகழ்ந்தவுடனேயே வேதநாயகன் மீது அரசியல் அழுத்தங்கள் அதிகரிக்கத் தொடங்கின. அரசின் 'உள்ளூர்க் கைத்தடி' சொல்வதற்கு "ஆமாம் சாமி" போட அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார். ஒரு அதிகாரியாக அவர் எழுதும் கடிதத்தைக் கூட 'உள்ளூர்க் கைத்தடி'யின் பணிப்பிலேயே எழுதியதாக ஒரு முன்னுரையோடு தொடங்குமளவுக்கு அவர் மீதான நெருக்குவாரங்கள் இறுகிக் கொண்டே வந்தன. ஆனாலும் அவர் எல்லாவற்றுக்கும் தலையாட்டி பொம்மையாக இராமல், நேர்மையாக நடக்க முற்பட்டதன் விளைவாக அரசின் கோபப்பார்வை அவர் மீது விழுந்தது.

ஆட்சி மாற்றம் நடந்தவுடனேயே, 'உள்ளூர்க் கைத் தடி'யின் உதவியுடன் , அரச உயர்மட்டத்தின் கால்களில் விழுந்த இரண்டு நிர்வாக அதிகாரிகள், வேதநாயகன் பற்றி பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கு "வேதநாயகன் கூட்டமைப்பின் ஆள். அதனால் தான் அரசுக்கு எதிராக நிற்கிறார்" எனப் போட்டுக் கொடுத்து , எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றினர். "உடனடியாக வேதநாயகனை இடமாற்றுங்கள்" என்று அமைச்சர் கடிதம் அனுப்ப , அதற்கு அமைச்சின் மேலதிக செயலர் " இன்னும் 3 மாதத்தில் ஓய்வுபெறவுள்ள அரச அதிகாரியை இடமாற்றம் செய்யமுடியாது" என்று தாபனக் கோவையை ஆதாரமாக வைத்து மறுத்தான் அடித்தார். ஆனால், அமைச்சுத் தரப்பிலிருந்து அடுத்த அஸ்திரம் எய்யப்பட்டது.

"வேதநாயகன் இறுதிப்போரின் பின்னர் பிடிக்கப்பட்டு, தடுப்பில் வைக்கப்பட்டு விடுவிக்கப் பட்டவர். எனவே அந்த விவகாரத்தை தோண்டியெடுத்து அவர் மீதான விசாரணையை மீள ஆரம்பியுங்கள்" என்று உத்தரவு பறந்தது. இதன் பின்னரே இனியும் அடங்கமறுத்தால் தலைக்கே அது உலை வைத்துவிடும் என்பதால், தன்னுடைய ஓய்வை மூன்று மாதத்துக்கு முன்னரே அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் வேதநாயகனுக்கு எழுந்தது. இப்போது சொல்லுங்கள், வேதநாயகன் ஓய்வு பெற்றது அரசியல் பழிவாங்கலாலா? இல்லையா?



- மின்னல்

## அதிரடி அரங்கு

## நியாயங்களின் மறுபக்கம்

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் ஒரு வலயக் கல்விப்பணிப்பாளரைப் பற்றிய குற்றச்சாட்டுகள் சிலவற்றை அதிரடி அரங்கில் அலசியிருந்தோம். ஆனால் கல்விப்பணிப்பாளர் தரப்பு நியாயங்களை கல்விச் சமூகத்தைச் சேர்ந்த சிலர் எம்மோடு தொடர்புகொண்டு கூறியிருந்தனர். பணிப்பாளர் மீதான குற்றச்சாட்டுகளை நாம் வலிந்து கண்டுபிடிக்கவில்லை. எனவே பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு தமது நியாயத்தைக் கூற இடமளித்ததைப் போல..பணிப்பாளர் தரப்பின் நியாயத்தைக் கூறவும் இடமளிக்க வேண்டியதே அறம். அந்த வகையில் பணிப்பாளர் மீதான குற்றச்சாட்டுக்கு அவரது அபிமானிகளால் கூறப்பட்ட நியாயங்களையும் இங்கே தருகின்றோம்.

**குற்றச்சாட்டு 1:**

*" கல்விப்பணிப்பாளரின் இடமாற்றப்பழிவாங்கல், கடுமையான வார்த்தைப் பிரயோகங்களால் ஆசிரியை ஒருவர் மனவுளைச்சலுக்கு உள்ளானார். சில நாட்களில் அவர் தீமூட்டி இறந்தமைக்கும் இதுவே காரணமாகச் சிலரால் சொல்லப்பட்டது"*

**பணிப்பாளர் தரப்பு:**

குறித்த ஆசிரியையின் மகள் கல்விப்பணிப்பாளரிடம் வைத்த கோரிக்கைக்கு அமையவே அந்த இடமாற்றம் ஆசிரியைக்கு வழங்கப்பட்டது. தவிர, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த ஆசிரியையை இடமாற்ற விடயம் தொடர்பில் கல்விப் பணிப்பாளர் சந்திக்கவோ, உரையாடவோ இல்லை. பணிப்பாளர் திட்டியதால் மனவுளைச்சல் ஏற்பட்டதாலேயே, தனக்குத் தீமூட்டினார் என்ற தகவல் அபாண்டமானது.

**குற்றச்சாட்டு 2:**

*ஆசிரியர் ஒருவருக்கு 2 வருடங்களில் 4 இடமாற்றங்கள் வழங்கப்பட்டன*

**பணிப்பாளர் தரப்பு:**

குறித்த ஆசிரியர் தொடர்பான முன்னைய இடமாற்றங்கள் இடம்பெற்றபோது, கல்விப்பணிப்பாளராக இருந்தவர் வேறு நபர். எனினும் அப்போது கூட பண்டத்தரிப்பு இந்துவில் ஆசிரியர்கள் மேலதிகமாக இருந்ததால், அவர் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டார். பின்னர் அந்தப் பாடத்துக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் ஆசிரியர் இல்லாமையால், பண்டத்தரிப்பில் இருந்த ஆசிரியர் அங்கு இடமாற்றப்பட்டார். இப்போது பண்டத்தரிப்பு இந்துவில் ஏற்பட்ட ஆசிரிய வெற்றிடத்துக்கு மகளிர் கல்லூரியில் இருந்த சம்பந்தப்பட்ட ஆசிரியர் மீண்டும் நியமிக்கப்பட்டார். இதுவே அந்த இடமாற்ற விபரம். ஆகவே அவர் பழிவாங்கும் நோக்கோடு அந்த இடமாற்றம் செய்யப்படவில்லை.

இனி முடிவெடுப்பது வாசகர்களின் கையில்!

## முகமூடி ஏன்?

சர்வா



"சம்பந்தர் ஒருக்கா வருத்தம் வந்து முந்தியொருக்காச் சந்திக்கப் போனவரெல்லே. அப்ப அவையள் இரண்டு பேரும் ஏன் முகத்தை மூடிக் கவசம் போட்டிருந்தவை, சொல்லு பாப்பம்?" எண்டு சொக்கன் கேட்டான்.

"எட விசரா.!அது உனக்குத் தெரியாதே ! சீனாவிலை இப்ப கொரோனாக் காய்ச்சல் எல்லாருக்கும் தொத்துதெல்லே? அந்தப் பயத்திலை தான் அவை முகத்தை மூடிக்கொண்டிருந்து சம்பந்தரோடை கதைச்சவை." எண்டு சோமண்ணை சொன்னார்.

"சோமண்ணை! மறுமொழி தெரியாட்டித் தெரியாதெண்டு சொல்லு. அதுக்காக என்னைப் பேக்காட்டலாமெண்டு நினைக்காதை. என்ன? இப்ப நான் சொல்லுறன். கேள்" எண்டு சொக்கன் கோபத்தோடை கதைக்க, சோமண்ணைக்குச் சிரிப்பு வந்திட்டுது.

"சம்பந்தருக்கு கொரோனாக் காய்ச்சல் வரேல அப்ப. அவருக்குக் கொரொனாக் காய்ச்சல் வந்திருந்தாலும் கூட, மஹிந்தாவும், மேனும் அதுக்குப் பயப்பிட மாட்டினம். ஏனெண்டால் அவை சீனன்ரை பிடிக்குள்ளை எப்பவும் இருக்கிறவை. சீனன் அதுக்குரிய பாதுகாப்பை எல்லாம் அவைக்குச் செய்து வைச்சிருக்கிறான். மஹிந்தன்ரை கையிலை எல்லாக் காய்ச்சலுக்கும் பொதுவா ஒரு கயிறு கட்டி அதோடை அவற்றை கையிலை ஒரு பஞ்சலோகச் சிலை ஒண்டையும் சீனாக்காரன் குடுத்து வைச்சிருக்கிறதை நீ பாக்கேல்லையே!. அவர் எப்பவும் அதைக் கையிலை வைச்சு பாதிரியார் சிலுவையைச்சுழட்டுற மாதிரிச்சுழட்டிக்கொண்டுதான் இருப்பார். அந்தப் பஞ்சலோகத்தின்ரை பவரா லைதான் அவர் வெண்டவராம். அப்ப எந்தக் கிருமியும் மஹிந்தா குடும்பத்தைத் தொத்தாது. இருந்தும் மஹிந்தா பயப்பிட்டதுக்கு நியாயம் இருக்கு .கொரோனட்ட தப்பினாலும் சம்பந்தரிட்ட தப்ப ஏலாது எண்டுதான் அப்பிடிப் போனவை" எண்டு சொக்கன் சொல்ல சோமண்ணை சொக்கனிட்டை சறண்டராகிப் போனார்.



# மௌன மொழி 4

கவிதைக்கு பரிசு 1000/-

உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்: 21.02.2020

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: uthayansanjeevi@gmail.com

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

ஆறறிவு படைத்த மனிதா - நீ
அகிலமதை ஆள வேண்டுமடா
அலைபேசித் தொடுதிரைக்குள் - நீ
அடங்கிவிட்டாயடா

இயந்திர மனிதனவன் கையில்
ஏட்டுடனே எழுந்து விட்டான்
இனியாவது சிந்திப்பாயா உன்
எதிர்காலம் எவர் கையில்.....?

**கி.சர்மிஜா**, சாவகச்சேரி

பாழடைந்த செல்போனிடம்
பாரி விழுந்துவிட்டாயடா
மானிடா உன் வாழ்க்கை
மாண்டு விட்டதடா
ஏடு தூக்கும் கையிலே
ஏந்தினாயடா செல்போனை
இயந்திர உலகைத் தோற்கடிக்க
இனியாவது எழுந்து வா!!!

**கிருபாரூபன் சுதர்மிகா**
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

வேர்கள் பிரிந்தன
விழ்ந்து கிடந்தது மாணிடம்
போராடும் மனிதம்
போனோடு சாய்ந்தது
ஓரமாய் ஒரு புறத்தில்
விஞ்ஞானத்தின் கையில்
எழுந்தது ஓர் படைப்பு

**பவதாரிணி சத்தியநாதன்,**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நிமிர்ந்து பார் முன்னே
ஏறும்படி முன்னேறும்படி
குனிந்து படி முன்னேற்றப்படி
இருண்ட யுகம் மனிதனாக மாறி
இயந்திர யுகமானது
ஏடு பிடித்த இயந்திரம் இயங்கும் மனிதனாக
மனிதன் இயந்திரமானான்
மறைந்ததே மனிதம்.

**தி.புவனேஷ்**
பருத்தித்துறை வீதி, மட்டுவில், சாவகச்சேரி.

தொலைபேசிக்குள்
தொலைந்து போனது
உங்கள்
தேடல்கள் மட்டுமல்ல
வாழ்க்கையும் தான்!

**க.நாகேஸ்வரா**
சண்டிலிப்பாய்

பரிசு பெறும் கவிதை

ஆறறிவு படைத்த
அரிய மானிடரெல்லாம்
பேரிடர் தேடி – கை
பேசியில் மூழ்கிட
நூலறிவு நுகர
நுண்ணறிவு பெருக
காலத்தேவை கண்டு
கணனி மனிதன்
கற்கின்றான் இன்று.

**வேலாயுதபிள்ளை பாமா**, முல்லைத்தீவு

சிட்டுக்குருவியின் அலறலும்
பறவைகளின் கதறலும்
மனிதனின் காதுகளில் ஒலிக்கவில்லை
அவன் கண்கள் மட்டும் ஏதோ ஒன்றைத் தேடுகின்றன
இப் புவியில் அல்ல இன்ரநெற்றில்
கால்கள் செல்லும் பாதைகள் தெரியவில்லை
அவனுக்கு
விரல்கள் தொடுகின்ற தூரத்தில் செல்கிறான்
மனித ரோபோக்களாக..........

**ய.நொயிலின் யூடிற்**, யாழ்ப்பாணம்

# மௌன மொழி



இரண்டாம் கவிதைகள்

சிந்தனையில் உதித்து
சித்திரமாய் இருந்தவனுக்கு
சித்தம் கொடுத்தவனே - தன்
சித்தம் இழந்து திரிகின்றான்.
அழிவு காலம் நெருங்கிவிட்டது
ஆறறிவு படைத்தவனே விழித்தெழடா!
இன்னும் என்ன மயக்கம்? - உனக்கு
ஈடாக இவ் உலகில் எவருண்டு???

**திருமகள்**
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

நூறாயிரம் வரு நூலும்
நூறாயிரம் விலை பேசியும்
பேசாமலே முட்டிக் கொள்ள - தலை
குனிந்த படியே மூழ்கிச் செல்லும் மனிதரும்
முன்னேற முடியாமலே மூழ்கியது மனிதம்.

**தி.பாரதி, நாவற்குழி**

நாம் ஆளப்பிறந்தவை இங்கே
நம்மை ஆழத்துணிந்தனவோ!!
தலை நிமிர்ந்து நடந்தவனை இன்று
தலை குனிய வைத்தனவோ!!
எந்திரனே மாறத் துணிந்து விட்டான் ஆனால்
எம்மவரே மடியத் துணிந்து விட்டனர்!!
மனிதா விழித்தெழு உன் சிந்தனையில் உதித்தவனே
உனைச் சிதைக்கக் காத்துள்ளான்.

**ம.திருமாறன்**
யாழ். இந்துக் கல்லூரி

கொடுத்து, நேர் முகம்
பார்த்து புன்னகைக்க மறந்தோம்
கைபேசி ஒளியே வாழ்க்கைக்கு வழி என்று
அலைந்து திரியும் கூட்டமானோம்

இயந்திரங்களாகிப் போன
மனிதர்கள் மத்தியிலே,
இயந்திரங்கள் தான்
மனிதர்களாக மாண்புடன் வாழத் தொடங்கும் போல.

**யதுர்ஷா**

தூரமாக இருந்தவைகளை
இணைத்த இணையம் தான்
இதயங்களை தொலைவாக்கியிருக்கிறது.......
உன் உணர்வுகளையெல்லாம்
இயந்திரங்களுக்குள் புகுத்திவிட்டு
நீ இயந்திரமாகிப் புதைந்து போகிறாயோ?
தொலைபேசிகளை தூரமாக்குங்கள்.....
தொலைத்த அன்பு துளிரட்டும்!!!!!!

**பிரபாகரன் வேதிகா**, யாழ். பல்கலைக் கழகம்.

புதுயுக மனிதர்களே
விந்தை மிகு உலகு நாடி
எங்கே செல்லுகிறீர்கள்?
மனித உறவுகள்
மறந்து நோக்குவது
கையடக்கத் தொலைபேசியோ?
இயந்திர மனிதன் அறிவு பெற
இன்னும் கற்று ஆராய்வதோ?

**சிவரம்யா**

ஆறறிவு படைத்தவனெல்லாம்
அன்ரொயிடினில் மூழ்கிப் போக
இரும்பினால் பிறந்த எந்திர மனிதன்
அறிவினைத் தேடி அமர்ந்திருக்கும் அதிசயம் இது...
ஓவியம் வரைய வேண்டிய பிஞ்சுக் கைகள்
"ஒன்லைனிலே "பப் விளையாட
உருக்கினால் வைத்த உலோகக் குழந்தையெல்லாம்
காவியத்தில் காவியம் படைக்கும் கலிகாலமும் இது!!!!

**ம.சேவியர் சுதர்சன்**, யாழ்ப்பாண்ணம்

கைகளுக்குள் உலகமின்று
அடக்கமானது
வாழ்வியலின் விழுமியமும்
அடக்கமானது
முகமுகமாய் பேசி ரொம்ப
நாளானது
கைப்பேசி மனிதகுல
சிறையானது


**ஜே.எம்.ரி.றொட்றிகோ,**
55 டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்.

மனிதனே! எப்படி வாழவேண்டும் என்று
இயந்திரத்தை பார்த்துக் கற்றுக்கொள்
இப்படி வீணே அலைவதை விடுத்து
உனக்குள் இருப்பதை தேடிக் கொள்.....
இருக்கின்ற வாழ்க்கையை வாழ்வதற்காக
இல்லாத விடயத்தை இயந்திரத்தில் தேடுகிறாய்
செல்லும் பாதையில் சிறுகனம் திரும்பிப்பார்
செல்பேசி தேவையில்லை நூல் ஒன்றே போதும்.....

**ச.சர்ஜிகன்**
யாழ்ப்பாணம் இந்து கல்லூரி.

உணர்வற்ற உருக்கிற்கு
ஊக்கமளித்துவிட்டு உயிர்போகும் உரையாடலில்
உருக்குலைந்து போனது-எம் மனிதம்
உள்ளங்கையில் செல்போன் கொண்டு- அதற்கு
உருத்தெரியும் விழித்தரையை உரமாக்கி
உளவியல் வைத்தியம் தேடும் நீ...
உன்னைப் போல் இந்த உலகம் இருக்குமட்டும்
உலகமே உந்தன் கையில் என்பாய்... அசட்டுத்தனமாய்

**பழனிச்சாமி கிருஷ்ணவேலி,**
மலையாளபுரம், கிளிநொச்சி





# ஒரு தாயின் கண்ணீர்க்குரல்

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

எங்கே எப்படியான சூழல் உருவாகும் என்று சொல்ல முடியாத வாழ்க்கை எம்முடையது. போரும், அது உண்டாக்கிய துயரும் நீங்காத நிழலாக எம்மைச் சுற்றிப் படிந்துள்ளது. எவ்வளவு காலங்கள் சென்றாலும் அது ஏதோ ரூபங்களில் நின்றாடுகிறது. பாருங்கள், கடந்த வாரம் (பெப்ரவரி 2020 முதல் கிழமை) பளையில் ஒரு திருமணத்துக்குச் சென்றிருந்தேன். வாசலில் வைத்திருந்த நிறைகுடத்தருகில் நின்று வரவேற்றுக்கொண்டிருந்தவர்கள் பன்னீர் தெளித்து, திலகமிட்டகையோடு என்னை அழைத்துச் சென்று மணப்பந்தலில் (மணவறையில் அல்ல) அமர்த்தினார்கள். அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் அறிமுகப் புன்னகையை உதிர்த்து முடிக்க முன்னே, ஒரு முதிய பெண் வந்து என்னுடைய கைகளைப் பிடித்து அழுத்திக்கொண்டு "என்னைத் தெரியுதா?" என்று கேட்டார்.

திரும்பிப் பார்த்தேன்.

"மணியக்கா!"

கணத்திலேயே கண்கள் நிறைந்து கண்ணீர் உதிர்ந்தது.

கைகளை இன்னும் அழுத்தமாகப் பிடித்துக் கொண்டே எதையோவெல்லாம் சொல்லத் தொடங்கினா மணியக்கா. குரல் உடைந்து தழுதழுத்தது.

"பார் தம்பி என்ரை கோலத்தை, வெற்றியண்ணை படுக்கையில விழுந்திட்டார். நானும் திரியாத இடமில்லை. பார்க்காத ஆட்களில்லை. சம்மந்தன், மாவை, டக்ளஸ் தேவானந்தா, சந்திரகுமார், விஜயகலா, அங்கயன் என்று எல்லாரையும் பார்த்துப் பேசியிட்டன். ஆனால் ஒருத்தரும் ஒழுங்கான பதிலைச் சொல்லுகினமில்லை. ஒரு முடிவும் கிடைக்குதில்லை. எல்லாரும் ஒருமித்து நிண்டு கேட்டால் நல்லது நடக்கும் எண்டு நம்புறன். ஆனால், அதைத்தான்





செய்ய மாட்டினமாம். மூவாயிரம் பேரிட்ட கையெழுத்து வாங்கிக் கொண்டு போய் ஜெயலலிதாவிட்டைக் குடுத்தன். அதுக்குள்ள அந்த மனசி போய்ச் சேர்ந்திட்டுது. அதுக்குப் பிறகு ஆரும் இதைப்பற்றிக் கதைக்கிறதாகக் காணேல்ல. இனி என்ன செய்யிறதெண்டும் தெரியேல்ல....இந்தியத் துணைத்தூதுவரிட்டைப் போய் இன்னுமொரு கடிதத்தைக் குடுப்பம் எண்டு யோசிக்கிறன். வேற என்ன தான் செய்யிறது? என்னாலயும் இதுக்கு மேல ஒண்டுக்கும் ஏலாதப்பு. உடம்பும் கெட்டுப்போச்சு. இந்தியாவுக்குப் போய் வாறதே பெரிய கஷ்டமாக்கிடக்கு. அதைவிட இப்ப பிள்ளையைப் போய்ப் பார்க்கிறதே பெரியபாடு. போனகிழமை பிள்ளைதான் (மகள்) போய்ப் பார்த்தவள். சிறையில வரவரக் கெடுபிடி கூடிக்கொண்டு போகுதாம். சாப்பாட்டுச் சாமான்களைக்கொண்டு போய்க்குடுக்கிறதுக்கே பெரிய கட்டுப்பாடுகளை விதிச்சிருக்கிறான்கள்.

பிறகு லோயரைப் பிடிச்சுத்தான் கொஞ்சச் சாமான்களைக் குடுத்திட்டு வந்திருக்கிறாள். அவன் சாமியார் மாதிரி ஆகியிட்டான். ஒரு நேரச் சாப்பாடுதான். அதுவும் சைவந்தான். தாடியும் தலையும் வளர்ந்து சாமிக் கோலத்தில இருக்கிறான். ஆள் மெலிஞ்சு உருக்குலைஞ்சு போனான். தலைதான் மிஞ்சிக் கிடக்குதாம்.... "

இதற்குமேல் அவரால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. விம்மி விம்மி அழத் தொடங்கினார். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. எனக்கு மட்டுமல்ல, பக்கத்திலிருந்தவர்களுக்கும்தான்.

இந்தத் துயரம் சாதாரணமானதல்ல. முப்பதாண்டுகளாகச் சிறையில் வாடும் தனது மகன் குறித்த தாயின் உணர்வு அது. ஆறாத் துயரம் அது. மகனை விடுவிக்க வழிதெரியாமல் தவிக்கும் அன்னையின் வற்றாத கண்ணீர் அது.

மணியக்காவையும் அவருடைய கணவர் வெற்றிவேலு என்ற வெற்றியண்ணையையும் பிள்ளைகள் ராஜி, முருகன் எல்லோரையும் பல ஆண்டுகளாகவே அறிவேன். வெற்றியண்ணை பளையில் சகோதரரோடு இணைந்து கடையொன்றை நடத்தி வந்தார். மணியக்கா ஊர்த்தொண்டு என்று சொல்லக்கூடிய அளவுக்கு எல்லோருக்கும் உதவுவதிலும், அனுசரணையாக இருப்பதிலும் கரிசனை காட்டினார். ராஜி ஆசிரியையாகிப் படிப்பித்துக் கொண்டிருந்தாள். பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்திக் கொண்டு இயக்கத்தில் சேர்ந்தவன் முருகன்.

அது 1980 களின் நடுப்பகுதி.

போராளியாக அவனை நான் ஒரு போதுமே சந்திக்க வாய்த்ததில்லை. ஆனால், 1991 இல் இந்தியாவில் உள்ள ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தி படுகொலையானதை அடுத்து கைது செய்யப்பட்டவர்களின் பட்டியலில் முருகனுடைய பெயரும் வெளியாகியது. அப்பொழுதுகூட முருகனை நான் அடையாளம் காணவில்லை. சில நாட்களின்பின்பே அந்த முருகன், வெற்றியண்ணை - மணியக்கா குடும்பத்தின் பிள்ளை என்று தெரிந்தது.

பதறிப்போனது ஊர். நாங்களும்தான். ஆனாலும் என்ன செய்ய முடியும்?

அன்று கைது செய்யப்பட்டவர்களின் பட்டியலோ, அன்று மிக நீண்டது. பின்னர் அதை வடிகட்டி இருபத்தாறு பேரைக் குற்றவாளிகளாக்கினார்கள். பிறகு அதையும் வடிகட்டி எட்டுப்பேராக்கினார்கள். பிறகு ஏழாகியது. அதில் மூவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஏனையோருக்கு ஆயுள் தண்டனை. தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட மூவரில் முருகனும் ஒருவர். இப்பொழுது முருகனுக்கு தூக்குத்தண்டனை விலக்களிக்கப்பட்டு ஆயுள் தண்டனையாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆயுள் தண்டனையைக் குறைத்து முருகனை விடுதலை செய்யுமாறு எல்லோரும் கேட்கிறார்கள். இன்னொரு தண்டனைக் கைதியான பேரறிவாளனின் விடுதலைக்காக அவருடைய அம்மா அற்புதம்மாள் ஊர் ஊராக, நகரம் நகரமாக அலைந்து எல்லோரிடமும் கையெழுத்து வாங்கி ஒப்படைத்திருக்கிறார்.

தொடர்ந்தும் பல போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார். ராஜீவ் காந்தியின் பிள்ளைகளான ராகுலும் பிரியங்காவும் கூட மன்னிப்பை வழங்குங்கள் என்று கூறியிருக்கிறார்கள். ஆனாலும் சட்டத்தின் பூட்டு திறக்கப்படாமலே உள்ளது. இதற்குப் பின்னால் நடக்கும் அரசியல் நாடகங்கள் கருணைக்கு எதிரானவை.

அற்புதம்மாளைப்போலத்தான் மணியக்காவும் அலைந்து கொண்டும், உலைந்து கொண்டுமிருக்கிறார். டெல்லிவரை சென்று ராகுலையே சந்திக்க முயன்றிருக்கிறார். அவர்களிடம் தன்னுடைய மகன் சார்பாக மன்னிப்பையும் விடுதலையையும் கோரியிருக்கிறார்.

எப்போதோ நடந்த ஒரு நிகழ்வு. ஒரு அரசியல் நடத்தையின் விளைவு. அந்த நிகழ்வின் தூண்டு விசைகளுக்குரியவர்கள் என்று சொல்லப்படும் விடுதலைப்புலிகள் இயக்கமே இன்றில்லை. அதனுடைய தலைவர்களுமில்லை. கொலைக்காளாகியவரின் குடும்பத்தவர்களும், மனித உரிமைவாதிகளும், பொது மக்களும் கூட நடந்தவற்றுக்கான தண்டனை போதும். இனி அவர்களை விடுவியுங்கள் என்று பகிரங்கமாகவே சொன்ன பிறகும், சட்டம் மட்டும் எந்தத் தளர்வுமின்றி அப்படியே உள்ளது. தண்டனைகள் அப்படியே தொடர்கின்றன. காலம் கடந்து நீண்டு செல்கிறது. இந்த நிலைமைகளில் மட்டும் எந்த மாற்றத்தையும் அது உண்டாக்கவில்லை. அதற்கு அதற்கான சக்தியில்லை. ஏனெனில் அது அதிகாரத்தோடு சம்மந்தப்பட்டது.

அதிகாரத்தோடு சம்பந்தப்பட்ட எதையும் காலத்தினால் எளிதில் மாற்ற முடிவதில்லை என்பதால், முருகனும் சிறையிலே ஆண்டுகளைக் கழிக்க வேண்டியிருக்கிறது. பருவங்களைக் கழிக்க வேண்டியிருக்கிறது. இன்று முருகன் ஏறக்குறைய முதுமைக்கோலத்திற்கு வந்து விட்டான். அவனுடைய அம்மா, அப்பாவையும் விட அவன் முதுமை அடைந்து கொண்டிருக்கிறான். ஆளை அடையாளமே தெரியாத அளவுக்கு உடலமைப்பில் மாற்றம் நிகழ்ந்துள்ளது. ஆனால், சிறையிருப்பு மட்டும் மாறவில்லை. இதற்கு அதிகாரத் தரப்புகளது பிடிவாதமே காரணமாக இருக்கிறது என்றால் அதிகாரத்திலிருப்போரின் மனநிலையை என்னவென்று சொல்வது?

மக்களுக்காக அதிகாரம் இல்லாமல், அதிகாரத்துக்காகவே மக்கள் என்ற நிலை தானே இது?

மணியக்காவை எப்படி ஆறுதல்படுத்துவது என்று எனக்குப் புரியவேயில்லை. முதுமையில் வேறு தளர்ந்துபோயிருக்கிறார். கணவர் வேறு படுக்கையில். இந்தக் கட்டத்திலாவது பிள்ளையின் விடுதலை யைப் பற்றிய நம்பிக்கை தரும் சேதி வராதா என்பதே அவருடைய ஏக்கம். இதற்குள் இன்னொரு சேதியையும் அவர் சொன்னார். முருகனின் மகள் (முருகன் - நந்தினி) இன்று இதைப்பற்றியெல்லாம் பேச முடியாத - பேச விரும்பாத ஒரு சூழலில் வாழ்கிறாள்.

(17ஆம் பக்கம் பார்க்க)

**"அதிகாரத்தோடு சம்மந்தப்பட்ட எதையும் காலத்தினால் எளிதில் மாற்ற முடிவதில்லை என்பதால், முருகனும் சிறையிலே ஆண்டுகளைக் கழிக்க வேண்டியிருக்கிறது. பருவங்களைக் கழிக்க வேண்டியிருக்கிறது. இன்று முருகன் ஏறக்குறைய முதுமை கோலத்திற்கு வந்து விட்டான்.**





4

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி



கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை

இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப்படையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளி வருகின்றது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.



இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கலைத்துறை பாடத்தெரிவுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியவை

கடந்த வாரம் கலைத்துறை மாணவர்களின் பாடத் தெரிவு தொடர்பாக பேசத் தொடங்கியிருந்த இந்தக் கட்டுரைத் தொடர், குறிப்பாக சமூக விஞ்ஞானம் மற்றும் பிரயோக சமூகக் கற்கைகள் தொகுதியிலிருந்து மாணவர்கள் பாடங்களைத் தெரிவு செய்வது தொடர்பான சில விடயங்களைப் பேசியிருந்தது. இந்த வாரம் கலைத்துறை மாணவர்கள் தமது பாடத்தெரிவு தொடர்பில் கவனம் செலுத்தவேண்டிய மேலும் சில விடயங்களை ஆராய விளைகின்றது.

கலைத்துறையினருக்கான இரண்டாவது தொகுதி, சமயங்களும் நாகரீகங்களும் எனும் தொகுதியாகும். இந்தத் தொகுதியில் கிரேக்க உரோம நாகரீகம் எனும் பாடம் உள்ளடங்கலாக, இலங்கையில் பின்பற்றப்படும் சமயங்கள் மற்றும் அவற்றின் நாகரீகங்கள் தொடர்பான பாடங்களுடன் மொத்தம் ஒன்பது பாடங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தொகுதியிலிருந்து ஒரு மாணவர் அதிகபட்சமாக இரண்டு பாடங்களையே தெரிவு செய்யமுடியும். அதிலும் மேலதிக நிபந்தனையாக, குறித்த ஒரு சமயத்தின் பாடத்தினைத் தெரிவு செய்தால் அந்தச் சமயத்துடன் தொடர்புடைய நாகரீகப் பாடத்தைத் தெரிவு செய்ய முடியாது. உதாரணமாக இந்து சமயத்தைத் தெரிவு செய்தால், இந்து நாகரீகத்தை தெரிவு செய்ய முடியாது. எமது வடக்குக் கல்விச் சூழலில் கலைத்துறை மாணவர்கள் பொதுவாக இந்துநாகரீகம் எனும் பாடத்தை அதிகம் தெரிவு செய்வது கவனிக்கத் தக்கவிடயமாகும். குறிப்பாக தமிழை ஒரு பாடமாகக் கற்கும் கலைத்துறை மாணவர்களைவிட இந்துநாகரீகத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகம் என்பது அவதானிக்கத்தக்க ஒன்றாகும்.

இதற்குப் பின்னால் அப்பாடத்தை மையப்படுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட சில பல்கலைக்கழகங்களில் விசேட உட்சேர்ப்பின் (Special Intake) அடிப்படையில் மாணவர்கள் உள்வாங்கப்படுவது காரணமாகவிருக்கலாம். குறிப்பாக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஒப்பீட்டுச் சமயம் (Comparaitve Religion) எனும் ஓர் கற்கை நெறியுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்க விடயமாகும். அதுபோன்று, எதிர்காலத்தில், அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்துக் கற்கைகள் பீடம் தனக்கான மாணவர்களை நேரடியாகவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதனால் இந்துநாகரீகப் பாடத்துக்கான தெரிவு மேலும் முன்னிலை பெற வாய்ப்புண்டு.

ஆனால் இந்த விடத்தில் கலைத்துறை மாணவர்களின் கவனத்துக்கு ஒரு விடயத்தைக் கொண்டுவருதல் அவசியமானது. விசேட உட்சேர்ப்பு என்பது, இந்துநாகரீக பாடத்தைப் போன்று தமிழ், நாடகமும் அரங்கியலும், வரலாறு உள்ளிட்ட வேறு பல பாடங்களுக்கும் இடம்பெறுகின்றது. இது தொடர்பான விழிப்பு நிலை உள்ள கலைத்துறை மாணவர்கள், சில சந்தர்ப்பங்களில் தமது பாடத்தெரிவுக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட விசேட உட்சேர்ப்புக்குரிய பாடங்களை வைத்திருப்பதுமுண்டு. இதில் சாதகங்களுக்குச் சமனான அளவு பாதகங்களும் உண்டென்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக, கலைத்துறைக்கான தனித்துவ பல்கலைக்கழக அனுமதிகளுக்கு அப்பால், அனைத்துப் பிரிவினருக்கும் பொதுவானதாக வழங்கப்படுகின்ற பல்கலைக்கழக கற்கைநெறிகளுக்கான உயர்தரப் பாடங்கள் தொடர்பான அனுமதித் தகைமைகளைப் பூர்த்தி செய்வதில் சில சிக்கல் நிலைகள் தோன்றலாம். இந்த விடயம் தொடர்பான மேலதிக விளக்கம், இந்தக் கட்டுரைத் தொடரில் பொருத்தமான இடத்தில் இடம்பெறும்.

அடுத்து, அழகியல் பாடங்கள் எனும் தொகுதிக்குள் வழங்கப்படும் சித்திரம்(வரைதல்) சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் எனும் நான்கு பாடங்களிலிருந்து ஒரு மாணவர் இரண்டு பாடங்களைத் தெரிவு செய்ய முடியும். இவற்றுள், சித்திரம் மொழிசார் தனித்துவமற்று இருக்கும் அதேவேளை, ஏனைய மூன்றும் மொழி மற்றும் கலாசார பின்னணிகளின் அடிப்படையில் பிரிப்புச் செய்யப்பட்டுள்ளன. இங்கு விசேடமாகக் குறிப்பிடப் பட வேண்டிய விடயம் நாடகமும் அரங்கியலும் பாடத்தில், ஆங்கில பின்னணி கொண்ட பாடமும் சங்கீதத்தில் மேலைத்தேய சங்கீதமும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அழகியல் பாடங்களைப் பிரதானமாகத் தெரிவு செய்யும் எமது வடபுல மாணவர்களின் பிரதான இலக்காக விருப்பது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைத்துறை அல்லது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனமாகும். இந்த நிறுவனங்களின் கற்கைநெறிகளுக்கு அனுமதி பெறுவதற்கு உயர்தரப்பரீட்சையில் அனுமதிக்கு விண்ணப்பிக்கும் பாடத்தில் திறமைச்சித்தி Z பெறுபேறுகளுக்கு அப்பால் குறித்த நிறுவனங்களினால் நடத்தப்படும் செய்முறை சார் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டியது மேலதிகமான தேவைப்பாடாகும்.

இந்தப் பரீட்சைகள் தொடர்பாக பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இருந்தபோதும், ஆற்றுகைகளுடன் தொடர்புடைய பாடங்கள் எனும் அடிப்படையில் செய்முறைத் திறன் சார் அறிவு சராசரி மட்டத்துக்கு மேல் இருப்பது மிகவும் அவசியமானதே. குறித்த பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களினால் நடத்தப்படும் இந்தப் பரீட்சைகளில் சித்திபெறும் மாணவர்களின் விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர், குறித்த பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அவர்களின் உயர்தரப் பரீட்சையின் Z புள்ளிகளின் அடிப்படையிலேயே பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவுசெய்யப்படுகின்றார்கள். பல்கலைக்கழக பரீட்சையில் அதியுயர் புள்ளியைப் பெறும் மாணவர், உயர்தரத்தில் குறைந்த Z புள்ளியைப் பெற்றிருப்பின் பல்கலைக்கழக அனுமதியை இழக்கலாம். அதாவது பல்கலைக்கழக பரீட்சை என்பது வெறுமனே சித்தித் தகைமையேயன்றி அவற்றில் பெறும் புள்ளிகள் பல்கலைக்கழக அனுமதியில் செல்வாக்குச் செலுத்துவது கிடையாது. அத்துடன் அழகியல் பாடங்கள் தொடர்பான உயர் கற்கையை வழங்கும் இலங்கை பல்கலைக்கழகங்கள் அல்லது நிறுவனங்கள் மொழித் தனித்துவம்மிக்கவை. அதாவது வடக்கு கிழக்கிலுள்ள நிறுவனங்களின் போதனா மொழி கட்டாயமாக தமிழ் என்பதுடன் தெற்கிலுள்ள கட்புல அரங்கேற்ற பல்கலைக்கழகத்தின் (*Univer sity of Visual and Performing Arts*) போதனா மொழி சிங்களம் என்பதும் விசேட குறிப்பிடத்தக்கதாகும்



இங்கு இசை நடன மற்றும் நாடகத் துறைகள் மொழிப் பின்னணியுடன் தொடர்புபட்டவை என்பதால், போதானா மொழித் தனித்துவம் ஏற்கத்தக்கதே. இருந்த போதிலும் சித்திரம் அதாவது வரைதல் என்பது அதிக பட்சம் மொழித் தனித்துவமற்றது எனும் அடிப்படையில் அந்தக் கற்கைநெறி அனுமதியில் பல்கலைக்கழக போதனா மொழி சவாலாக இருப்பது தொடர்பில், பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பாகச் சிந்திக்கும் மற்றும் கொள்கை வகுக்கும் புலமையாளர்கள் கவனத்தில் கொள்ளல் அவசியமானது.

இந்தச் சந்தர்ப்பத்தில் காய்தல் உவத்தலின்றி சமூகப் பொது நன்மை கருதி, அழகியல் பாடங்களைத் தெரிவு செய்வது தொடர்பில் சில விடயங்களை பதிவுசெய்தல் கட்டுரையாளரின் கடமையாகும். அடுத்த வாரம் அவை தொடர்பில் பார்ப்போம்.

# எங்கே பிழை?




தொல்புரம் சி.கதிர்காமநாதன்

காலைப் பேருந்துக்காகக் காத்து நின்றேன். டச்சு வீதியில் போகும் பஸ் வரவேண்டும். நேரமோ 6.55 ஐத் தாண்டி விட்டது. அப்பன் வழமைபோல் "என்ன நேரம்?" எனக் கேட்டு விட்டு துவிச்சக்கர வண்டியில் போனார். பிள்ளைகளை ஏற்றிக் கொண்டு தாய்மார் தத்தம் வாகனங்களில் பறந்து கொண்டிருந்தார்கள். பள்ளிபோகும் நேரம். ஒரு வாகனத்தில் தாயின் பின்னால் மூன்று பிள்ளைகள். 'மப்ளர்' போட்டபடி அவர்கள் ஆடிக்கொண்டு இருந்தார்கள். ரியூசனுக்குப் போகும் போதும் இதே நிலைமைதான்.

படிப்பு.................படிப்பு!

எதிரே துவிச்சக்கர வண்டியில் ஒரு பெண், பின் 'கரியரில்' ஒரு பிள்ளையை ஏற்றிக் கொண்டு போனாள். பெண்பிள்ளை அரைகுறைத் தூக்கத்தில் ஆடிக் கொண்டு இருந்தாள். தாயோ திரும்பியபடி காலையில் படித்த விடயமோ என்னமோ, பிள்ளையைக் கேட்டபடி போனாள். பிள்ளையோ காலையில்



எழுந்த தூக்கக் கலக்கத்தில் என்னமோ சொல்ல தாயாருக்குக் கோபம் வர, பிள்ளையைத் திட்டினாள்.

பிள்ளைக்கு என்ன வயதிருக்கும்? பத்துக்குள்தான் இருக்கும். அதிகாலையிலேயே ரியூசனா? எந்த நேரமும் படிப்பு . ரியூசன் பற்றியே சிந்தனைதானா? பெண்களுக்கான மோட்டார் சைக்கிளையும் கண்டு பிடித்து விட்டார்களல்லவா? நிற்க இருக்க நேரமேது? எல்லாம் பெரிய படிப்புக்காகத்தான். பிள்ளைகள் படிக்க வேண்டும் என்ற எண்ணம் நல்ல விசயமே. பிள்ளைகள் படிப்பில்லாமல் வாழ்க்கையைக் கொண்டு நடத்த இயலாது என்ற உண்மையை, பெற்றோர் யுத்த காலத்தோடு உணரத் தலைப்பட்டு விட்டார்கள். இடப்பெயர்வுகள், தொழில் இழப்புகள், சொத்து இழப்புகள், அன்றாடம் பணம் இல்லாமல் குடும்பம் நடத்துவதில் சிரமம் என்றாலும் பல பின்னடைவுகள். பரம்பரைத் தொழில்களை நம்பிப் பிரயோசன மில்லை.

கால ஓட்டம் , வாழ்க்கை மாற்றம் , வெளி நாட்டுப் பணவரவுகள் எல்லாமே படித்தால்தான் எமது இலட்சியங்களை நிறைவேற்றலாம் என்பதைப் பலர் உணரத் தலைப்பட்டு விட்டார்கள். கல்விதான் எல்லாவிதமான ஏற்றத்தாழ்வுகளையும் போக்கும் என்பதனை உணர்ந்தனர் பலர்.

படிப்பு .......... படிப்பு

இப்போது படிப்பைத் தேடிப் பெற்றோர் ஓடுகின்றார்கள். எங்கே நல்ல பாடசாலை, எங்கே நல்ல ரியூசன் வாத்தியார், எவ்வளவு பணமோ ....எவ்வளவு தூரமோ , காலையோ, மாலையோ ஏற்றி இறக்க அவர்களும் அவர்களது வாகனங்களும் தயார். படிப்பு மாத்திரம் வாழ்க்கையைக் கொண்டுபோவதற்குப் போதுமானதா? நிலையான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள படிப்பு, பட்டங்கள் கிடைத்தால் எல்லாமே சிறப்பாக அமைந்து விடுமோ? முன்பள்ளிகள் விதம்விதமாக வந்து விட்டன. பெற்றோர் தங்கள் பிள்ளைகளை என்னென்ன விதமாகப் பார்க்க ஆசைப்பட்டார்களோ, அப்படியான வகையில் முன்பள்ளிகள், அதுவும் நம்மவர்களுக்குப் பிடித்தமான ஆங்கில மொழியில் கற்பித்தால் சொல்லவும் வேண்டுமா? நாளை வெளிநாட்டு மச்சான் கூப்பிட்டால் எவ்வளவு இலகுவாக இருக்கும். எவ்வளவு பெருமைப்பட வேண்டிய விசயம். இரண்டு பெண்கள் கதைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களது உரையாடலில் பெரும்பகுதி படிப்புக்கதைதான். "எங்க படுக்க நேரம்....? சனி, ஞாயிறு எண்டால் ஒரே ரியூசன் கிளாஸ்தான். மாத்தி மாத்தி ஏத்திப் பறிக்க வேண்டியதுதான்"

"என்ர மோனும் இந்த முறை 'மற்சிலை' மாக்ஸ் எடுக்காமல் விட்டுட்டான். அதுதான் யோசனையாக் கிடக்கு .' மற்சு'க்கு ரியூசன் போறவன். ஏன் மாக்ஸ் குறையுது எண்டு கேட்டால், மாஸ்ரர் சொல்லுறது விளங்குதில்லையெண்டு சொல்லுறான். வேறை மாஸ்ரர் தான் பாக்க வேணும்."

"ரியூசனிலையும் சனம்தானே? மாஸ்ரரை வீட்டை கூப்பிட்டு சொல்லிக் குடுப்பிக்கப் பாரும். காசுகூட வாய்த்தான் கேப்பினம். என்ன செய்யிறது?"

" நாளைக்கு நல்லூர்ப் பக்கம் வரவேண்டிக் கிடக்கு. மத்தியானம் வீட்டை நிப்பியளோ?"

"சொறி அக்கா.. கடைசிக்கு ரீயூசன் இரண்டு மணியிலிருந்து. வீட்டை நிக்கமாட்டன்"

நாங்கள் அப்ப விளையாட்டு, விளையாட்டு என அலைந்தோம். இப்ப பிள்ளைகள் ரியூசன், ரியூசன் என்று படிப்புக்கு அலைகிறார்கள்.

படிப்பு, பிள்ளையை முழுமனிதனாக மாற்றி விடுமா? ஐந்தையும், ஐந்தையும் கூட்டினால் பத்து. எப்பிடிக் கூட்டினாலும் இதுதான் விடையாக வரும். விடை மாறாது. ஆனால் வாழ்க்கைக் கணக்கில் அப்படியில்லை. விடைகள் மாற வேண்டி வரும். அதுகளைச் சமாளித்துப் போக வேண்டியிருக்கும்.

மனைவி தொலைபேசியில் நண்பியோடு கதைத்துக் கொண்டிருந்தார். அது வதனி ரீச்சர்தான்.

" ரீச்சர் இப்ப எல்லாரும் படிப்பு, படிப்பெண்டுதான் ஓடித் திரியினம். பிள்ளைகளுக்கு வேண்டிய ஒழுக்கம், பண்பாடு, மனிதநேயம் எல்லாம் தேவையென்று எவரும் பெரிதாக அக்கறைப்படுகிறதில்லை. அப்படிக் கதைத்தால் அடிக்க வந்து விடுவினம்போல"

மண முறிவுகள், மன உளைச்சல்கள், தற்கொலை எண்ணங்கள் வரத்தானே செய்கின்றன. படிப்பதால் இவையெல்லாம் வராமல் தடுக்கப்பட்டு விடுகின்றனவா? வசதி வாய்ப்புக்கள், சௌகரியங்கள், படிப்பு இல்லாதவர்களா இப்படியான பிரச்சனைகளுக்கு உட்படுகிறார்கள். மரத்தில் தொங்கும் மாங்காய்களைப் பறித்துப் பழுக்க வைக்கின்றோம். பார்க்க அழகாகத்தான் இருக்கின்றன. பழுத்த பின் வெட்டிப் பார்க்கும்போது, உள்ளேயிருந்து பூச்சிகள் வெளிவரும். பாதி மாம்பழத்தைப் பூச்சிகள் அரித்துத் தின்றிருக்கும்.

பூச்சி எப்படி உள்ளே போனது?


ஆரம்பத்திலா....? முடிவிலா...? எங்கே பிழை நடந்தது. பேருந்தும் வந்து விட்டது.

---

பாகம் 4

(1906 1949)

# யாழ் .மாநகர சபையின் வரலாறு



ந.பரமேஸ்வரன்

8.10.1921 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் சட்ட நூலக செயலாளர், சட்டத்தரணிகள் தமது அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கும் முத்திரை வரியில் 30வீதத்தைச் சட்ட நூலகத்துக்குச் செலுத்த வேண்டுமென பிரேரணையொன்றை கொண்டு வந்தார். இதற்கு சபைக்கு அதிகாரமில்லையெனக் கூறி பிரேரணை நிராக ரிக்கப்பட்டது. இதே கூட்டத்தில் கரையூர், பெரிய கடைப் பகுதிகளில் மலசலகூடம் அமைப்பதற்கு 405 ரூபா ஒதுக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் வீதி விளக்கு எரிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு முட்கம்பி வேலி அமைப்பதற்கு 65 ரூபா ஒதுக்குவதென தீர்மா னிக்கப்பட்டது. மார்ட்டின் வீதியிலிருந்து ஆரியர்குளத்திற்கு வீதியின் அருகாக வாய்க்கால் அமைப்பதற்கு 198 ரூபா ஒதுக்குவதென, தலைவர் பிரேரணையொன்றைக் கொண்டு வந்தார்; அருளம்பலம் பிரேரணையை வழிமொழிந்தார்.



அருளம்பலம்

12.11.1921ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், கடற்கரைப்பகுதியில் சிமெந்து இருக்கை அமைப்பதற்கு 58ரூபா83 சதம் ஒதுக்குவதுபற்றி ஆராயப்பட்டது. அத்துடன் ஐந்து சிலிண்டர்கள் கொள்வனவு செய்து, அவற்றில் மூன்றைப் பிரதான வீதிக்கும் இரண்டை சோனகத் தெருவுக்கும் பொருத்துவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

30.11.1921 ஆம் திகதியன்று, அடுத்த இரண்டு வருடகாலப்பகுதிக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. முதலாம் வட்டாரத்துக்கு R.R.நல்லையாவும் இரண்டாம் வட்டாரத்துக்கு R.சிவ குருநாதரும் மூன்றாம் வட்டாரத்துக்கு அருளம்பலமும் தெரிவு செய்யப்பட்டனர்.


1.12.1921 ஆம் திகதியன்று காலை 9.00 மணிக்கு கொழும்பு கச்சேரியில் E.M.P.அலெக்சாண்டர் தலைமையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைக் கூட்டத்தில் யாழ்ப்பாணம், மாத்தளை நகர சபைகளை நகர அபிவிருத்திச் சபைகள் (Urban Development Council) சட்டப்பிரிவு 206 கட்டளைச்சட்டம் இலக்கம் 11/1920 இன் கீழ் நகர அபிவிருத்திச் சபைகளாக தரமுயர்த்துவதற்கு ஆளுநர் அங்கீகாரமளித்தார். இந்தக் கூட்டத்தில் T.H.சப்மன், M.T.அக்பர், S.D.கிருஷ்ணரத்ன ஆகியோர் பங்குபற்றினர். இந்தத் தீர்மானம் அந்த ஆண்டின் கடைசி வர்த்தமானியான 25ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

19.1.1922 ஆம் திகதியன்று கொழும்புக் கச்சேரியில், யாழ்ப்பாண நகர அபிவிருத்திச் சபையின் தேர்தல் வட்டாரங்களைப் பிரிப்பது சம்பந்தமான பிரேரணை பிரேரிக்கப்பட்டது.

யாழ்ப்பாண உள்ளூராட்சி சபையில் அங்கத்தவர்களாக இருந்தவர்களின் புகைப்படங்களை வைத்திருப்போர் அவற்றை மின்னஞ்சல் மூலம் parames35@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தால் இந்த ஆவணம் பூரணமான ஒன்றாக அமையும்.

கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொட,ர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப்புக்களையும் வெளிக்கொண்டு வருகின்றது.

04



# கிராமத்து மனிதர்கள்...

இராகன்

இன்றைய பாடசாலை வகுப்பறைகளில் வாசிப்பு மூலை, விளையாட்டு மூலை, மண் மூலை, வழிபாட்டு மூலை என்றெல்லாம் பல மூலைகளை"வைத்திருக்கிறார்களாம்! ஜப்பானியர் எமக்குத் தந்த "அரும்பெரும் வாழ்க்கை ஒழுங்கு" என்று விதந்தேற்றி வியக்கிறார்களாம்! எதையாவது எவராவது அறிமுப்படுத்தினார்களென்று எங்கள் சர்வதேசத் தொடர்பை வியந்து எம்மை நாமே கிள்ளிவிட்டுக் கொள்வதில் மகா சமர்த்தர்கள் நாங்கள்! இப்பேர்ப்பட்டவர்களுக்குத் தெரியாது "ஆட்டுக்கட்டை" ஆறுமுகத்தாரது வீட்டின் ஒழுங்கு! "அடி" என்பது இடம் என்ற பொருளில் பல சொற்களுடன் இணைந்திருக்கும்.

கிணற்றடி, அடுப்படி, குடத்தடி, படலையடி என்று வீட்டு வளவினுள்ளும் கேணியடி, கோயிலடி, பள்ளிக்கூடத்தடி என்று வெளியிலும் சொல்லும் வழக்கம் உள்ளது. இது காலப்பொருளில் முன்னடிக்கு, பின்னடிக்கு என்றெல்லாம் வழங்கிவரும். வீட்டு வளவினுள் ஒழுங்குடன் வகுத்தொதுக்கப்பட்ட அடிகளில் ஒன்று தான் "ஆட்டடி". வீட்டில் வளர்க்கப்படும் ஆடுகளைக் கட்டி வைப்பதற்கும் பராமரிப்பதற்குமென பெரும்பாலும் வீட்டின் ஒதுக்கான பகுதியில் தனித்து ஒரு கொட்டகை அமைத்து ஒதுக்கப்பட்ட பகுதி. அதனை "ஆட்டுக்கட்டை" என்றும் சொல்வார்கள்.

வெள்ளை வெளேரென்ற, பரட்டையடித்துப் பறக்கும் தலைமுடி, மண்டான் சுருட்டுப் புகையால் பழுப்பேறிப்போன, ஒப்புரவு செய்யப்படாத வைக்கல் மீசை, வெற்றிலைச்சாயம் வழிந்தோடிய கடைவாயின் கீழ் நீண்டு தொங்கும் தேன்கூட்டுத் தாடி, தொடை தெரிய மடித்துக்கட்டிய, வெண்மையை நிரந்தரமாய்த் தொலைத்துவிட்ட நான்கு முழப் பழுத்தவேட்டி, சல்லடை செய்யப்பட்ட நிலையிலும், தோளை விட்டகலாத் துவாய்த் துண்டொன்று. இதுதான் ஆட்டுக்கட்டை ஆறுமுகத்தாரின் "பிரதிமாலக்கணம்".

வீட்டிலே மனைவி பிள்ளைகளுடன் கழிக்கும் காலத்தைவிட, ஆட்டடியில் ஆடுகளுடன் கழிக்கும் காலம் பன்மடங்கு. அதுவே அவரது பிரதான தொழில். ஆட்டுக்கட்டை ஆறுமுகத்தார் கிடாய் வளர்ப்பதில் தான் நிபுணன். கறுத்த உரோமமுள்ள கிடாய்களுக்குச் சந்தைக் கிராக்கி அதிகம் என்பதால் அவற்றைத் தெரிவு செய்து வாங்கி வளர்ப்பார். ஒவ்வொரு கிடாயும் மொழுமொழுவென்றிருக்கும். தெருவில் போய் வருபவர்களுக்கு ஆட்டடிக் கழிவுகளின் நாற்றத்தை முந்திக் கொண்டு, கிடாயாட்டுக் கொழுப்பு வாசனை மூக்குவழிப்புகுந்து ஆட்டிறைச்சிக் கறிக்கான ஆவலைத் தூண்டும். மறியாடுகளைத் தனிமைப்படுத்தி வளர்த்தாலும்கூட, இடையிடையே அருகருகாகக் கட்டியும் வைத்துவிட்டுத் தனதுபிள்ளைகள் ஆட்டடிப்பக்கம் வராமல் காவல் காப்பார். மறிகள் கிடாய்க்குட்டி போடும்போது மகிழ்ச்சியில் ஆறுமுகத்தாரின் மனம் கூத்தாடும். அவ்வப்போது வெளியிடங்களிலிருந்து மறியாடுகளைக் கொண்டு வந்து ஆறுமுகத்தாரின் ஆட்டுக் கட்டையில் கட்டுபவர்கள் அவிழ்த்துச் செல்லவரும் போது தரும் பணத்தாள்களைக் கண்ணிலொற்றி வாங்கி, மடியில் செருகுவார்.

ஆறுமுகத்தாரின் "ஆடு வளர்ப்பது" ஒரு கலை. ஆட்டடியைக் கூட்டித் துப்பரவாக்குவார், தொற்றுகள் ஏற்படாவண்ணம் ஆட்டின் கால்களைக் கழுவிவிடுவார், தேங்காய்ச் சிரட்டையிலே தணல் எடுத்து வந்து ஆடுகளின் உரோமத்திடையே மறைந்திருக்கும் பேன்கள், உண்ணிகளைப் பிய்த்துச் சுடுவார், எண்ணெய் ஊற்றும் இடங்களுக்கு நேரில் சென்று எள்ளுப் பிண்ணாக்கு, தேங்காய்ப் பிண்ணாக்கு வாங்கி வந்து பக்குவமாய்க் கரைத்து வைப்பார். கரைக்கப்பட்ட பிண்ணாக்கின் வாசனை வளவு முழுவதும் பரவும். ஆலமரங்கள், பலாமரங்கள் உள்ள இடங்களிலெல்லாம் தேடிச்சென்று, நீண்ட குத்தூசியில் பழுத்து விழுந்த இலைகளைக் குத்திச் சேர்த்துக் கொண்டு கதாயுதத்தைப் போல தோளில் காவி வருவார். பின்னேரங்களில் சேர்வை சீவி (நுங்குகளை மெல்லிய சீவல்களாக்குதல்) வைப்பார். இடையிடையே நீண்ட கழுத்துள்ள போத்தலில் ஏதோ திணித்துப் பருக்குவார்.

அந்த நாட்களில் கிடாய்கள் வழமைக்கு மாறான உசாருடன் இருக்கும். அதிகம் சாப்பிட ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கும். வேள்விகள் நடைபெறும் காலங்களில் ஆட்டுக்கட்டை ஆறுமுகத்தாரின் ஆட்டடிக்கு பலர் வந்து போவார்கள். கிடாய்களின் பிடரியைத் தடவிக்கொடுத்து, கைகளை முகர்ந்து பார்ப்பார்கள். வேள்விக்கு முதல்நாள் பலாவிலையில் மறைத்து வைத்து கொடுக்கப்பட்ட லேகியத்தின் வேலையால் மதர்ப்பம் ஏறி நிற்கும் கிடாய்களை விட்டுவிட்டுப்போக மனமில்லாமல் ஆட்டடியையே சுற்றிச்சுற்றி வருவார்கள். ஆறுமுகத்தார் தான் நிர்ணயித்த விலையில் ஒரு சதத்துக்குக் கூட இறங்கமாட்டார். இறுதியில் முகத்தார் வென்றுவிடுவார். பணம் கைமாறும். அந்த நேரங்களில் அவருக்கு வரும் பெருமைக்கு அளவே கிடையாது. "இது கிடாயிலைத் தம்பியவை தங்கப் பவுண். கருந்தனம் எண்டு இதைத்தான் சொல்லுறது. வளப்பு அப்பிடி" என்று இறுமாப்படைவார். பணத்தாள்களைக் கண்ணில் ஒற்றி இடுப்பில் செருகியிருக்கும் தோல் பையினுள் பவ்வியமாய் மடித்து வைப்பார்.

வேள்விகள் இல்லாத காலத்தில் ஒருமுறை ஒருவன் முகத்தாரின் ஆட்டடிக்கு வந்தான். வழமையாக வருபவர்களைப் போலவன்றி தனித்து வந்திருந்தான். நீளக்காற் சட்டை, முழுநீளக் கையுள்ள சேட் அணிந்து, "ரை" கட்டியபடி பல்தேசியக்கம்பனி முகவர் போலிருந்தான். ஏற்றிச்செல்ல வாகனமும் கொண்டு வந்திருந்தான். முகத்தார் தன்னுடைய விலையை நிர்ணயித்தார். பன்னிரண்டாயிரம் என்றார். அவனோ தன்னுடைய வாகனத்திலிருந்து ஏதோவொரு கருவியை எடுத்துவந்தான். அந்தக் கருவியை விலை நிர்ணயித்த கிடாயின் உடலிலே வைத்து கருவியிலுள்ள இலக்கமிடப்பட்ட விசைகளை அழுத்தினான். ஆட்டுக்கட்டையரின் கண்கள் அகலத் திறந்தன.

"என்ன ஐயா.... ஆடு விலை மதிக்கிற இந்த மிசினை நீங்கள் ஏமாத்தேலாது. மிசின் என்ன சொல்லுது தெரியுமோ? ஆறாயிரம் தானாம். இந்த மிசின் பொய் சொல்லாது.

நீங்கள் மிசின் சொல்லுற விலைக்கு மேலை வித்தால் பொலிசிலை கூட முறைப்பாடு செய்யலாம். சரி நீங்கள் கஷ்டப்பட்டு வளத்தெடுத்ததாலை நான் ஏழாயிரம் தான் தருவன். சரியோ?" என்று சொல்லி கிடாயை அவிழ்த்துக் கொண்டு முகத்தாரின் கைகளில் ஏழாயிரத்தைத் திணித்தான். முகத்தார் விறைத்துப் போனார். நிர்ணயித்த விலையிலிருந்து ஐந்தாயிரம் குறைந்த பணத்தாள்களைக் கண்ணில் ஒற்றிக்கொள்ளாமலே மடியில் செருகினார். "பொலிசிலை முறைப்பாடு செய்யலாம்".... என்ற சொற்கள் திரும்பத் திரும்ப முகத்தாரின் காதில் கேட்டுக்கொண்டிருந்தது.

பின்னர் ஒருநாள், ஆட்டுக்கட்டையர் நகரத்திலுள்ள கடையொன்றின் முதலாளிதான் வைத்திருந்த அதே "ஆடு மதிக்கும் மெசின்" ஒன்றை வைத்துக் கணக்குப் பார்ப்பதைக் கண்டார். முதலாளியிடம் அந்தக் கருவி பற்றிக் கேட்டறிந்தார். முதலாளி அது கணக்குகளைக் கூட்டிக் கழித்துப் பெருக்கிப் பிரித்துப் பார்க்கும் கருவி என்றும், அதன் பெயர் கல்குலேட்டர்" என்றும் சொன்னார். அன்று தொடக்கம் முழுநீளக் காற்சட்டை, முழுநீளக் கையுள்ள சேட், "ரை" கட்டியவன் எவன் வந்தாலும் முகத்தைக் கூர்ந்து பார்க்கத் தொடங்கிவிட்டார் ஆட்டுக்கட்டை ஆறுமுகத்தார். வருடங்கள் செல்லச்செல்ல முகத்தாரின் ஊரின் தெருக்களிலெல்லாம் முழுநீளக் காற்சட்டை, முழுநீளக் கையுள்ள சேட், ரை கட்டியவர்கள் சர்வ சாதாரணமாக, ஏராளமாக வந்து விட்டபோதிலும் தன்னை ஏமாற்றியவனது முகத்தை அடியோடு மறந்தே போய்விட்டார். இப்போது அப்படியானவர்களைக் கூர்ந்து பார்ப்பதைக் கைவிட்டு விட்டார்.

---

பொக்கிசன்

# பாணும் பனங்காயும்

அம்மா எழுப்பினா "தம்பி எழும்பு நாலரை மணியாச்சுது"

சூட்டியையும் எழுப்பினா "அஞ்சு மணிக்கு முன்னம் போயிட்டால் சனம் இருக்காது. இல்லாட்டி சிலநேரம் சனம் வந்திட்டுதெண்டா பாண் கிடைக்காது". கார்ட்டையும் (பங்கீட்டு அட்டை) கூடையையும் எடுத்துக் கொண்டு நானும் சூட்டியும் சங்கக்கடை நோக்கிப் புறப்பட்டோம்.

ஏற்கனவே மூண்டு நாலு பொம்பிளையள், கொலனிக்கை இருக்கிறவை வந்து காவல் இருக்கினம். நாங்கள் போய் நாலாவது அஞ்சாவதா இருந்தம். கொஞ்ச நேரத்தில சனங்களின்ரை கியூ நீளத் தொடங்கிட்டுது; கூவில் வலித்தூண்டல் ஆக்களெல்லாம் வந்திட்டினம். வேலாயுதம்மா வீட்டிலைதான் சங்கக்கடை நடக்குது. அவவின்ரை வீட்டு வாசலிலைதான் 'கியூ' இருக்குது.

வேலாயுதம்மா எழும்பி வந்து "இண்டைக்குச் சரியான சனம்·போல கிடக்கு" எண்டு சொல்லிப்போட்டுப் போனா. வேலாயுதம்மா வீட்டு வேலி மட்டும் சனங்களின் 'கியூ' இருக்குது. நேரம் அஞ்சரை ஆகுது. பாண் லொறி வாற சத்தம் கேக்குது. 'கியூ' உஷாரடைந்தது. "சரியான சனமாய்க்கிடக்கு பாண் கிடைக்குதோ தெரியாது" தொங்கலில் இருந்த சிலர் முணுமுணுத்தனர்.



எங்களுக்குக் கட்டாயம் கிடைக்கும் .நாங்கள் நாலாவது, அஞ்சாவதாத் தானே இருக்கிறம். லொறியின் பின்பக்கத்திலிருந்து இறங்கினவர் சொன்னார் "இண்டைக்கு எல்லாருக்கும் பாண் கிடக்கு .யோசியாதையுங்கோ"

தொங்கலில் இருந்தவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். லொறியிலை பின்னுக்கு இருந்து வந்தவர் கார்ட்டுகளை வாங்கி பதிஞ்சு போட்டு, பாணைக் குடுக்கத் தொடங்கினார். எங்கடை கார்ட்டையும் வாங்கி ,பதிஞ்சு போட்டு ரெண்டரை றாத்தல் பாண் எடுத்துத் தந்தார். நாங்கள் வாங்கி கூடைக்குள் போட்டுக் கொண்டு நடந்தோம்.

எங்கடை வீட்டிலை எல்லாமாய் எட்டுப் பேர் எண்டபடியால் ரெண்டரை றாத்தல். ஒரு ஆளுக்கு அரை றாத்தல்; அஞ்சு பேர் அல்லது அதுக்குக் கூட எண்டா எத்தனை் பேர் எண்டாலும் ரெண்டரை றாத்தல்தான். எங்கடை வீட்டிலை எல்லாருமே சின்ன ஆக்கள் எண்டபடியா ரெண்டரை றாத்தல் தாராளமாக் காணும். பாண் வராத நாளையிலை பனங்காய் பொறுக்கப் போக வேணும். அதுவும் இப்பிடித்தான் நாலரை மணிக்கு எழும்பிப் போய்காவலிருக்கவேணும். இல்லாட்டிஆரேன் பொறுக்கிக் கொண்டு போயிடுவினம். கீரிமலைச் சுடலைக்குப் பக்கத்திலைதான் எங்கடை பனங்காணி. விடியப்பறம் நாலரைக்குப் பிறகு தான் போறது. பன்னிரண்டிலை இருந்து ஒரு மணி மட்டும் தான் பேய்களின் நடமாட்டம் இருக்கிறதெண்டு சொல்லுறவை. பாண் இல்லாட்டி பனங்காய் சீசனிலை பனங்காய்தான் காலமைச் சாப்பாடு. பனங்காயை அடுப்புப் புகட்டிலை வைச்சு சுட்டு திண்டிட்டுப் போனா, அது பசியைத் தாங்கும்.

சஞ்சீவி சிறுகதை

# மண்எண்ணெய் மணம்

ஆங்கில மூலம்: அம்ரிதா பிரிட்டம்
தமிழில்: கோகுலராகவன்

வெளியில் ஒரு ஆண் குதிரை கனைத்தது. அந்த ஆண் குதிரை அவள் தனது பெற்றோரின் கிராமத்தில் இருந்து கொண்டு வந்ததொன்று. குலேரியின் பெற்றோர் சாம்பாவில் வசித்தார்கள். அவளுடைய கிராமத்தில் இருந்து வளைந்து உயர்ந்து செல்லும் பாதையின் முடிவில், உயர் மேட்டு நிலத்தில் அவளது பெற்றோர் வசிக்கும் கிராமம் உள்ளது. அங்கிருந்து ஒருவர் கால்களால் கடந்து செல்லமுடியாத தூரத்தில் சாம்பா அமைந்துள்ளது. எப்பொழுதாவது குலேரிக்கு வீடு பற்றிய நினைப்பு ஏற்படும்பொழுது, கணவன் மானெக் அவளை அவளது ஊர்வரை அழைத்துப் போவான். சூரியஒளியில் மின்னும் வீடுகளைப் பார்க்கும் பொழுது அவள் இதயம் பெருமையில் பிரகாசிக்கும்.

வருடத்துக்கு ஒருமுறை, அறுவடைக்கு பின், விளைபொருள்களை எல்லாம் வீட்டுக்குக் கொண்டு வந்த பின் குலேரி தனது பெற்றோருடன் ஒரு சில நாட்கள் தங்க அனுமதிக்கப்படுவாள். குலேரியின் இரு நண்பிகள், அவர்கள்கூட வெளியூரில் திருமணம் செய்து உள்ளனர். குலேரி ஊருக்குப் போகும் பொழுது தான் அவர்களும் வருவார்கள். அவர்களும் குலேரி போலத்தான் இந்தத் திருநாளை எதிர்பார்த்து இருப்பார்கள். தங்கள் கவலைகள் மகிழ்வுகளைப் பகிர்வார்கள். தெருவில் சேர்ந்து போவார்கள். அறுவடைத் திருவிழாவுக்கு புதிய துணிமணிகளை வாங்கிக் கொள்வார்கள். அவர்களின் துப்பட்டா சாயம் மங்கி இருக்கும். அதற்கு புதிய சாயம் இட்டுக் கொள்வார்கள். வெள்ளித்தோடும், கண்ணாடிக் காப்புகளும் வாங்குவார்கள்.

குலேரி அறுவடை நாளைக் கணக்கு எடுத்துக் கொண்டிருப்பாள். இலையுதிர்காலத்துக் காற்று, வானத்தில் மழைக்கால மேகங்களை விரட்டி விடும், அவள் அதுபற்றி சிறிது நினைத்தாள். அவள் தினசரி வேலைகளாக, மந்தைகளுக்கு உணவு வைப்பதும், மாமன் மாமிக்கு உணவு ஆக்குவதும், பின்னர் தன்னை ஊரிலிருந்து யார் வந்து அழைத்துப் போவார்கள் என்ற நினைவுகளில் மூழ்குவதுமாக இருக்கும். இப்பொழுது, மீண்டும் ஒருமுறை அவளது வழமையான வருடாந்தப் பயணத்துக்குரிய நேரம் வந்தது. அவளது மகிழ்வை வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியவில்லை. அவளது கணவன் மானெக், கண்களை மூடி சுங்கானில் புகையை இழுத்து விட்டுக் கொண்டிருந்தான். அவன் கண்கள் மூடி இருந்தன.

"சம்பாவுக்கு சந்தைக்கு ஒருநாள் என்றாலும் வருவீர்கள்தானே?" குலேரி கேட்டாள். மானெக் சுங்கானை ஒரு பக்கமாக வைத்தான், பதில் எதுவும் பேசவில்லை.

"என்ன பதிலைக் காணோம்?"

சிறிது நேரம் அமைதியாகக் கழிந்தது, இருவரில் எவரும் பேசவில்லை.

"வருடத்துக்கு ஒருமுறைதானே அம்மா அப்பாவைப் பார்க்கப்போகிறேன் என்பதால்,முன்னர் நீங்கள் ஒருபோதும் மறுத்ததில்லை. இந்த முறை மட்டும் ஏன் தயக்கம்?" குலேரி இடைவிடாது பேசினாள்.

"இந்தமுறை மட்டும் போக வேண்டாமே" மானெக் இரக்கமாகவே கேட்டான்.

"உங்களின் அம்மா ஒன்றும் சொல்லவில்லை, நீங்கள் மட்டும் ஏன் இப்படி பிடிவாதமாக நிற்கிறீர்கள்?" அவள் உறுதியாகக் கேட்டாள் .

"என்னுடைய அம்மா..." மானெக் தான் சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்கவில்லை. அன்றைய காலை நீண்டதாக இருந்தது. குலேரி வைகறைக்கு முன்னதாகத் தயாராகி விட்டாள். குலேரிக்குப் பிள்ளைகள் இல்லை. அதனால் பிள்ளைகளைத் தனியாக விட்டுப் போக வேண்டிய அல்லது தன்னுடன் அழைத்து போகவேண்டிய சிரமம் கூட குலேரிக்கு இருக்கவில்லை. குலேரி, கணவனின் தாய், தகப்பனிடம் சொல்லிக்கொண்டு புறப்படும்போது வேலையாள் நட்டு, குதிரையை சேணமிட்டு தயாராக்கினான். "பாதி வழிவரை நானும் கூட வருகிறேன்" என்று மானெக் சொன்னான் .குலேரி மகிழ்ச்சியுடன் புறப்பட்டாள், கணவனின் புல்லாங்குழலைத் தனது துப்பட்டாவில் மறைத்து எடுத்துக்கொண்டாள் .

காஜிர் கிராமத்துக்குப் பின்னர், பாதை செங்குத்தாக அவர்கள் கிராமத்தைநோக்கி உயர்ந்து சென்றது. அப்போது குலேரி துப்பட்டாவில் தான் மறைத்து வைத்திருந்த புல்லாங்குழலை எடுத்து, கணவனிடம் கொடுத்தாள். அவனது கையை எடுத்துத் தனது தோளில் வைத்துக் கொண்டு "ம்ம். வாசியுங்கள்" என்றாள். ஆனால், மானெக் தனது சிந்தனை முழுவதையும் எங்கோ தொலைத்திருந்தான்.

''ஏன் புல்லாங்குழல் வாசிக்கவில்லை?" அவனைத் தன்பக்கம் திருப்ப முயன்றாள். அவன் அவளைக் கவலையுடன் பார்த்தான், பின்னர் மிகவும் உருக்கமான இராகம் ஒன்றைக் கவலையுடன் புல்லாங்குழலில் வாசித்தான்.

"மீண்டும் கேட்கிறேன், நீ போக வேண்டாம்" அவன் கெஞ்சினான். புல்லாங்குழலை மீண்டும் அவளிடம் கொடுத்து விட்டான். அதைத் தொடர்ந்து வாசிக்க அவனால் இயலவில்லை.

"ஏன் அப்படி?" அவள் கேட்டாள் .

"சந்தைக்கு வருவீர்கள்தானே? அப்போது உங்களுடன் சேர்ந்து வீட்டுக்கு வருகிறேன், இது சத்தியம்" என்றாள் குலேரி. மானெக் அதற்குப் பிறகு எதுவும் கேட்கவில்லை. நட்டு, வீதியோரமாக குதிரையை நிறுத்தி, அவிழ்த்துக் கொண்டு இவர்களைத் தனியே விட்டு விட்டு அப்பால் போனான். மானெக்கின் மனம் பழைய நினைவுகளில் மூழ்கத் தொடங்கியது. ஏழு வருடங்களுக்கு முன்பு இதே மாதிரி ஒரு காலத்தில் அவனும் அவனது நண்பர்களும் அறுவடைத் திருவிழா பார்க்க சாம்பா கிராமத்துக்குப் போனார்கள் . அப்போது தான் சந்தையில் குலேரியை முதன் முதலில் கண்டான். இருவர் இதயங்களும் இடம் மாறின. பின்னர் அவளைத் தனியாகக் காண முயன்றான். அவள் கையைப் பிடித்தவாறு " "நீ பால் நிரம்பிய முற்றாத சோளப்பொத்தி போல இருக்கிறாய்" என்று அவன் சொன்னது இன்னமும் அவனுக்கு நல்ல ஞாபகம்.

"பட்டி மாடுகள் தான் முற்றாத சோளத்தை விரும்பும். வாட்டிய சோளத்தையே மனிதர்கள் விரும்புவார்கள். என்னை வேண்டுமானால், அப்பாவிடம் போய்க் கேளுங்கள்" குவேனி தன் கையை அவனது இறுகிய பிடியில் இருந்து விடுவித்தவாறு சொன்னாள். மானெக்கின் குல வழக்கப்படி, பெண் வீட்டாருக்கு மாப்பிள்ளை தான் சீதனம் கொடுக்க வேண்டும் . மானெக் மிகவும் பயந்தான். ஏனெனில் குலேரியின் தகப்பன் மிகப்பெரிய தொகையைக் கேட்டால், அவனுக்கு அதைக் கொடுப்பது கடினமாக இருக்கும். ஆனால் நல்லகாலம். அவர் வசதியாக வாழ்ந்தபடியால் அதிக தொகையைக் கேட்கவில்லை. அவர் விரும்பியதெல்லாம் நல்ல குடும்பத்தைச்



சேர்ந்த, கௌரவமான இளம் ஆண்மகனை மட்டுமே. மானெக் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு குலேரியை மணந்து கொண்டான். நினைவுகள் மானெக்கை விட்டு விலகிக் கொண்டன. தன்னுடைய கையால் குலேரியை அணைத்துக் கொண்டான்.

"என்ன கனவு காண்கிறீர்கள்?" அவள் அவனை ஸ்பரித்தாள்.

அவன் பதில் பேசவில்லை. குதிரை பொறுமை இழந்து கனைக்கத் தொடங்கியது. குலேரியின் ஊரை நோக்கிப் புறப்பட்டது .

"உங்களுக்குக் காதுகள் செவிடாக மாறி விட்டனவா? நான் கதைப்பது எதுவுமே உங்களுக்கு கேட்கவில்லை."

"ஆம் குலேரி , நீ சொல்வது எதுவும் எனக்கு கேட்கவில்லை" மானெக் அலுத்துக் கொண்டான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஆனால் ஒருவரது எண்ணங்களை மற்றவர் புரிந்து கொள்ளவே இல்லை.

"சரி நான் போகின்றேன், நீங்கள் திரும்பி விடுங்கள், வீட்டிலிருந்து மிகத்தூரம் வந்துவிட்டீர்கள்"
"நீ நீண்ட தூரம் நடந்து விட்டாய், இனிக் குதிரையில் ஏறிப்போ, நடக்க வேண்டாம்"
"பிடியுங்கள், உங்கள் புல்லாங்குழலை"
"வேண்டாம் நீயே வைத்துக்கொள்"

"சந்தைக்கு வரும் போது வாசிக்கப் போகின்றீர்களா?" அவள் புன்னகையுடன் கேட்டாள்.

அவன் கண்களில் சூரியன் பட்டுப் பிரகாசித்தது. மானெக் முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டான். குலேரிக்கு குழப்பமாக இருந்தது. வெறுப்புடன் தோள்களை ஒருதடவை உயர்த்திய படி சாம்பா நோக்கி பயணிக்கத் தொடங்கினாள். மானெக் தனது ஊரை நோக்கித் திரும்பி நடந்தான்.

அவன் வீட்டுக்குள் நுழைந்து சலிப்புடன் படுக்கையில் சாய்ந்து கொண்டான்.

"நீண்ட நேரம் நீ வெளியே இருந்து விட்டாய், சாம்பா வரைக்கும் போனாயோ?" தாய் கேட்டாள்.

"இல்லை மலை உச்சிவரையும்தான் போனேன்" கொஞ்சம் கடுப்பாகச் சொன்னான்.

" ஏன் காகம் மாதிரிக் கரைகிறாய்? ஒரு ஆண் மகனாக இரு" தாயும் கடுமையாகவே சொன்னாள். மானெக் சுருக்கென்று இவ்வாறு பேச நினைத்தான்.

"நீ ஒரு பெண், இந்த நிலையில் ஏன் என்னைப் போல் உன்னால் அழ முடியவில்லை"

ஆனால் அவன் பேசவில்லை. மானெக்கும், குலேரியும் திருமணம் முடித்து ஏழு வருடங்களாகியும் குழந்தைகள் இல்லை. மானெக்கின் தாய் எட்டாம் வருடமும் அவர்கள் குழந்தை இல்லாமல் வாழ்வதை விரும்பவில்லை. இதனை இரகசியமாக முடித்து வைக்க விரும்பினாள். ஐநூறு ரூபா பணம் கொடுத்து மானெக்குக்கு இரண்டாம் திருமணம் செய்ய மணப்பெண்ணை ஏற்பாடு செய்துவிட்டாள். குலேரி அறுவடைத் திருவிழாவுக்கு போகும் வரை காத்திருந்தாள். மானெக்குக்கு இது தெரியும். தாய் மீதான பணிவாலும், சம்பிரதாயங்களின் பிரகாரமும் அவனால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க முடியவில்லை. ஆனால், மானெக் உடல் மட்டும் இங்கிருந்தது. உள்ளம் முழுவதும் குலேரியிடம் இருந்தது.

✦✦✦✦✦

ஒருநாள் அதிகாலை மானெக் திண்ணையில் இருந்து சுங் கானைப் புகைத்துக் கொண்டிருந்தபோது அவனது பழைய நண்பன் பவானி, வீதியில் அவனைக் கடந்து போனான்.

"ஏய் பவானி, எங்கே இந்த விடிகாலையில் போகிறாய்?" பவானி நின்றான். அவனது தோளில் சிறிய பொதி ஒன்று இருந்தது.

"விசேடமாக ஒரு இடமும் இல்லை"

"நீ எங்கு வேண்டுமானாலும் போ, எனக்கென்ன!"

"புகைக்கின்றாயா?"
பவானி மானெக் முன்னால் குந்தி இருந்து கொண்டு மானெக்கின் சுங்கானை வாங்கிப் புகை விட்டுக் கொண்டே...

"நான் சம்பாவுக்கு சந்தைக்கு போகின்றேன்" பவானியின் பதில் மானெக்கின் இதயத்தில் கூரான ஊசியால் குத்துவது போல இருந்தது.
"இன்றைக்குச் சந்தை இருக்கிறதா?"

"ம்...... ஒவ்வொரு வருடமும் இதே நாளில் சந்தை கூடும்" பவானி துளைப்பதுபோல பதில் சொன்னான்.

"உனக்கு ஞாபகம் இல்லையா? ஏழு வருடங்களுக்கு முன்பு இதே நாளில் நானும் நீயும் இதே சந்தைக்குப் போயிருக்கிறோம்." பவானியின் வார்த்தை மானெக்கைக் குத்திக்காட்டுவதுபோலவும், மனச் சாட்சியைத் தட்டுவது போலவும் இருந்தது. அவனை மிகுந்த கவலை கொள்ளவும் வைத்தது. பவானி சுங் கானைக் கீழே வைத்து விட்டு, தனது பொதியைத் தூக்கிக் கொண்டு புறப்படும்போது, அவனது பொதியில் புல்லாங்குழல் ஒன்று இருப்பதை மானெக் கண்டு கொண்டான். பவானி மறையும்வரை மானெக்கின் கண்கள் அந்தப் புல்லாங்குழலிலேயே நிலைத்திருந்தன. மறுநாட்காலை, மானெக் வயலில் இருக்கும்போது பவானி திரும்பி வருவதைக் கண்டான். அவனது முகம் கவலையால் சாம்பல் பூத்திருந்தது.

"குலேரி இறந்துவிட்டாள்" பவானி மிகத் தாழ்ந்த குரலில் சொன்னான்.

"என்ன............?."

"அவள் உனது இரண்டாம் திருமணம் பற்றிக் கேள்விப்பட்டதும், தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றித் தற்கொலை செய்துகொண்டு விட்டாள்" மானெக் தன்னுடைய வாழ்க்கை எரிந்துபோய்விட்டதாக எண்ணி எங்கோ வெறித்துப் பார்த்தான். நாட்கள் நகர்ந்தன.

(16ஆம் பக்கம் பார்க்க)

15 பெப்ரவரி 2



# சர்வதேச நீதிமன்
# இலங்கையை நிறு
# நிறைய வழிகளு

- பதவிக்காக கொள்கையை விட்டு
- கூட்டமைப்பின் தலைவராக வர
- ஜனாதிபதித் தேர்தலில் எங்கள்

**கே**: நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் இடம்பெறவுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனித்துப் போட்டி யிடப் போகின்றதா?

**ப**: அப்படிச் சொல்வதில் உடன்பாடில்லை.

**கே**: அப்படியானால் எவருடன் கூட்டு?

**ப**: கொள்கையுடன் எவருடன் சேரலாமோ அவர்களுடன் சேரத் தயார். கடந்த 10 ஆண்டுகளில் கொள்கை அடிப்படையில் கூட்டுச் சேரக் கூடிய தரப்புக்களுடன் சேர்ந்து பயணித்துள்ளோம். தமிழ் மக்கள் பேரவை, விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். என்று இந்தத் தரப்புக்கள் கொள்கையுடன் இருந்த காலத்தில், அவர்களுடன் கூட்டுச் சேரத் தயாராக இருந்தோம். கட்சிகள் என்ற கோணத்தில் வேறு எவரும் வரவில்லை.

**கே**: விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தரப்புக்களுடன் கூட்டணி அமையுமா?

**ப**: இல்லை. கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் கொள்கை அடிப்படையில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடத் தயாராக இருந்தோம். ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எவ். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைவிட, மிக மோசமான தரப்பான ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து எங்களை வெட்டிப் போட்டியிட்டது. தமிழ் மக்கள் பேரவையின் கொள்கை அடிப்படையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். சேரத் தயார் என்றால், நாங்கள் சேரத் தயாராகத் தான் இருந்தோம். ஈ.பி.ஆர்.எல்.எவ். இப்படி மோசமானதொரு பிழையை விட்ட பின்னர் அவர்களுடன் கூட்டுச் சேர்வதற்குத் தயாரில்லை.

**கே**: உங்களுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடத் தயாரான ஈ.பி.ஆர்.எல்.எவ். அந்த நிலைப்பாட்டிலிருந்து குத்துக்கரணம் அடிப்பதற்கு காரணம் என்ன?

**ப**: 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி, ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அவசரமாக புதுடில்லி போகவேண்டியிருப்பதாகக் கூறினார்.

அதற்கு முதல்நாள் மாகாணசபையில், வடக்கு மாகாண முதல மைச்சராக இருந்த விக்னேஸ்வரன், நாங்கள், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ் மக்கள் பேரவையின் சட்ட ஆலோசகர்களான புவிதரன், காண் டீபன் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது. நாங்கள் கூட்டாகச் சேர்வதாக முடிவெடுக்கப்பட்டது. பொதுச் சின்னம், பொதுக் கட்சியில் போட்டியிடுவதற்கு, பதிவு செய்வதற்கு முடிவு எடுக்கப்பட்டது. தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சென்று பதிவு விடயங்களை என்னை முன்னெடுக்குமாறும், தமது கட்சி சார்ந்த ஆவணங்கள் ஏதாவது தேவைப்பட்டால் கட்சியின் செயலர் சிவசக்தி ஆனந்தனுடன் தொடர்புகொள்ளுமாறும் சுரேஷ் அந்தக் கூட்டத்தில் வைத்துத் தெரிவித்தார். பின்னர் நவம்பர் 19ஆம் திகதி இரவு சுரேஷ் நாடு திரும்பினார். பேரவையின் சில முக்கிய உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு, "உதயசூரியன் சின்னத்தில் மாத்திரம்தான் போட்டியிடலாம். வேறு சின்னத்தில் போட்டியிடவே முடியாது. கஜேந்திரகுமாரையும் எப்படியாவது அதற்கு இணங்கச் செய்யுங்கள்" என்று கூறினார். இதற்கு முன்னர் 12ஆம் திகதி நடந்த தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் பிரஸ்தாபித்திருந்தார். உதயசூரியன் சின்னத்தில் கடைசிவரையில் போட்டியிட முடியாது என்று அன்றைய பேரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. தேர்தலில் சுரேஷ் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டார்.

தேர்தலுக்குப் பின்னர் அவர் எவ்வாறு நடந்துகொண்டார்?

சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ்., வவுனியா நகர சபையில், ஈ.பி.டி.பி., ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மொட்டுக் கட்சி இணைந்துதான் தவிசாளர் பதவியைப் பெற்றுக் கொள்கின்றது. வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச சபையில், மொட்டுக் கட்சியின் 5 சிங்கள உறுப்பினர்கள் - முதல் தடவை யாக சட்டவிரோதக் குடியேற்றங்கள் ஊடாகத் தெரிவு செய்யப்பட்டனர். அந்த 5 சிங்கள உறுப்பினர்களுடன் ஆதரவைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகப் போட்டியிடுகின்றது ஈ.பி.ஆர்.எல்.எவ். போட்டியிடுகிறது அப்படியானால் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் கொள்கை என்ன? பதவியைப் பெற்றுக் கொள்வதற்காக எவருடனும் கூட்டுச் சேரும் அரசியல் கலாசாரத்தில் நாங்கள் இல்லை.

**கே**: தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நிகரான மாற்று அணிகளுக்கு இடையிலேயே ஒற்றுமையில்லையே?

**ப**: மாற்று அணி யார் என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் 6 கட்சிகள் கூட்டம் நடைபெற்றது. இறுதியில் 5 கட்சிகள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. அந்த ஒப்பந்தத்தில் கொள்கை ரீதியான 13 கோட்பாடுகளையும் நாங்கள்தான் எழுதினோம். கொள்கையை நடைமுறைப்படுத்தும் இடம் நாடாளுமன்றத்தில் இருக்கும் அரசமைப்புப் பேரவை. அரசமைப்புப் பேரவையில் ஏற்கனவே இடைக்கால அறிக்கை இருக்கின்றது. இடைக்கால அறிக்கை ஒற்றையாட்சி அறிக்கை என்பதை, புளொட் தலைவர் சித்தார்த்தன் சொல்லியிருக்கின்றார். ரெலோ அதைச் சொல்லி நிராகரித்திருக்கின்றது. விக்னேஸ்வரன் நிராகரித்திருக்கின்றார். ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியும் நிராகரித்துள்ளது. தமிழ் அரசுக் கட்சி மாத்திரம்தான் ஏற்றுக் கொள்கின்றது. குறிப்பாகச் சொன்னால் சுமந்திரன் மாத்திரம்தான் ஏற்றுக் கொள்கின்றார். இடைக்கால அறிக்கையின் அடிப்படையில்தான் எதிர்காலத்தில் பேச்சுக்கள் நடக்கும் என்று சுமந்திரன் கூட்டத்தில் சொல்கின்றார். நாங்கள் அதைக் கைவிட முடியாது என்கின்றார். கொள்கை என்று நீங்கள் எழுதியது எல்லாம் பொய் என்று நாங்கள் சொல்கின்றோம். கொள்கை நடைமுறையாகும் இடம் நாடாளுமன்ற அரசமைப்புப் பேரவை. அதில் ஒற்றையாட்சி என்று எழுதிய இடைக்கால அறிக்கையைத்தான் முன்வைக்கப் போகின்றீர்கள். ஒற்றையாட்சி இடைக்கால அறிக்கையை நிராகரிக்கின்றோம் என்பதைக் குறிப்பிட வேண்டும் என்று சொல்ல , அதை நிராகரிக்கின்றார்கள். இடைக்கால அறிக்கையின் அடிப்படையில்தான் போகவேண்டும் என்று சுமந்திரன் சொல்ல விக்னேஸ்வரனும் அதனை ஏற்றுக் கொள்கின்றார்.

**கே**: மாற்று அணிகள் கொள்கை அடிப்படையில் இணைய முடியாமல் இருப்பதாகச் சொல்கின்றீர்கள். ஆனால் அவர்கள் ஆசனப் பங்கீட்டுப் போட்டியால்தான் இணைய முடியாமல் இருப்பதாக கூட்டமைப்பு குற்றம் சுமத்துகின்றதே?

**ப**: இந்தப் பிரச்சினை கூட்டமைப்புக்குள்ளும் இருக்கின்றது. கூட்டமைப்பிலிருந்து வெளியில் வந்தவர்களாலும் அதே பிரச்சினைதான். கொள்கை என்றால் அவர்கள் ஒருபோதும் ஒன்றாக இருக்க முடியாதே? உதாரணத்துக்கு ஒரு விடயத்தைச் சொல்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இரா.சம்பந்தனுக்குப் பின்னர் கட்சியின் தலைமைப் பொறுப்புக்கு வருவதற்கு சுரேஷ் பிரேமசந்திரன் கனவு கண்டுகொண்டிருந்தார். அது எல்லோருக்கும் தெரியும். 2010ஆம் ஆண்டு நாங்கள் வெளியேறுவதற்கு அல்லது வெளியேற்றப்படுவதற்கு சம்பந்தனுக்கு முழு ஒத்துழைப்பையும் கொடுத்தவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

**கே**: அப்படிப்பட்ட சுரேஷ
டுச் செல்லத் தயாராகினீர்ச

**ப**: பதவி எங்களுக்குப் பி
பிரேமச்சந்திரன் கொள்கைதால்
யக் கூட்டமைப்பிலி ருந்து வெளியி
சந்தர்ப்பம் கொடுக்கலாம் என்று அ
லில் மக்களிடம் ஆணை கேட்கும் இ
அதன் பின்னர் அவருக்கு நாம் எப்படி
விக்னேஸ்வரன், எந்தவொரு அரசி
2013ஆம் ஆண்டுதான் வந்தவர்.
அவருக்கு வாய்ப்புக் கொடுப்போம்
சுரேஷ் பிரேமசந்திரன் அப்படியில்
போராடியவர். நீண்ட அரசியல் பின்
வர், உள்ளூராட்சி சபைத் தேர்தலின்
கொண்டதை எப்படி மன்னிக்கலாம்.

**கே**: கொள்கை ,கொள்கை எ
இருக்கின்றீர்கள். உங்கள்
கூட்டுச்சேர முடியவில்லை. அரசி
தேர்தல்களில் தோல்விகளைத் த
ணம். இலட்சியம், கொள்கையில்
அதனை நோக்கி முன்னேறுவதற்
லது விட்டுக் கொடுப்பு ஏன் செய்

**ப**: எங்கள் இலக்கு நாடாளுமன்ற
கையை விட்டு பதவிகள் தேவை

**கே**: உங்கள் கொள்கையை
உறுப்பினர் பதவி உதவாத

**ப**: இல்லை. கொள்கையை விட்
நாளும் இலக்கை அடைய முடி

**கே**: கொள்கையில் நீங்கள் உ
அதனை ஏற்றுக் கொள்ளவி

**ப**: அன்றைய சூழலில் அதாவ
னால் மக்கள் துவண்டிருந்த
காப்பு என்று தமிழர்கள் விரும்பிய
கொள்கையை ஏற்றுக் கொள்ளமாட்
பின்னர் 2018ஆம் ஆண்டு உள்ளு
மான மாற்றம் நடந்தது.
2015ஆம் ஆண்டு நாடாளுமன்ற
கூட்டமைப்புக்கு எதிரான மனநிலை
றத்துக்கான ஆதரவு அதிகரித்திருந்
கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்ப
அரசியல் தீர்வு காணப்படும். அதற்
தருமாறு கேட்டிருந்தார். அதனால்
சரிந்தது. இதனால் 2015ஆம் ஆண்
தித்துவம் கிட்டவில்லை. 2015ஆ
தலில் 80 சதவீதம் வாக்குகளைப் பெ
2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி
வாக்குகளையே பெற்றுக் கொண்ட
கிக் கொண்டுள்ளார்கள். மக்கள் புது
கின்றார்கள். எங்கள் பக்கம் கணிச
சபைத் தேர்தலுடன் வந்தது. அது
நம்பிக்கை எங்களுக்கு உண்டு. கண
லிருந்து கிடைக்கவில்லை என்றால்
முயற்சிக்கவேண்டுமே தவிர அதனை
தரப்புக்களுடன் கூட்டுச் சேர்வதாக

# ன்றில்
# றுத்த
# நண்டு!

## விட்டுக்கொடுக்கோம்
## வர கனவு கண்டவர் சுரேஷ்
## கள் முடிவை மக்கள் ஏற்கவில்லை

**சமகால அரசியல் பற்றி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 'உதயன் - சஞ்சீவி ' வாசகர்களுக்காக வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.**

சந்திப்பு ஏ.ஏ.

> பதவி எங்களுக்குப் பிரச்சினையில்லை. சுரேஷ் பிரேமச்சந்திரன் கொள்கைதான் முக்கியம் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பிலிருந்து வெளியில் வரும்போது அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கலாம் என்று அதைக் கொடுக்கின்றோம். தேர்த லில் மக்களிடம் ஆணை கேட்கும் இடத்தில் சுரேஷ் தவறுகின்றார்.

சுரேஷுடன் பின்னர் ஏன் நீங்கள் கூட்
ராகினீர்கள்?
**ருக்குப் பிரச்சினையில்லை. சுரேஷ்
ள்கைதான் முக்கியம் என்று தமிழ்த் தேசி
வெளியில் வரும்போது அவருக்கு ஒரு
என்று அதைக் கொடுக்கின்றோம். தேர்த
கேட்கும் இடத்தில் சுரேஷ் தவறுகின்றார்.
நாம் எப்படிச் சந்தர்ப்பம் கொடுக்க முடியும்.
ாரு அரசியல் பின்னணியும் இல்லாமல்
வந்தவர். கொஞ்சம் பிழை விடுவதற்கு
டுப்போம் என்று சிந்தித்தோம். ஆனால்
ப்படியில்லையே. அவர் ஆயுதம் ஏந்திப்
யல் பின்னணியுடையவர். அப்படிப்பட்ட
தர்தலின்போதும், அதன் பின்னரும் நடந்து
ிக்கலாம்.**

ாள்கை என்று விடாப்பிடியாக நீங்கள்
உங்கள் கொள்கைகளால் எவருடனும்
லை. அரசியலில் தேர்தல் முக்கியமானது.
ளைத் தழுவுவதற்கு இதுவும் ஒரு கார
ள்கையில் உறுதியாக இருந்து கொண்டு
றுவதற்கான வழிகளில் தொய்வு அல்
ஏன் செய்யக் கூடாது?
**ாளுமன்ற உறுப்பினர் பதவி அல்ல. கொள்
கள் தேவையில்லை.**

ாகையை அடைவதற்கு நாடாளுமன்ற
உதவாதா?
**கயை விட்டு ஒரு பதவியைப் பெற்று ஒரு
டைய முடியாது.**

நீங்கள் உறுதியாக இருந்தாலும் மக்கள்
கொள்ளவில்லையே?
**ல் அதாவது 2010ஆம் ஆண்டில், போரி
டிருந்த காலத்தில், ஒற்றுமைதான் பாது
திரும்பிய நேரத்தில், நாங்கள் சொல்லும்
ள்ளமாட்டார்கள்தான். 10 ஆண்டுக்குப்
டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கணிச**

**ாளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசியக்
மனநிலையே மக்களிடத்திலிருந்தது. மாற்
ரித்திருந்தது. ஆனாலும், தமிழ்த் தேசியக்
இரா.சம்பந்தன் 2016ஆம் ஆண்டுக்குள்
ும். அதற்கான கடைசிச் சந்தர்ப்பத்தைத்
அதனால் அந்த மாற்றத்துக்கான ஆதரவு
ஆம் ஆண்டு நாங்கள் எதிர்பார்த்த பிரதிநி
2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்
களைப் பெற்றுக் கொண்ட கூட்டமைப்பு,
ளூராட்சி சபைத் தேர்தலில் 35 சதவீத
கொண்டது. மக்கள் பிரச்சினையை விளங்
மக்கள் புதுத் தலைமைத்துவத்தைத் தேடு
ம் கணிசமான அங்கீகாரம் உள்ளூராட்சி
து. அது இன்னமும் அதிகரிக்கும் என்ற
ண்டு. கணிசமான அங்கீகாரம் மக்களிடத்தி
என்றால், அதனைப் பெற்றுக் கொள்ள
விர அதனை விடுத்து கொள்கையில்லாத
சேர்வதாக இருக்கக்கூடாது.**

**கே**: நீங்கள் எப்போதும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பையே விமர்சித்துக் கொண்டிருக்கின்றீர்கள். இப்போது விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் தரப்புக்களையும் சேர்த்து விமர்சிக்கின்றீர்கள். நீங்கள் விமர்சன அரசியல்தான் செய்கின்றீர்களா? உங்கள் கொள்கையைப் பரப்புரை செய்வதில்லையே?

**ப: எங்கள் கொள்கை மக்களுக்குத் தெரியும். நாங்கள் வைத்திருப்பது எங்கள் கொள்கை இல்லை. தமிழர் ஒரு தேசம் என்பது தமிழ்த் தேசியத்தின் கொள்கை. தமிழ் அரசுக் கட்சியின் 1951 ஆம் ஆண்டு இடம் பெற்ற அவர்களது முதலாவது மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானம். இந்த நிலைப்பாட்டிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விலகுகின்றது என்பதாலேயே நாங்கள் அதிலிருந்து வெளியேறுகின்றோம். கொள்கையைச் சொல்லிக் கொண்டு அதனை எங்கே பிழை விடுகின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட் டியே ஆகவேண்டும். கூட்டமைப்பு சரியாகச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தவில்லை என்று விமர்சனம் முன்வைக்கின்றோம். அதனை ஏன் சொல்கின்றோம். 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாமல் ஆட்சி மாற்றம் நடந்திருக்காது. அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேரம் பேசியிருக்கவேண்டும். ஆனால் கூட்டமைப்பு என்ன செய்தது? நிபந்தனையில்லாத ஆதரவை வழங்கியது. அதனை நாம் சுட்டிக்காட்டும்போது அது கூட்டமைப்புக்கு எதிரான விமர்சனம்தான்.**

**அதனை விமர்சனமாகப் பார்க்கக் கூடாது. எங்கே தவறிழைக்கப்பட்டது என்பதற்கான உதாரணமாக அது பார்க்கப்பட வேண்டும். அது திரும்பவும் நடக்கக் கூடாது என்று சுட்டிக்காட்டும்போது அது தவிர்க்க முடியாத விடயம். ஜனநாயக அரசியலில் ஒரு தரப்பு ஆட்சியிலிருக்க எதிர்தரப்பு, அவர்கள் விடும் பிழைகளைச் சுட்டிக்காட்டியே ஆகவேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் தயாரித்த ஆவணத்தை கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டு கையெழுத்திட்டது. நாளைக்கு தேர்தலில் இதுதான் தமது கொள்கை என்று அவர்கள் சொல்வார்கள். அவர்கள் கொள்கையில் உறுதியாக இருக்கின்றார்களா? இல்லையா ? என்பதை எப்படி நிரூபிப்பது என்றால், அவர்கள் செய்யும் பிழைகளை வைத்துத்தான். இவை நேர்மையானவை அல்ல. இவர்கள் வெறும் கோசத்துக்காக இவற்றை முன்வைக்கின்றார் கள் என்று மக்களுக்கு விளங்கப்படுத்த முடியும். எங்கள் நிலைப் பாட்டை எவரும் ஏற்றுக் கொள்ள விரும்புகின்றார்கள் இல்லை. தமிழர் ஒரு தேசம், எங்களுக்கு தனித்துவமான இறைமை உண்டு, பூகோள அரசியலைப் பயன்படுத்த வேண்டும் என்பதை நாம் பலமுறை சொல்கின்றோம். கஜேந்திரகுமாரின் பூகோளம் என்று கிண்ட லடிக்கின்றார்கள். இவை எல்லாம் எமது கொள்கை நிலைப்பாடுகள். எங்கள் கொள்கையை விளங்கப்படுத்து கின்றோம். அதனை அடைவதற்குரிய அணுகுமுறையைச் சொல்கின்றோம். அதேசமயம் எங்கெங்கு பிழைகள் விட்டுள்ளார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.**

**கே**: பொறுப்புக்கூறல் விடயங்களில் இலங்கையை சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல முடியாது. தற்போது இருக்கும் (ஐ.நா. மனித உரிமைகள் சபை) பிடியையும் விட்டு விட முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆனால் நீங்கள், சர்வதேச நீதிமன்றுக்கு இலங்கையைக் கொண்டு செல்ல முடியும் என்று திரும்பத் திரும்ப கூறி வருகின்றீர்கள். இலங்கையை சர்வதேச நீதிமன்றுக்கு கொண்டு செல்வதற்கான வழிவரைபடம் என்ன?

**ப: எத்தனையோ வழிகள் உள்ளன. மிகச் சுலபமான பாதை, வல்லரசுகளின் போட்டியைப் பயன்படுத்தி நாங்கள் முன்கொண்டு செல்வது. மேற்கு நாடுகள் தமிழர்களின் விடயத்தில் பொறுப்புக் கூறலில் கொஞ்சம் அக்கறை செலுத்துவதாகச் சொல்லுகின்றார்கள். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ். இந்த மூன்று நாடுகளும் பாதுகாப்புச் சபையில் 5 நாடுகளில் இவர்கள் மூவரும் நிரந்தர உறுப்பினர்கள். மற்றைய இரு நாடுகள் சீனாவும், ரஷ்யாவும். சீனா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கையைக் காப்பாற்றும் என்று சுமந்திரன் உள்ளிட்ட பலர் சொல்கின்றார்கள். அதனால் பாதுகாப்புச் சபை ஊடாக குற்றவியல் நீதி மன்றுக்கு இலங்கையைக் கொண்டு செல்ல முடியாது எனக் கூறுகின்றார்கள். ஐ.நா. பாதுகாப்புச் சபை வரலாற்றிலேயே ஆகக் குறைந்தளவு தடவை வீட்டோவைப் பயன்படுத்திய நாடு சீனா. தீர்மானம் நிறைவேற்றுவது தனக்கு நேரடியாகச் சவால் என்றால் மாத்திரமே, சீனா தனது வீட்டோவைப் பயன்படுத்தியுள்ளது. பெரும்பான்மையான நாடுகளின் கருத்துக்கள் ஒன்றாக இருந்தால், வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது தவிர்த்துக் கொள்வதுதான் அவர்களின் போக்காக இருந்துள்ளது. 2017ஆம் ஆண்டு வரையில் சீனா 11 தடவையே வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை ஒத்துழைக்கத் தயாரில்லாவிட்டால் அங்கு ஒன்றுமே நடக்காது. பொறுப்புக் கூறல் நடக்க வேண்டுமாக இருந்தால் பாதுகாப்புச் சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டு சென்றே ஆக வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நம்பிக்கையில்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் தான் நம்பிக்கை இருக்கின்றது என்று பாதிக்கப்பட்ட தரப்புக்கள் சொன்னால், பொறுப்புக் கூறலை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று சொல்லும் நாடுகள், வேறுவழியில்லாமல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருப்பார்கள். ஐ.நா. பொறிமுறையில், பாதிக்கப்பட்ட தரப்பு விரும்புவ தைத்தான் செய்யவேண்டும் என்ற கொள்கையே இருக்கின்றது. கடந்த 5 ஆண்டுகளில் அமெரிக்கா, பாதுகாப்புச் சபைக்கு இந்த விடயத்தைக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தால், சீனா வீட்டோவை பயன்படுத்தி இருக்காது. கடந்த 5 ஆண்டுகளில் இலங்கையில் ஆட்சியிலிருந்த தரப்பு சீனாவுக்கு எதிரானது.**

**கே**: நீங்கள் சொல்வதைப்போன்று சீனாவுக்கு எதிரான, மேற்கு நாடுகளுக்கு விருப்பமான அரசு இருக்கும்போது, மேற்கு நாடுகள் தங்களுக்குச் சார்பான அரசுக்கு எதிராக எப்படி இந்த விடயத்தை பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் செல்லும்?

**ப: அதுதான் பிரச்சினை. அதைத்தான் நாங்கள் சுட்டிக்காட்டி வருகின்றோம். தமிழர்களின் இன அழிப்பு என்ற விடயம் வல்லரசுகளின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. உள் அரசியலை கையாளப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோணத்தில் எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. அதுதான் எங்களின் விமர்சனம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வல்லரசுகளின் நிகழ்சி நிரலுக்கு இணங்கிச் செல்கின்றதே தவிர, தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு நேர்மையாகச் செயற்படவில்லை.**

**கே**: வல்லரசுகளைப் பகைத்துக் கொண்டு எப்படி இதனை முன்கொண்டு செல்வது?

**ப: ரணில் மற்றும் சிறிசேனவை வைத்து ராஜபக்ஷ ஆட்சியை வீழ்த்தியுள்ளோம். நாளைக்கு அவர்கள் திரும்பி வரலாம். ராஜபக்சாக்கள் திரும்பி வந்தால் இந்த இலங்கை விடயத்தை சர்வதேச அரங்கில் உயிருடன் வைத்திருக்கவேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வைத்திருப்பதற்கு விரும்பினார்கள். அதில் ஒரு பிரயோசனமும் இல்லை என்பதால் அங்கு வைத்திருக்க விரும்பினார்கள். சர்வதேச அரங்கில் வைத்திருப்பதில் பிரச்சினையில்லை. அதை எந்த இடத்தில் வைத்திருக்கவேண்டும் என்பதை நாங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட தரப்பாகிய நாங்கள் இலங்கை விடயத்தை பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று அழுத்தம் கொடுத்திருந்தால் வேறு வழியில்லாமல் கொண்டு சென்றிருப்பார்கள். இன்னொரு வழியும் இருக்கின்றது. மியன்மாரும் இலங்கை போன்று ரோம் பிரகடனத்தில் கையெழுத்திடவில்லை. ரோம் பிரகடனத்தில் கையெழுத்திடாவிட்டால் நேரடியாக சர்வதேச நீதிமன்றுக்குச் செல்ல முடியாது.**

**ஆனாலும் மியன்மார் விடயத்தில் புதிய அணுகுமுறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மியன்மாரில் ரோஹிங்ய மக்கள் திட்டமிட்டு இன அழிப்புச் செய்யப்படும்போது பலர் தப்பி வேறு நாடுகளுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். இவ்வாறு அகதிகளாகச் செல்லும் மக்களைப் பல நாடுகள் ஏற்றுக் கொள்கின்றன. அவர்களின் புகலிடக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கின்றன.**

**இவ்வாறு ரோஹிங்ய மக்களை ஏற்றுக் கொள்ளும் நாடு ரோம் பிரகடனத்தில் கையெழுத்திட்டிருந்தால், சர்வதேச நீதிமன்றம் அந்த நாடு ஊடாக மியன்மாருக்கு எதிரான விசாரணையைத் தொடக்கலாம். எங்கள் தமிழ் மக்கள் ரோம் பிரகடனத்தில் கையெழுத்திட்ட எத்தனையோ நாடுகளுக்குச் சென்றிருக்கின்றார்கள். போய் அங்கு தஞ்சக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள். இங்கு நடக்கின்ற அநியாயங்களை முன்னிறுத்தித்தான் தஞ்சக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள். அந்த நாடுகளும் அதனை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு புகலிடம் வழங்கியுள்ளன.**

(மறுபக்கம் பார்க்க)

> கட்சி பதிவு செய்யப்படுமா இல்லையா என்பது எங்களைப் பொறுத்தவரையில் ஒரு பிரச்சினையில்லை. கட்சிக்குள் அந்த விவாதம் இல்லை. இது அரசியல் இயக்கமாக இருக்க வேண்டும். அரசியல் கட்சியாக மாறக் கூடாது என்பதுதான் அநேகமான உறுப்பினர்களின் கருத்து. கட்சிக்குள் பதிவுக்கான தேவை ஏற்படும்போது அதனைச் செய்யலாம்.



பாதுகாப்புச் சபை, வீட்டோ அதிகாரம் என்பவற்றைத் தாண்டி சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குச் செல்லும் வழியை மியன்மார் இன்று காட்டியிருக்கின்றது. சட்டத்தரணி என்று பெயரை வைத்துக் கொண்டு தத்துவம் பேசுகின்ற கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கு இந்த அறிவு வரவில்லையா? இந்த விளக்கம் அவருக்குத் தெரியாதா?

**கே:** மக்கள் தஞ்சமடைந்துள்ள நாடுகள்தானே சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டு செல்ல வேண்டும்?

**ப:** இல்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நேரடியாக விசாரணைகளை ஆரம்பிக்கின்றது.

**கே:** அப்படியானால் தமிழ் மக்கள் எவ்வளவோ காலமாக, ரோம் பிரகடனத்தில் கையெழுத்திட்ட நாடுகளில் தஞ்சமடைந்தும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஏன் விசாரணையை ஆரம்பிக்கவில்லை?

**ப:** சர்வதேச குற்றவியல் நீதிமன்றிலும் அரசியல் இருக்கலாம். எந்தவொரு இடத்திலும் நீங்கள் ஒரு கருத்துருவாக்கத்தைச் செய்யவேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் அதனைக் கேட்கவேண்டும். அப்பொழுது சர்வதேச சமூகம் வேறுவழியின்றி இதனை முன்னெடுக்கும். மியன்மார் தொடர்பில், ஹேக்கில் உள்ள ஐ சி ஜே யில் ஆபிரிக்க நாடு ஒன்று வழக்குத் தாக்கல் செய்தது. ஒரு நாடு மியன்மாருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தது. ஐ சி ஜேயில் ஒரு நாடுதான் வழக்குத் தாக்கல் செய்யமுடியும். முழு விசாரணை நடைபெற்று, மியன்மார் அரசு இந்தக் கோணத்தில்தான் நடந்து கொள்ளவேண்டும் என்று இடைக்காலக் கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. இனப்படுகொலை நடப்பதை விசாரிக்கவேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டு அந்த இனப்படுகொலையை தவிர்த்துக் கொள்வதற்காக இந்தவிடயங்களை நீங்கள் செய்யவேண்டும் என்று இடைக்காலக் கட்டளையைப் பிறப்பித் துள்ளது. எத்தனையோ வழிகள் உள்ளன. அவற்றை ஏன் பிரயோகிக்கத் தயாரில்லை?

**கே:** தமிழ் தேசத்துக்கான அங்கீகாரம் என்ற கொள்கையை அடைவதற்கான பாதை என்ன? தற்போதுள்ள சூழலில் அதனை எப்படிச் செய்ய முடியும்?

**ப:** இந்திய – இலங்கை ஒப்பந்தம். சிங்கள மக்கள், தமிழ் மக்கள் என்று யாரும் விரும்பாமல் இந்தியா விரும்பியதற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இலங்கையில் போட்டி. ஜே.ஆர். ஜெயவர்த்தன அமெரிக்கா சார்பானவர். எனவே இலங்கைக்கு நெருக்கடியைக் கொடுக்க இந்தியா இங்கு ஆயுதப் போராட்டத்தை வளர்த்தது. ஜே.ஆருக்கு நெருக்கடி ஏற்படுகின்றது. அவருக்கு இரண்டு தெரிவுகள். ஒன்றில் அமெரிக்கப் படைகள் இங்கு வருவது. இல்லாவிடின் இந்தியாவின் பக்கம் சார்வது. வேறு வழியில்லாமல் இந்தியாவுடன் சமரசத்துக்குச் செல்கின்றார். அமெரிக்கா அன்று இந்தியாவுடன் நேரடியாக மோதுவதற்கு விரும்பவில்லை. பனிப்போர் முடிவுக்கு வருகின்றது. இந்தியா அமெரிக்காவுடன்தான் சேரும் என்பது அமெரிக்காவின் பார்வை. ஜே.ஆர். வேறு வழியில்லாமல் இந்தியாவுடன் சமரசத்துக்குச் செல்கின்றார். இந்தியா இவ்வளவும் செய்தது, அமெரிக்கா இலங்கையில் கால் ஊன்றாமல் இருப்பதற்கு. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில், இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில், ஒரு மூன்றாம் தரப்பு நாடு, இலங்கையில் இந்தியாவின் அனுமதியின்றி கால் வைக்க முடியாது. இன்று சீனா வந்துவிட்டது. 20 ஆண்டுகளின் பின்னர் ஒப்பந்தத்தின் நோக்கம் முற்று முழுதாக இல்லாமல் போயுள்ளது.

இலங்கையை மையப்படுத்தி சீனா, இந்தியா, மேற்குக்கு இடையில் போட்டி இருக்கின்றது. கோத்தாபயவும் இதனைச் சொல்லியுள்ளார். இலங்கையில் தொடர்ந்தும் சீனா வேர் ஊன்றுவது இந்தியாவுக்கு முற்றுப்புள்ளியை வைக்கும். இந்தியா பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சீனாவை இலங்கைக்கு வரச் சொல்லி அம்பாந்தோட்டையில் துறைமுகத்தை அமைத்துக் கொடுத்தது மாத்திரமல்ல, கொழும்பில் சீனாவுக்கு தனி நாட்டையும் இலங்கை அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்தியாவும், மேற்கு நாடுகளும் இலங்கைக்கு நெருக்கடி கொடுப்பதையே விரும்பும். அவர்களின் நெருக்கடி முதல் கட்டத்தில், தாங்கள் விரும்பிய ஆட்சியை இலங்கையில் கொண்டு வருவதாக இருக்கும். அதைத் தாண்டியும் விடயங்கள் தங்கள் கையை மீறிப்போகும் இடத்தில், அவை ஒரு ஆழமான முடிவுக்கு தள்ளப்படும்.

ஆட்சி மாற்றம் என்ற விடயத்தில் எங்களையும் பயன்படுத்தி விட்டுப் போவதை அனுமதிக்க முடியாது. இந்தியா, மேற்கை ஆழமான முடிவுக்கு நாங்கள் கொண்டு வரவேண்டும். இலங்கைக்கு இந்தத் தரப்புக்களால் நெருக்கடி கூடும். அதை நாங்கள் விரும்புகின்ற வழியில் கொடுக்க வைக்கச் செய்யவேண்டும். அதில் பூகோள அரசியலைக் கையாளாமல் அதைச் செய்விக்க முடியாது.

**கே:** பூகோள அரசியலை எப்படி எங்களுச் சார்பாகப் பயன்படுத்த வேண்டும் என்று நீங்கள் கணக்குப் போடுவதைப் போன்றுதானே, சீனாவும், இந்தியாவும், மேற்கும் ஏன் இலங்கை அரசும் கணக்குப்போடும். அப்படியானால் எங்கள் நலன்களை எப்படி அடையமுடியும்?

**ப:** அவைகளால் கையாள முடியாது. இந்தியாவைப் பொறுத்த வரையில், இலங்கையில் சீனாவுக்கு இடம்கொடுத்துள்ளமையால், எங்களுக்கும் இடம்கொடு, அமெரிக்காவுக்கும் இடம் கொடு என்பதல்ல. இந்தியாவின் நிலைப்பாடு இந்தத் தீவில் வேறு எவரும் கால் வைக்க முடியாது. இது தனக்குத் தேசிய பாதுகாப்புப் பிரச்சினை என்பதே. இந்தியாவின் வட எல்லை எல்லாமே எதிரி நாடுகள். காலப் போக்கில் இந்தியா தனது கேந்திரச் சொத்துக்கள் அனைத்தையும் தென்னிந்தியாவில்தான் கொண்டு வந்து குவித்துள்ளார்கள். இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு அமைவாக இலங்கை தனது ஆதிக்கத்தில் இருக்கும் என்றுதான் அவர்கள் இதனைச் செய்து வருகின்றார்கள். அந்த ஒப்பந்தம் செய்த நாடு(இலங்கை) தனது முதல் எதிரிக்கு (சீனா) இடம் கொடுத்தது ஒரு நாளும் இந்தியாவில் ஏற்றுக் கொள்ள இயலாததொன்று.

**கே:** சரி இவ்வளவு நடந்தும் இந்தியா காத்திரமாக எதையும் செய்யவில்லையே?

**ப:** நீங்கள் அப்படிச் சொல்ல முடியாது. இந்தியா மிகத் தெளிவாக எல்லாக் கோணத்திலும் இலங்கைக்குச் சொல்ல வேண்டிய செய்திகளைச் சொல்லிக் கொண்டுதான் வருகின்றது.

**கே:** ஆனால் செயற்பாடுகள் நீங்கள் சொல்வதற்கு மாறாக இருக்கின்றது. கோத்தாபய, மோடியைச் சந்தித்துவிட்டு இந்தியாவில் வைத்தே 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த மாட்டேன் என்று சொல்கின்றார். இந்தியா நெருக்குதல் கொடுக்கின்றது என்றால், அவர் எப்படி அவ்வாறு சொல்லியிருக்க முடியும்?

**ப:** இலங்கை ஒரு நிகழ்சி நிரலுக்குள் இறங்கிவிட்டது. அந்த நிகழ்ச்சி நிரல் இந்தியாவுக்கும் மேற்குக்கும் எதிரானது. இதனால் அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுக்கப்படும். அதேபோன்று அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் விதத்தில் நாங்கள் செயற்பட வேண்டும். நாட்டைப் பிரிக்காமல் தமிழ்த் தேசத்தை அங்கீ கரிக்கும் புதிய அரசமைப்பை உருவாக்க முடியும். நாட்டைப் பிரிப்பது என்றால் இலங்கை தமது எதிரி என்ற முடிவுக்கு இந்தியா, மேற்கு நாடுகள் வந்தால்தான் முடியும். இவற்றை முன்னெடுக்க தமிழர்களுக்கு என்று நிகழ்ச்சி நிரல் இருக்கவேண்டும். நாம் அதைச் செய்யாமல் வல்லரசுதான் உதவி செய்யப் போகின்றது. ஆகவே வல்லரசு விரும்பியபடி எல்லாவற்றையும் செய்ய முன்வந்தால், வல்லரசு எம்மை பாவித்துவிட்டுப் போகும். நாங்கள் இந்தியாவை எதிரியாகப் பார்க்கவில்லை.

**கே:** ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவை நீங்கள் அறிவித்தீர்கள். கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் உங்களை ஆதரித்த மக்கள் கூட அதனை ஏற்றுக் கொள்ளவில்லையே?

**ப:** எங்கள் முடிவை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியான சூழலில், போட்டியிடப் போகும் இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் எவரையும் நம்ப முடியாது என்ற முடிவில்தான் எமது தமிழ் மக்கள் இருந்தார்கள். இதனால்தான் கூட்டமைப்புக்கு எதிரான விமர்சனங்கள் அதிகரித்தன. இந்த நிலமை எங்கே மாறுகின்றது? திட்டமிட்டு கருத்துருவாக்கம் நடக்கின்றது. பயப்பீதி மக்கள் மத்தியில் உருவாக்கப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனைச் செய்கின்றது. கோத்தாபய வந்தால் தமிழினம் அழியும் என்று மக்கள் மத்தியில் சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்ட ஒரு நிலையில் மக்கள் மாறுகின்றார்கள். எந்தவொரு தமிழனும் தென்னிலங்கையில் நடக்கும் விவாதங்களைக் கேட்டிருந்தால் கோத்தாபய வெல்லத்தான் போகின்றார் என்பது விளங்கி யிருக்கும். தமிழ் ஊடகங்கள் மட்டத்தில் இந்த விவாதம் எதுவும் வரவில்லை. மாறாக வந்தது எல்லாம், தமிழ் மக்களின் கைகளில்தான் எல்லாம் இருக்கின்றன என்ற செய்திகள்தான். முற்றுமுழுதாக தீர்மானிக்கும் சக்தி, நாங்கள் மாத்திரம்தான் என்றே சொல்லப்பட்டது.

சிங்களவர்கள் ஒன்று சேராதபோது மாத்திரமே தமிழர்கள் தீர்மானிக்கும் சக்தி. இங்கு சிங்களவர்கள் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். அந்த இடத்தில் நாங்கள் என்ன முடிவு எடுத்திருக்கலாம். தமிழ் மக்கள் அரசியலில் இருக்கும் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதை நெடுகிலும் ஏதோ ஒரு வகையில் காட்டிக் கொண்டிருக்கவேண்டும். அது மிக முக்கியம்.

நாங்கள் தேவையில்லாத தரப்பு என்றால் எவரும் திரும்பிப் பார்க்கப் போவ தில்லை. தேர்தலில் கோத்தாபய வெல்லப் போகின்றார் என்பது தெரிந்த பின்னர் நாங்கள் பேசாமல் இருந்திருக்கலாம். நாங்கள் புறக்கணித்திருந்தால், ஒரு பக்கம் சிங்கள இனவாதம் இவ்வளவு தூண்டப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருக்க மாட்டாது. கோத்தாபயவுக்கும், சஜித்துக்கும் இடையிலான இடைவெளி மிகவும் குறைந்திருக்கும். அப்படியான சூழலில், நாங்கள் வாக்களித்திருந்தால் முடிவு மாறியிருக்கும் என்பதைச் சொல்லியிருக்க முடியும். அதனூடாக நாங்கள் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதைத் தொடர்ந்தும் பேணியிருக்கலாம். இன்று நாங்கள் செல்லாக் காசு. இவ்வளவு காலமும் நாங்கள் வளர்த்த விம்பம் இன்று போட்டுடைக்கப்பட்டுள்ளது.

**கே:** தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எப்போது அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படப் போகின்றது?

**ப:** கட்சி பதிவு செய்யப்படுமா இல்லையா என்பது எங்களைப் பொறுத்தவரையில் ஒரு பிரச்சினையில்லை. கட்சிக்குள் அது பற்றிய விவாதம் இல்லை. இது அரசியல் இயக்கமாக இருக்க வேண்டும். அரசியல் கட்சியாக மாறக் கூடாது என்பதுதான் அநேகமான உறுப்பினர்களின் கருத்து. கட்சிக்குள் பதிவுக்கான தேவை ஏற்படும்போது அதனைச் செய்யலாம்.

**கே:** தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நீங்கள் தலைவர், கஜேந்திரன் செயலர். தலைமைப் பொறுப்புக்களில் மாற்றங்கள் ஏதாவது செய்யப்பட இருக்கின்றனவா?

**ப:** கட்சி அதனை எப்போது விரும்புகின்றதோ அப்போது அதனைச் செயற்படுத்தலாம்.

**கே:** உங்களின் தாய்க் கட்சியான அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் யாப்பு இன்னமும் ஒற்றையாட்சியை ஆதரிப்பதாக இருக்கின்றது என்று, புளொட் அமைப்பு குற்றம்சுமத்தியிருந்தது. தமிழ் மக்கள் பேரவையிலிருந்து புளொட் அமைப்பு வெளியேற்றப்பட வேண்டும் என்று நீங்கள் தெரிவித்த கருத்துக்கு பதிலளித்து அனுப்பிய கடிதத்தில் புளொட் அமைப்பு அதனைக் குறிப்பிட்டிருந்தது. இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?

**ப:** அது பொய்யான குற்றச்சாட்டு. கட்சியின் ஆரம்பகால யாப்பு 1982ஆம் ஆண்டு திருத்தப்பட்டது. அந்தத் திருத்தத்தின் ஊடாக சுயநிர்ணய உரிமையைத்தான் கட்சி கொள்கையாக வைத்திருக்கின்றது.

# முதலில் உருவானது இந்துக் கல்லூரியா சைவ பரிபாலன சபையா?



தில்லைநாதன் கோபிநாத்

வரலாறு என்பது எமக்குக் கிடைக்கின்ற தகவல்களைக் கொண்டு கட்டமைக்கப்படுகிறது. தகவல்கள் முழுமையாகக் கிடைக்காத சந்தர்ப்பங்களில், ஓரளவு உய்த்தறிந்து இட்டு நிரப்ப வேண்டி ஏற்படுவதுமுண்டு. கிடைக்கின்ற தகவல்களுக்கான ஆதாரங்கள் எவை என்பதும், தொகுக்கப்படும் தகவல்கள் எப்படி விளங்கிக் கொள்ளப்படுகின்றன என்பதும், வரலாற்றை எழுதுவோரின் நோக்கம் என்ன என்பதும் கவனிக்கப்பட வேண்டியவை.

ஆதாரங்களே இல்லாத கற்பனைகளை உண்மை வரலாறுகள் போலக் கட்டமைக்கின்ற சமூகவலைக் காலத்தில் நாம் வாழ்கிறோம் என்றாலும், அத்தகைய வரலாறுகள், முறையான ஆய்வுகளில் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆரம்பகால வரலாற்றைப் பொறுத்தவரையில், அதற்கான ஆதாரங்களைப் பெருமளவில் கொண்டிருப்பவை இந்து சாதனம் பத்திரிகைகள். இந்து சாதனம் பத்திரிகையானது, சைவ சமய நிறுவனமான சைவ பரிபாலன சபையின் வெளியீடாகும். அந்த வகையில் குறித்த சபையின் நிலைப்பாட்டையும் குறித்த சமயம் சார்ந்த தகவல்களையுமே அந்தப் பத்திரிகை வெளியிட்டு வந்திருப்பது இயல்பானதாகும். இதுவே இந்துக் கல்லூரி பற்றிப் பொதுவாக நம்பப்படும்

## வரலாற்றுப் படை 4

வரலாற்றுக்கு அடிப்படையாக உள்ளது.

1886 முதல் 1890 வரையான இந்துக் கல்லூரியின் வரலாறு தெளிவற்றதாகவே உள்ளமைக்கான காரணம், இடைப்பட்ட அக்காலச் சட்டத்தில் எழுதப்பட்ட வரலாறுகள் சைவ பரிபாலன சபை சார்ந்த வரலாறுகள் என்பதேயாகும். அந்த வகையில் இந்துக் கல்லூரி சைவத்தைக் காப்பதற்காக உருவான பாடசாலை என்பது முற்றிலும் சரியானதா என்பதை நாம் ஆராயவேண்டும்.

ஒரு சமூகம் சார்ந்து இந்துக் கல்லூரியின் வரலாற்றை விளங்கிக் கொள்வதற்கு இந்து சாதனத்தில் வெளி வந்த ஆனால் கவனிக்கப்படாத தகவல்களையும் இந்து சாதனத்தில் வெளிவராத தகவல்களையும் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது.

ஏற்கனவே நாம் பார்த்தபடி இந்துக் கல்லூரியின் நிறுவுனரும், முதலாவது அதிபருமான முத்துக் குமாரு சிதம்பரப்பிள்ளை ஒரு கிறித்தவர். அவர் வில்லியம் நெவின்ஸ் என்ற பெயரையும் கொண்டிருந்தார். அதனாலேயே சைவ வெளியீடுகளில் அவரது பெயர் அதிகம் குறிப்பிட்டிருக்கவில்லை. ஆயினும் வேறு சில இடங்களில் சிதம்பரப் பிள்ளை கௌரவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் விளையாட்டு இல்லங்கள் உருவாக்கப்பட்டபோது, நாகலிங்கம், பசுபதி, நெவின்ஸ், சபாபதி ஆகிய இல்லங்களே இருந்தன. இங்கே நெவின்ஸ் எனக் குறிப்பிடப்படுபவர் வில்லியம் நெவின்ஸ் என்ற ஆங்கிலப் பெயராலும் அறியப்பட்ட சிதம்பரப்பிள்ளையே. பின்னர் அந்த இல்லம் சிதம்பரப்பிள்ளையின் மகனான செல்லத்துரையின் பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டது. நெவின்ஸ் செல்லத்துரை என்ற பெயரில் நெவின்ஸ் என்பது அவரது அப்பாவின் பெயரேயொழிய நெவின்ஸ் எனச் செல்லத்துரை அழைக்கப்பட்டதில்லை. நெவின்சாசிரியர் என அறியப்பட்டவர் சிதம்பரப் பிள்ளையே. செல்லத்துரையின் மறைவுக்குப் பின்னரே நெவின்ஸ் இல்லம் செல்லத்துரை இல்லம் எனப் பெயர் மாற்றப்பட்டது. அந்த வகையில் இல்லங்களுக்குப் பெயர் மாற்றப்பட்ட காலங்களியேயே சிதம்பரப்பிள்ளையின் பெயரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வரலாற்றிலிருந்து நீக்கும் முயற்சிகள் தொடங்கி விட்டதாகவும் நாம் கருதலாம்.

1980கள் வரை சிதம்பரப்பிள்ளையின் பெயரைத் தாங்கி வெளிவந்த பாடசாலை ஆவணம், அதிபர் அறிக்கை ஆகும். பசுபதிச் செட்டியார் பரிசளிப்பு நிதியத்தின் ஊடாக வழங்கப்பட்ட பரிசுகளில் ஒன்று, சிதம்பரப்பிள்ளை நினைவுப் பரிசு ஆகும். பசுபதிச் செட்டியார் பாடசாலைக்கென எழுதி வைத்த சொத்துக்கள் கைதவறிப் போனதாலோ என்னவோ, குறித்த பரிசுநிதியம் இப்போது செயற்படுவதில்லை. சிதம்பரப்பிள்ளை பாடசாலையைத் தொடங்கியதற்கான காரணங்களைத் தெளிவாக விளக்கும் ஆவணங்கள் எவையும் இப்போது இல்லை. மிக நீண்டகாலம் மிசனரிப் பாடசாலையில் தலைமை அதிபராக இருந்த அவர், அதிலிருந்து விலகிப் புதிதாகப் பாடசாலையைத் தொடங்கியமை மிசனரிமாரின் செல்வாக்குக்குள் இல்லாத பாடசாலை ஒன்றினை அவர் உருவாக்க விரும்பியதாலேயே எனவும் ஊகிக்கலாம்.

சிதம்பரப்பிள்ளையை மிகவும் கோலாகலமாகக் கௌரவித்து இரண்டு நாட்கள் கொண்ட விழா 1888 ஐப்பசி மாதத்தில் நடந்தது. சைவர்களுக்கான பள்ளிக்கூடங்களை அமைப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு சைவ பரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்டது, 1888 சித்திரைஆடி காலப் பகுதியில். மேற்படி விழாவைத் தலைமை தாங்கி நடத்திய செல்லப்பாபிள்ளையே பின்னர் சைவ பரிபாலன சபையின் தலைவராகச் செயற்பட்டார்.




சிதம்பரப்பிள்ளையின் நகராக்கிரம விதாலயத்துக்குப் புரவலராக இருந்த நாகலிங்கம், சைவ பரிபாலன சபைத் தாபகர்களுள் பிரதானமான, ஒருவராக இந்து சாதன வச்சிர விழா மலரில் குறிப்பிடப்படுகிறார். செல்லப்பாபிள்ளை நாகலிங்கத்தின் மைத்துனரும் கூட. பெரும் எடுப்பில் பாடசாலை தொடங்குவதாகக் காட்டி சைவ பரிபாலன சபை தொடங்கப்பட்டமை ஏலவே சிதம்பரப்பிள்ளையின் பாடசாலையை மனதில் இருத்தியே என்பது புலனாகிறது. அந்த வகையில் சைவ பரிபாலன சபையால் தோற்றுவிக்கப்பட்டதல்ல யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை முன்கொண்டு செல்வதற்காகத் தொடங்கப்பட்ட நிறுவனமே சைவ பரிபாலன சபை என்பதனை நாம் விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. இந்துக் கல்லூரியின் உண்மையான முன்னோடியான சிதம்பரப்பிள்ளையின் 200ஆவது பிறந்த ஆண்டிலாவது அவருக்குரிய கௌரவத்தை அவரால் உருவாக்கப்பட்ட பாடசாலை வழங்குவது அவசியம்.



## நவீன ஆசை

தொலைபேசியை தொலைவாக
தொலைத்துவிட ஆசை
தொலைந்த இன்பங்களை
மீட்டிடவே ஆசை
மனித முகம்பார்த்து
பேசிடவே ஆசை
மரணித்த பாசங்களை
உயிர்ப்பித்திட ஆசை
உறவுகளின் அருகிருந்து
உணவருந்த ஆசை
உறக்கம் வந்தவுடன்
உறங்கிடவே ஆசை
அக்கம்பக்க மனிதர்களை
அறிந்துவிட ஆசை
இன்பதுன்பம் அனைத்திலுமே
கலந்துகொள்ள ஆசை
வரவேற்கும் பண்பாடு
பார்த்திடவே ஆசை
வருத்தாமலே மனங்களினை
வழியனுப்ப ஆசை
அத்தனைக்கும் தொலைபேசியை
தொலைத்துவிட ஆசை
தத்தளிக்கும் மனதினது
நவீன ஆசையிது.

- ரேகா.சிவலிங்கம்



நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- கட்டுரை
- கவிதை
- ஓவியம்
- பத்தி எழுத்து

எதுவானாலும் அனுப்பி வையுங்கள். தரமானவற்றை பிரசுரிக்க சஞ்சீவி காத்திருக்கிறது. உங்கள் படைப்புக்களை

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: uthayansanjeevi@gmail.com

# பெற்றோரை பேணுதல்



## உலகின் தலைசிறந்த அறம்

ம.பா.மகாலிங்கசிவம்

யாழ்ப்பாணத்தில் இன்று முதியோர் இல்லங்களின் எண்ணிக்கையும் அவற்றில் சேரும் முதியவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்வது புரிந்து கொள்ள முடியாததாக உள்ளது. தம்மைப் பெற்றெடுத்து பேணி வளர்த்து, ,கல்வி தந்து, பட்டம் பெற்றாலும் வேலை கிடைக்கும் வரை உணவு தந்து, திருமண மும் செய்து வைத்த பெற்றோரைப் பிள்ளைகள் மறந்து விடுகின்றனர்.

பெற்றோர் எதிர்பார்க்கின்ற மிகப்பெரிய பதிலுதவி அல்லது மகிழ்ச்சி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் சேர்ந்திருந்து அவர்களது முன்னேற்றங்களைக் கண்டு களிப்பதுதானே?. இத்தகைய பெற்றோரைத் தான் முதியோர் இல்லங்களிலே சேர்த்துத் தனிமைத் துயருக்குள்ளே தள்ளி விடுகின்றோம்.

முதியோர் இல்லத்துக்குச் செல்லாவிடினும், தனது வீட்டில் இருந்தபடியே பெற்றெடுத்த பிள்ளைகள் ஒன்பது பேராலும் கைவிடப்பட்டு, நோய்வாய்ப்பட்டு, போதிய கவனிப்பாரின்றி, மரணத்தைத் தழுவிய முதியவரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஈழத்துக் கவிஞர் நீலாவணனின் "உறவு" கவிதை இன்றைய தேன் கூட்டை அலங்கரிக்கின்றது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த துறைநீலாவணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கே.சின்னத்துரை. அவர் தனது ஊரின்பெயரை அடியாகக் கொண்டு "நீலாவாணன்" என்ற புனைப்பெயருடன், ஈழத்துக் கவிதைத்துறையுள்ளே தடம் பதித்தார். வழி, ஒத்திகை ஆகிய கவிதைத் தொகுப்புக்களுடன் நீலாவணன் காவியங்கள் , நீலாவணன் படிநாடகல் வேளாண்மை (காவியம்), ஒட்டுறவு(கதைத்தொகுதி) என்பவை இதுவரை வெளிவந்துள்ளன.

**அவரது உறவு எனும் கவிதையில்**

மரணித்துப்போன எங்கள்
மானாகப் போடிப்
பெரியப்பா..
நீர் ஓர் பெரிய மனிதர்தான்!

பெட்டி இழைத்தும்
பிரம்பு பின்னல் வேலை செய்தும்
வட்டிக் குளத்து வரால் மீன் பிடிக்கக்
கரப்புகளும் கட்டி விற்றுக்
காலத்தை ஓட்டும் ஒரு கிழவன்
என்றே நம்மூர் அறியும்
நேற்றுவரை.

பத்துநாள் தொட்டுப்
பகலிரவாய்ப் பாய்மீதில்
வைத்தியமே இன்றி
வயிற்றா லடியோடும்
சத்தி எடுத்தும் வாய்
சன்னீ பிசத்தியும்
செத்தும் பிழைத்தும் கிடந்தீர்
சுவரோரம்.

'எட்டு நாளாக இரணம் ஏதும்
குடலுக்குட் செல்லவில்லை'
என உருகி உம்மனைவி வள்ளி
புளுங்கல் அரிசியவித்த வெந்நீரை
அள்ளி உமக்கு பருக்குகையில்
நீர்அவளை
ஐம்பது ஆண்டாய்
அனுபவித்துக் கொண்டதற்கும்
ஒன்பது பிள்ளைகளை உற்பவித்து
பெற்றதற்கும்
ஈற்றில் உமக்காய்
ஊற்றை அளைந்ததற்கும்
உம்குறைகள் கேட்டதற்கும் ஈடாக
ஓர் வார்த்தை யேனும் இயம்பாமல்
போய் விட்டீராமே
புலம்புகிறாள் வள்ளியம்மை.

நாய்படாப் பாடுமது
நோயிலவள் பட்டதுண்மை
என்றாலும் ஓர் வகையில்
ஆனந்தம் வள்ளிக்கு
என்ன வென்றால்
தன்புருசன் மானாகப் போடிக்கும்
எத்தனைபேர் சொந்தம் ! அதோ
எக்கவுண்டன் எஞ்சினியர்
வைத்திய கலாநிதிகள்
வர்த்தகர், பேராசிரியர்
சத்தா சமுத்திரந்தான்
சாதிசனம் என்பதனால்.

தந்தி கிடைத்து
மிகநொந்து பட்டு வந்தார்கள்
அந்தி வரைக்கும் ஏதும்
ஆகாரம் தின்னாமல்
குந்தியிருந்து
குளறி அழுதார்கள்
ஐந்தாறு காரில்
இரவே ஊர்போய் விட்டார்.

எத்தனைபேர் சுற்ற மிந்த
ஏழைக் கிழவனுக்கு
இத்தனை நாள் மட்டுமிது
யாருக்கும் தெரியாது
உண்மையினைக் கண்டெங்கள்
ஊர்விரலை மூக்கில்வைக்கும்
வண்ணம் மறைவாக வாழ்ந்தீர்
இறவாமல்.

இன்னும் உயிரோடே இருந்தீரே யாமாகில்
என்ன வகையாய் அறிவோம் உறவினரை
செத்தாலும் செத்தீர் நும்
செல்வக் குடும்பத்தைப்
பத்தியமாய்ப் பார்த்திந்தப்
பாரில் வழங்கி வரும்
உண்மை உறவறியும் ஊர்.

மரணித்துப்போன மானாகப் போடிப் பெரியப்பா" வை விளித்துக் கூறப்பட்டுள்ளது.

*"ஒரே ஒரு ராசாவுக்கு ஒன்பது பிள்ளை அந்த ஒன்பதில் ஒன்றுகூட உருப்படி இல்லை"*


என்று சின்ன வயதிற் படித்த ஞாபகம். அதனை மெய்ப்பிப்பதுபோலப் போடியாருக்கும் ஒன்பது பிள்ளைகள். ஆனால், ஒருவர் கூட முதுமைக் காலத்தில் அவருக்கு உதவவில்லை. இதனால் சமூகத்தில் உயர்ந்த போடியார் வகுப்பைச் சேர்ந்த அவர் வறுமை காரணமாக பெட்டி இழைத்தல், பிரம்பு பின்னல் வேலைசெய்தும், மீன்பிடிக்கக் கரப்புகளும் கட்டி விற்றுக் காலத்தைக் கழிக்கின்றார். நோய் வாய்ப்பட்ட நிலையில் சத்தி எடுத்தும், வாய் சன்னி பிசத்தியும், வயிற்றாலடியோடும் ஒதுக்குப்புறமாய் சுவரோரம் கிடக்கின்றார். இறுதியில் இறந்தே விடுகிறார்.

நீலாவணன் "உறவு" என்ற இந்தக் கவிதைமூலம் போலித்தனமான இருவகையான உறவுகளை சித்தரிக்கின்றார். ஒன்று அவரது மனைவி, கணவனுக்குக் கிடைத்த ஒரே ஆறுதலாக இருந்து பணிவிடை செய்கிறாள். ஆனால் கணவன் இறந்தது அவளுக்கு ஒரு வகையில் ஆனந்தமாக அமைகின்றது. அதாவது அவரது மரணக் கிரியைகளிற் கலந்து கொண்ட அவளுக்கு இனிமேல் ஊருக்குள் புதிய மரியாதை கிடைக் கப்போகின்றது.

இரண்டாவது, மரணவீட்டில் கலந்து கொண்ட உறவினர்கள் மானாகப்போடிக்கு அக்கவுண்டன், எஞ்சினியர், வர்த்தகர், பேராசிரியர்கள், வைத்திய கலாநிதி போன்றோர் உறவினர்களாக இருந்திருக்கின்றனர்.

ஆனால் அவரது வறுமையைத் தீர்க்க எவருமே உதவவில்லை. இவ்வாறு உயிருடன் இருக்கும்போது உதவாமல், மரணச்சேதிக்காக காத்திருப்பதுபோல காத்திருந்து ஓடிவந்து குந்தி இருந்து குழறி அழுதுவிட்டு ஐந்தாறு காரில் இரவே ஊர் போய்விடும் போலித்தனமான உறவுகளை நீலாவணன் வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றார்.

இதற்கும்மேலாக, இருக்கும்போது கவனிக்காமல் இறந்தவுடன் வெளிநாட்டிலிருந்தும், வேறிடங்களிலிருந்தும் ஓடிவந்து பாண்ட் வாத்திய அணிவகுப்பு, விலை உயர்ந்த பாடை, வீதியெங்கும் வெடியோசை, மயானத்திலும் பணத்தை திண்ணியாய்ச் செலவளித்தல் என்பவற்றின் மூலம் தமது செல்வச் செழிப்பைப் பறைசாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.எனவே, முதியவர்கள் வாழும்போதே அவர்களைக் கவனிப்போம். எந்தக் கடுமையான சூழ்நிலையிலும் அவர்களை எங்களுடனேயே வைத்திருந்து பாதுகாப்போம். எமது பெற்றோரை முதியோர் இல்லத்தில் விடும்போது அப்படியான ஓர் இடம் இருப்பதை எமது பிள்ளைகளும் கவனித்துக் கொள்கிறார்கள் என்பதையும் மனதில் கொள்வோம்.



# காலை...

சூரியன் முகங்கழுவும்
முன்வாசல்.

கிழக்கை வெளுத்து
பகல் கொடியில்
காயப்போட்டிருக்கிறது
விடியல்

சூரியனைக்கண்ட அதிர்ச்சியில்
நிலவு வெளிறிப் போயிற்றே
அப்படியென்ன குற்றம் புரிந்ததாம்
இரவில்?

விண்வெளியில் கொட்டிக்கிடந்த
சில்லறையைக் காணோமே...!
விடிவதற்குள் செலவழித்து
விரயமாக்கவேண்டுமென்ற
விரதமேதேனும் இருந்திருக்குமோ?

அட!
பந்துக்கெல்லாமா
செந்நிறம் பூசுவார்கள்?

என்ன ஆயுதம் செய்வதற்காக
உலையில் காய்ச்சி எடுக்கிறார்கள்
அந்த
இரும்புக் கோளத்தை?
நீருக்குள் தோய்த்து
வெளியே எடுக்க
இன்னுமின்னும் தகதகக்கிறதே!
என்ன முரண் இது?

இரவின் சில்மிஷங்கள்
நினைவுக்கு வந்தனவோ..!
வைகறையின் கன்னத்தில்
இவ்வளவு நாணங்கள்...?

பறவைகள் இரைதேட
மீனவர் கரைதேட இருள்
அறைதேடுகிறது
ஒளிந்துகொள்ள.

வட்டிக்குக் கொடுத்தவன்
ஏதோ திட்டமிட
கடன்வாங்கியவன் தலையில்
மேலுமொரு இடி.
"ஐயோ! விடிந்துவிட்டதே!"

Breakfast என்பது
விரதம் முடிப்பதுதானே!
ஆயின்
காலையும் ஒரு பாறணையே.


பூக்களின் புன்னகைகாண
ஈக்களும் வண்டுகளும்
ஓடோடி வருகின்றனவே!
என்னடா இது?
காலையிலேயே
காதலா!

காலைப்பூஜைக்கு ஒலித்த
கண்டாமணிக்கருகில்
காதைப் பொத்தியபடியே புறாக்கள்;

சுகிப்பது மட்டுமல்ல
சகிப்பதும்தானே வாழ்க்கை

- வடிவழகையன்

# வித்துவான் பதில்கள்



வித்துக்குட்டி, பெண்ணுக்குள் எந்த ஆணும் அடங்கி விடுவான் என்று சொல்கிறார்கள். அது உண்மையா?

**பா.செந்தூரன், நாயன்மார்கட்டு**

**நீங்கள் ஏதோ கிராமப்புறப் பழமொழி ஒன்றை நினைத்துக்கொண்டுதான் இந்த வினாவைக் கேட்கிறீர்கள் போலிருக்கிறது.**
**அது உண்மை போலவும் இருக்கிறது.**
"Women" **இனுள்** "Men" **அடக்கம்.**
"She" **இனுள்** "He" **அடக்கம் .**
"Female" **இனுள்** "Male" **அடக்கம்.**
"Lady" **இனுள்** "Lad" **அடக்கம்.**
"Mrs" **இனுள்** "Mr" **அடக்கம்.**
**மொத்தத்தில் அடக்கம் செய்து விடுவார்கள் . மன்னிக்கவும், அடங்கச் செய்து விடுவார்கள் போலத்தான் இருக்கிறது.**



டியர் வித்தூஸ், பிரதமரின் கீழ் எண்பதுக்கு மேற்பட்ட திணைக்களங்கள் ஒதுக்கப்பட்டுள்ளனவே?

**யோ.கோகுலன், நீர்வேலி.**

**ஒதுக்கப்பட்டுள்ளன, "ஒதுக்கப்படும்"**

வித்துவானே, புலம்பெயர் தமிழர்களின் "தமிழ்ப்பற்று" எவ்வாறு உள்ளது?

**ந.குகதீபன், நவிண்டில்.**

**மிக நன்றாக உள்ளது. கலை இலக்கியக் கூட்டங்கள் புலம்பெயர் தேசமெல்லாம் நடைபெறுகின்றன. நூல்கள் வெளியிடப்படுகின்றன. பிள்ளைகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ்க் கலைகளைக் கற்பிக்கின்றனர். ஆனால் சில பிள்ளைகளின் தமிழறிவு , தமிழ்ப்பேச்சு என்பவைதான் பிரச்சினையாக உள்ளன. இங்கிருந்து அம்மப்பா புலம்பெயர்தேசத்திற்கு சரஸ்வதி படம் ஒன்றை அனுப்பினார். அதைப் பார்த்த பேரன் தாயிடம்** "Mammy who is the aunty sitting with a guitar on a flower?" **என்று கேட்டதாக ஒரு கதை. இங்கு வந்த புலம்பெயர் சிறுவனிடம் ஒருவர் வாழைப்பழத்தைக் கொடுத்தார். அதை எப்படி உண்பதென்று தெரியாத சிறுவன் "அம்மப்பா வாழைப்பழத்தைக் கழட்டித் தாங்கோ" என்று கேட்டதாக இன்னொரு கதை.**

## தேடுதலுக்கும், தடவுதலுக்கும் வித்தியாசம் என்ன?

வித்தப்பா, எழுத்துப் பிழை இல்லாமல் எழுதுவது எப்படி?

**பா.பிரணவன், உடுப்பிட்டி.**

**உங்கள் கேள்வியிலும் எழுத்துபிழை. திருத்தித்தான் வெளியிடுகிறோம். எந்தெந்தச் சொற்களில் எழுத்துப்பிழை விடுகிறீர்கள் என்பதை ஆசிரியர் மூலம் அறிந்து கொண்டு திருத்துங்கள். எழுத்துப் பிழையற்ற நூல்களைக் கருத்தூன்றி வாசியுங்கள். எதில் எழுத்துப்பிழை விட்டாலும் பிரச்சினையில்லை. காதலிக்கு எழுதும் கடிதத்தையாவது கவனமாக எழுதுங்கள். "அன்புள்ள கதலிக்கு, உன் அழுகிய முகத்தைப் பார்க்க அவலுடன் இருக்கிறேன். கேயிலுக்கு வந்தால் காச்சான் வங்கித் தருகிறேன்" என்பது எனது நண்பன் தனது காதலிக்கு எழுதிய காதற் கடிதம்.**

எமது நாட்டுத் திருமண முறைக்கும், தமிழ் நாட்டுத் திருமண முறைக்கும் இடையில் என்ன வேற்றுமை இருக்கிறது வித்தூ?

**க.பானுரேகா, இளவாலை.**

**முக்கியமான வேறுபாடு முதலிரவில்தான். இங்கு 99.9வீதமான திருமணம் நடந்த அன்றே முதலிரவு நடக்கும். அங்கே நாள் பார்த்து எப்போது இணைந்தால் ஆண்பிள்ளை பிறக்குமோ அப்போதுதான் நடக்கும். சுவையான சாப்பாட்டைச் செய்து, சாப்பிட விடாமல் கையைக் கட்டி விட்டால் எப்படி இருக்கும் ? கலண்டரைப் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டியது தான்.**

வித்து மாமா, தேடுதல்,தடவுதல் இரண்டு சொற்களுக்கும் இடையில் என்ன வித்தியாசம் உள்ளது?

**பு.கலையரசி, அராலி கிழக்கு.**

**ஒரு பொருளைக் காணவில்லையென்று வெளிச்சத்தில் ஆராய்வது தேடுதல். அதே பொருளைக் காணவில்லையென்று இருட்டுக்குள் ஆர்ராய்வது தடவுதல். "உங்க இருட்டுக்க என்ன தடவிக் கொண்டிருக்கிறாய்?" என்று அம்மா பேசுவதில்லையா? பெரும்பாலான தடவல்கள் இருட்டுக்குள் தான் நடக்கின்றன....**

ஹாய் வித்துவான்,எனக்குக் கணினித்துறையில் அறிவு பூச்சியமாக உள்ளது. இது எனக்குத் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துகிறது. மற்றவர்கள் "ஹாட்வெயார், "சொப்ட்வெயார்" என்று கதைக்கும் போதெல்லாம் கூனிக்குறுகி நிற்கின்றேன். என்ன செய்யலாம்?

**ம.சிவாகரன், உடுவில்.**

**கணினி அறிவைப் பெற்றுக் கொள்ள நீங்கள் முயல வேண்டும் . இதற்காகப் பல்வேறு கணினித்துறை சார் கல்வி நிறுவனங்கள் உள்ளனவே. இப்போதைக்கு "அண்டவெயார்" பற்றித் தெரிந்திருந்தாலே போதுமானது என்று திருப்தி கொள்ளுங்கள்.**



# நல்ல 'புறோக்கிறாம்'



கன நாளைக்குப்பிறகு போன ஞாயிற்றுக்கிழமை பின்னேரப் பொழுது என்ரை தங்கச்சியின்ரை வீட்டுக்குப் போகக் கிடைச்சுது. நான் போன நேரம், தங்கச்சி தன்ரை நாலு பிள்ளையளோடும் ஹோலில இருந்து ரி.வி பார்த்துக்கொண்டிருந்தா.

"இதிலை இரு அண்ணை. ரி,வியிலை நல்ல 'புறோக்கிறாம்' ஒண்டு போய்க்கொண்டு இருக்குது. பார்த்திட்டுக் கதைப்பம்" என்று கதிரை ஒண்டைக் காட்டினா . பிள்ளைகள் நாலும் ஓ.எல், ஏ.எல், எட்டாம், ஏழாம் வகுப்பில படிக்கிதுகள் .தமிழ் நாட்டு சினிமாவிலை கொடிகட்டிப் பறக்கிற ஒரு நடிகை ரி,வியிலை பேட்டி கொடுக்கிறா. பேட்டி காண்பவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு அந்த நடிகை பெருமையோடு பதில் சொல்லிக்கொண்டிருக்கிறா.

" நான் நடிச்சு வெளி வந்திருக்கிற இந்த பிலிம் (படம்) இவ்வளவு தூரம் பொப்பியூலர் (பிரபல்யம்) ஆகுமெண்டு நான் கனவுகூடக் கண்டதில்லை. இதுக்குக் காரணம் என்னை சினிமாவிலை இன்ரடியூஸ் (அறிமுகம்) செய்து வைச்ச இந்தப் படத்தின்ரை இயக்குநர் ரவி சேர்தான். பெர்ஸ்ட்டு பெர்ஸ்ட்டு (முதன் முதலாக) ரவி சேர்தான் என்னை சினிமா வேர்ல்ட்டுக்கே (உலகம்) இன்ரடியூஸ் (அறிமுகம்) செய்து வைச்சவர். என்னோட ஹோல் லைப்பில (வாழ்நாள்) நான் அவருக்கு நன்றி சொல்லணும்" எண்டு விளாசியதைத் தாயும் பிள்ளையளும் திறந்தவாய் மூடாமல் ரசித்துக்கொண்டிருந்த கண்றாவியை நானும் பார்த்துத் தொலைக்க வேண்டியிருந்தது.

இண்டைய மாணவ சமுதாயத்தின்ர எதிர்காலத்தை இந்த நிலைமை எங்கே கொண்டு போய் விடப்போகிறதோ எண்டு என்ரை மனசு ஒருபுறம் மறுகிக்கொண்டிருந்தாலும், மறுபுறம் இன்னொரு விசயம் மனசில பொறி தட்டிச்சு. அந்தப் பிரபல நடிகையை முதன்முதலாக சினிமாவில அறிமுகப்படுத்திய இயக்குநர் யார் என்றொரு கேள்வி கேட்கப்படுமானால், நிச்சயமாக என்ர தங்கச்சியின்ரை பிள்ளைகள் எந்தத் தயக்கமும் இல்லாமல் டக்கென்று பதில் சொல்லுவினம். இதுவும் ஆறுதலான ஒரு விசயம்தானே?

'தோடுடைய செவியன்' எண்டு தொடங்குகிற தேவாரத்தைப் பாடியது யார்? என்ற கேள்விக்கு சம்பந்தரா? திருநாவுக்கரசரா? எண்டு தீர்மானிக்க இயலாமல் நான் தடுமாறி, சமய பாட வாத்தியாரிடம் பிரம்படி வாங்கின ஞாபகம், அந்த நாள் ஞாபகம் ஒரு நொடி மூளையில் துளிர்த்தது.

புதிர் 1




மாயன்

முல்லைபுரி நாடு பெரும் சோகத்தில் மூழ்கியிருந்தது. மன்னர் பல்லவராயர் மரணப்படுக்கையில் இருந்தார். ஒரு சில நாட்களே அவர் உயிரோடு இருக்கமுடியும் என்று அரண்மனை வைத்தியரும் கைவிரித்து விட்டார். மக்களின் ஒட்டுமொத்த அபிமானத்தையும் வென்ற தலைவர், உலகை விட்டுப் போய்விட்டால் யார் அடுத்த அரசர் என்ற கேள்வியும் முல்லைபுரி மக்கள் மத்தியில் பரவலாக எழுந்தது.

மன்னர் பல்லவராயருக்கு துவாரகையன், இளஞ்சந்திரன், பரிவழுதி என்று மூன்று புதல்வர்கள். மூவருமே வீரத்திலும், அறிவிலும், அழகிலும் ஒருவருக்கொருவர் சளைக்காதவர்கள். அதனால் பட்டத்துக்குரிய இளவரசன் யாரை நியமிப்பது என்று கடைசிவரை மன்னரால் தீர்மானிக்க முடியவில்லை. இனியும் அப்படி இருக்க இயலாதே? தன் ஆயுள் முடிவதற்குள் மூன்று இளவரசர்களில் ஒருவருக்கு முடிசூட்டாவிட்டால், பின்னர் அது பெரும் பிரச்சினையாகிவிடும். மூன்று பேரும் பட்டத்துக்காக தங்களுக்குள்



மோதிக் கொள்ளவும் கூடும். பல்லவராயர், மந்திரி முத்துஐயனை அழைத்தார். நீண்டநேர ஆலோசனையின் பின்னர் மன்னரும், மந்திரியும் ஒரு முடிவெ டுத்தார்கள்.

இளவரசர்கள் மூவரையும் வரச் சொல்லி அழைப்புப் பறந்தது. அடுத்த சில நாழிகைகளில், மூவரும் மன்னர் முன்னிலையில் மண்டியிட்டு வணங்கினார்கள்.

"செல்வங்களே! என் கதை முடியப்போகிறது. ஆனால் இன்னமும் உங்களில் பட்டத்துக்குரியவர் யார் என்று என்னால் தீர்மானிக்க முடியவில்லை. அதனால் இப்போது ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்" என்று சொல்லி, மூவரிடம் தனித்தனியாக ஒவ்வொரு ஒரு ஓலைச் சுவடியைக் கொடுத்தார்.

"இது சாதாரண ஓலையல்ல. இந்த ஓலைக்குள் ஒரு பெரும் இரகசியமே புதைந்துபோய் இருக்கிறது. அந்த இரகசியத்தைக் கண்டுபிடிப்பவர்களுக்கே இந்த முல்லைபுரியின் அடுத்த மன்னராகும் தகுதி உண்டு" என்று கூறிவிட்டு லேசாகப் புன்னகைத்தார். இளவரசர்கள் எதுவும் புரியாதவர்களாக மன்னரை நோக்கினர்.

"அந்த ரகசியத்தைக் கண்டுபிடிக்க நீண்ட தூரம் பயணிக்க வேண்டும். இப்போதுமுதல், உங்களுக்கான சோதனை தொடங்குகிறது. பயணத்துக்காக உங்களுக்கு தங்கக்காசுகளையும், தங்கக் குடங்களையும் வைத்திருக்கிறேன். அதைப் பகிர்ந்து கொண்டு செல்லுங்கள்" என்றார். மந்திரி முத்துஐயன், முப்பது தங்கக்குடங்களை அங்கே கொண்டுவரச் சொன்னார்.

"இளவரசர்களே! இவற்றில் முதல் பத்து குடங்களில் தங்கக் காசுகள் முழுமையாகவும், அடுத்த பத்து குடங்களில் அரைவாசியாகவும் உள்ளன. எஞ்சிய பத்து குடங்களும் வெறுமையானவை. நீங்கள் இந்தக் காசுகளையும், குடங்களையும் தான் சமமாகப் பகிர வேண்டும். ஆனால், ஒரு குடத்திலிருந்து இன்னொரு குடத்துக்கு தங்கக் காசுகளை மாற்ற முடியாது" என்று ஒரு நிபந்தனை போட்டார் மந்திரி.

'ப்பூ, இவ்வளவுதானா?" என்று மூன்று இளவரசர்களும், அந்தத் தங்கக் காசுகளையும், குடங்களையும் தமக்கிடையே பகிர்ந்து கொள்ள முற்பட்டனர். ஆனால் முடியாமல் திணறினர். மன்னர் சிரித்தார்.

"இந்தச் சோதனையிலேயே இப்படித் தடுமாறுகிறீர்களே, எப்படி ஓலையிலுள்ள இரகசியத்தை கண்டுபிடித்து உங்கள் திறமையை நிரூபிக்கப் போகிறீர்கள்? அதுவும் அந்தப் பொல்லாத புதிர் மலை அரக்கர்களைச் சமாளிக்க புஜ பலம் மட்டும் போதாது, புத்திக்கூர்மையும் வேண்டும்" என்று சொல்லிவிட்டு, அந்தத் தங்கக் குடங்களையும், தங்கக் காசு களையும் தாமே பிரிக்கத் தொடங்கினார்.

" என்ன புதிர்மலையா?" எனக் கிலி படர்ந்த குரலில் ஏக காலத்தில் கேட்டார்கள் இளவரசர்கள். அவர்கள் குரலில் நடுக்கம் குடிகொண்டிருந்தது.




(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

மானெக்வயலில்வேலைசெய்வதும், வீட்டில் கொடுக்கும் உணவை எதுவும் பேசாமல் உண்பதுமாக நடைப்பிணமாக நாட்களைக் கழிக்கத் தொடங்கினான்.

"நான்இவருக்கு மனைவியில்லையா? இவருக்கு நான் யாரோ ஒருத்தி" மானெக்கின் இரண்டாம் மனைவி புலம்பத் தொடங்கினாள். ஆனால் சில நாட்களில் அவள் கர்ப்பமானாள். மானெக்கின்தாய் சந்தோசப்பட்டுக் கொண்டாள். மகனுக்கு வாரிசு கிடைத்துவிட்டது. மானெக்கின்தாய்மருமகளிடம்"குழந்தை பிறந்ததும், அவன் பழைய நிலைக்கு வந்து விடுவான். கவலைப்படாதே"
என்று சொல்லி வைத்தாள்.


"குழந்தை பிறக்கட்டும், அவன் மடியில் கிடத்துவோம், அப்போது பார் அவன் மகிழ்ச்சியை" என்றும் சொன்னாள்.

குழந்தை சுகப்பிரசவம். மானெக்கின் தாய் மிகவும் மகிழ்ந்தாள். பேரனுக்கு குளிப்பாட்டினாள், புதியசட்டைகளை அணிவித்தாள். பின்னர் குழந்தையை, மானெக்கின் மடியில் கொண்டு போய்க் கிடத்தினாள். மானெக் குழந்தையை உற்றுப் பார்த்தபடி இருந்தான். மிகநீண்டநேரம்உற்றுப்பார்த்தான். திடீரென அவனது வெளிறிய கண் பயங்கரமாக மாறியது. அவன்வீறிட்டுக் கத்தத்தொடங்கினான். "இவனைத்தூக்குங்கள்"

மானெக் தன் நரம்புகள் புடைக்க வீறிட்டுக் கத்தினான்,

"இவனைத்தூக்குங்கள், இவனில்மண்எண்ணெய் மணக்கிறது"

# சொற்சிலம்பம் 3



அனுப்புபவர் பெயர்:......................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

...........................................................

கையொப்பம்:................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. யுத்தம் 3 கடினம் 5. பிரி 6. ஓர் இடத்தில் நிலைத்தல் 7. உடல் வலிமையோடு இருப்பவன் (பருத்து) 9.தடயம் 10. நிறுவனமொன்றின் கொள்கை ரீதியான அடிப்படை விதிமுறைகள் அடங்கிய ஆவணம். 11. மக்கள் கூட்டம் 13. கஸ்பியன் கடலுக்கு அருகிலுள்ள கடல் போன்ற ஏரி. 14. நெருப்பு 15. தமக்குரியது என்பதை உணர்த்துவது 16. நிதியுடன் தொடர்புடைய ஒரு நிறுவனம் 17. சிறு மணிகளைக் கொண்ட தானியம் 18. உண்.

## மேலிருந்து கீழ்

1. சூளுரை 2. ஓர் ஊது கருவி 3. நகைத்தல் 4. பொருளின் பெறுமானம் 6. பிறவினை ஒருமையில் உடைமைப் பொருளை உணர்த்துவது. 8. சாளரம் 9. ஓர் சுடுகலன் 11. பூக்களை இடைவெளியிட்டுத் தொடுத்த மாலை 12. ஓர் வசைச் சொல் 13. குற்றம் 14. அவ்விடம் எனப் பொருள்படும் ஓர் இடைச்சொல் 16. வருவதற்கு.

## சொற்சிலம்பம் போட்டி 01 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பாதசாரி, 5. ஸ்ரீமதி , 8. தயாரிக்க, 9. கசை, 10. யார், 11. தூவு, 13. காய், 15. திகட்டு, 16. மையம், 21. குர்ஆன், 23. கொண்டிரு

**மேலிருந்து கீழ்**

1. பாதயாத்திரை, 2. தயார், 3. சாரி (சேலை) 4. ரிக்ஷா/ரிக்சா, 6. மகவு, 7. திசை, 11. தூய்மை, 12. திட்டு, 14. சதிர் 17. யமன், 18. நார், 19. மன்னி, 20. சாண், 21. குரு, 22. ஆனி, ஆடி

**சொற்சிலம்பம் போட்டி இல.03**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு

21.02.2020 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன் களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பணப்பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயன் சஞ்சீவியில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 01 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 01 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
கே. ராஜகோபால்
அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

**2 ஆம் பரிசு**
ப. சுதர்மினி
பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை.

**3 ஆம் பரிசு**
ந. யநோஜி
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, சாவகச்சேரி.

**4 ஆம் பரிசு**
த. சிவநேசம்
அளவெட்டி கிழக்கு அளவெட்டி.

**5 ஆம் பரிசு**
நா. மோகனேஸ்வரன்
8/1, தாளையடி ஒழுங்கை திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.




# பலி வாங்கும் தேசியகீதம்

○ எஸ்.ராஜ்குமார்



சமரகூன்



ரவீந்திரநாத் தாகூர்

72 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் தமிழில் தேசியகீதம் பாடப்படவில்லை. இந்த விடயம் பல தரப்புக்களிலிருந்தும் எதிர்ப்புக் களைக் கிளப்பியிருக்கிறது.

அதேசமயம் விமல் வீரவன்ச, ஜனக பண்டார தென்னக்கோன், மஹிந்த சமரசிங்க ஆகியோர் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் பாடப்படும் என்று அறிவித்திருந்தனர்.

"தமிழில் பாடினால் இலங்கையிலே இரு இனங் கள் இருப்பது போலி ருக் கும், தமிழீழம் கிடைக்க வழி ஏற்பட்டுவிடும்" என் றெல்லாம் மகாமொக்கை யான காரணங்களைச் சொல்லிச் சாக்குப் போக் குத் தேடினர். இன்னொரு புறத்தில், கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற 72 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளில் தமிழில் தேசிய கீதம் பாடப்படாததைக் கண்டித்து கொழும்பில் எதிர்ப்பு நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. "இலங்கை மனித உரிமைகள் செயற் பாட்டாளர்கள்" என்ற அமைப்பு , சுதந்திர சதுக்கத்துக்கு அண்மையாக உள்ள பொரளை சுற்றுவட்டப் பகுதி யில் ஏற்பாடு செய்த எதிர்ப்பு நடவ டிக்கையில் ஏராளமான சிங்கள தமிழ் இளைஞர் யுவதிகள் கறுப்பு ஆடை களுடன் தமிழ்,சிங்கள மொழிகளில் தேசியகீதத்தை இசைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இலங்கையின் தேசிய கீதம் என்பது ஆரம்பம் முதலே சர்ச்சைக் குரிய ஒன்றாகவே இருந்து வந்திருக் கிறது. அதிலும் பல உயிர்ப்பலிகளை எடுத்த ஒரு தேசிய கீதம் என்பது உங்களில் பலருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை.

இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியது யார்? என்று கேட்டால் ஆனந்த சமரக்கோன் என்று ஐந்தாம் வகுப்புப் பிள்ளை கூடச் சொல்லிவிடும் தான். ஆயினும் அதற்குப் பின்னே திரு விளையாடல் திரைப்படத்தில் வரும் "தருமி" போல, எவரோ ஒருவர் எழு திக் கொடுத்த பாட்டை இன்னொ ருவர் கொண்டுவந்து பாடிப் பரிசில் பெற்ற கதைதான் ஒளிந்திருக்கிறது.

இலங்கையின் தேசிய கீதம் என்பது இலங்கைக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பே இயற்றப்பட்டு விட்டது. ஆனால் அப்போது அது தேசபக்திப் பாடலாக மட்டுமே பாடப்பட்டு வந்தது. பின்னர் அது தேசிய கீதமாக மாற்றப்படும் என்று அப்போது எவ ரும் நினைத்திருக்கவில்லை.

இந்தியாவினதும், பங்களா தேஷினதும் தேசிய கீதங்களை இயற் றிய ரவிந்திரநாத் தாகூரிடம், இலங் கையைச் சேர்ந்த கிறிஸ்தவரான எக்கொடகே ஜோர்ஜ் வில்விரட் சமரகோன் என்பவர் மாணவராக இருந்தார். அவரேபின்னர் பௌத்தத் துக்கு மதம் மாறி 'ஆனந்த சமரக்கோன்' ஆனார். அவர் 1939 இல் இலங்கை திரும்பினார். இங்கே கல்லூரி ஒன்றில் கடமையாற்றிய அவர் "ரவிந்திரநாத் தாகூரின் மாணவர்" என்ற சிறப்பை அறிந்த கல்லூரி அதிபர் சமரக்கோ னிடம் இலங்கையின் பெருமைக ளைச் வெளிப்படுத்தும் ஒரு தேச பக்தி கீதம் எழுதித்தரக் கேட்டார். சமரக்கோன் இந்த விடயத்தை தனது ஆசானான தாகூரிடம் தெரிவிக்க,

## இலங்கைத் தேசிய கீதத்தை இயற்றியவர் ரவீந்திரநாத் தாகூரே!!

தாகூர்வங்கமொழியிலே ஒரு பாடலை இயற்றி சமரக்கோனிடம் கொடுத் தார். அந்த வங்கமொழிப் பாடலை சிங்கள மொழியிலே மொழி பெ யர்த்த சமரக்கோன் அதனை கல்லூரி அதிபரிடம் கொடுத்தார். அதிபரும் அந்தப் பாடலை சமரக்கோன் மூலம் இசையமைத்து பொது நிகழ்வுகளில் பாட வைத்தார்.

இதன் பின்னர் 1948 ஆம் ஆண்டில் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த வுடன் இலங்கைக்கான தேசிய கீதம், தேசியக்கொடி என்ப னவற்றை அமைக்கும் பணி நடைபெற் றது. தேசிய கீதத்தை உருவாக்குவ தற்கு அப்போது புழக்கத்தில் இருந்த பல தேசபக்திப் பாடல்கள் பரீசீலிக் கப்பட்டன. இதற்கென ஒரு நடுவர் குழு அமைக்கப்பட்டது. இதில் சம ரக்கோனின் நமோ நமோ மாதா, பி.வி. இலங்கசிங்க, லயனல் எதிரிசிங்க ஆகியோரால் எழுதப்பட்ட "ஸ்ரீலங்கா மாதா" போன்ற பாடல்கள் பரிசீல னைக்கு வந்தன. இதில் பி.பி இலங்க சிங்க, லயனல் எதிரிசிங்க ஆகியோர் எழுதிய "ஸ்ரீலங்கா மாதா" என்ற பாடல் தேசிய கீதமாகத் தெரிவு செய் யப்பட்டது. 1948 ஆம் ஆண்டு சுதந் திர தின நிகழ்வில் இந்தப் பாடலே தேசிய கீதமாக இலங்கை வானொலி யில் ஒலிபரப்பப்பட்டது. ஆனால் தேசிய கீதத்தைத் தெரிவு செய்யும் குழுவில் இந்தப் பாடலின் எழுத்தா ளர்களான பி.வி.இலங்கசிங்க, லய னல் எதிரிசிங்க ஆகிய இருவரும் அங்கத்தவராக இருந்ததாலும், அவர்கள் இருவரும் தமது பாடலைத் தெரிவு செய்வதற்கு பக்கச் சார்பாக செயற்பட்டார்கள் என்ற குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டதாலும், பின்னர் அந்தப் பாடல் தேசிய கீதத் திலிருந்து ஒதுக்கப்பட்டது. அதனை யடுத்தே ரவிந்திரநாத் தாகூர் எழுதி, சமரக்கோன் சிங்களத்தில் மொழி பெயர்த்த "நமோ நமோ பாடல்" 1949 முதல் தேசியகீதமாக பாடப் பட்டது. 1956 வரை இந்தப் பாடல் தேசியகீதமாகப் பாடப்பட்டுக் கொண்டிருந்த காலப்பகுதியில் இலங்கையில் இரண்டு பிரதமர்கள் அகாலமரணமடைந்தனர். இதனால் இந்தத் தேசிய கீதத்திலுள்ள நமோ, நமோ என்ற வார்த்தைப் பிரயோகம் அபசகுனமானது. அதனால் இலங்கை யில் அழிவுகள் நடைபெறுகின்றன என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. ஆனால் தனது பாடலில் எந்தவித மாற்றங்களும் செய்யப்படக்கூடா தென சமரக்கோன் எதிர்ப்பு வெளி யிட்டபடி இருந்தார்.

அவருடைய பேச்சை எவரும் கேட்கவில்லை. 1961 இல் நமோ நமோ மாதா அகற்றப்பட்டு சமரக்கோனின் அனுமதியின்றியே "ஸ்ரீலங்கா, மாதா" என்ற பதம் சேர்க்கப்பட்டது. இத னால் விரக்தியுற்றுப்போன சமரக் கோன் 1962 ஏப்ரல் மாதத்து நாளொன்றில், அரசாங்கம் தனது பாடலை கேவலப்படுத்திவிட்டதாக கண்டன அறிக்கை ஒன்றை எழுதி வைத்துவிட்டு தூக்க மாத்திரைக ளைப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். இப்படித் தன்னை உரு வாக்கியவரையே கடைசியில் பலி வாங்கியது இலங்கைத் தேசிய கீதம்.

இதற்கிடையில், 1950 இல் கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரி யரால் தமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி என்பவர் மூலம் இந்தத் தேசிய கீதம் தமிழிலே மொழிபெயர்க்கப்பட் டது. தொடர்ந்து பல நிகழ்வுகளிலே யும் பாடப்பட்டு வந்தது. அதன் பின்னர் சுமுகமாக பாடப்பட்டு வந்த தமிழ் தேசியகீதத்தின் மீது யார் கண் பட்டதோ 2010 இல் மஹிந்த ஆட்சி யின்போது மீண்டும் சர்ச்சை கள் முளைத்தன.

தேசிய கீதத்தைத் தமிழில் பாடக்கூடாதென மஹிந்தவின் அமைச்சர்கள் கூப்பாடு போட்டு, அதனைத் தனிச்சிங்களத்தில் மட்டும் பாடத் தொடங்கினர். 2015 இல் ஆட்சிக்கு வந்த மைத்திரி ரணில் அரசு தமிழிலே தேசியகீதம் பாட இருந்த தடைகளை உடைத்து சுதந் திரதின நிகழ்வுகளில் நிறைவாக தமி ழிலே தேசியகீதம் பாடப்பட்டு வந் தது. ஆனால் இப்போது 2019 இல் ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷ அரசு மீண்டும் தமிழில் தேசியகீதத்தை தடைசெய்துள்ளது.

ஏற்கனவே இரண்டு பிரதமர்களின் இறப்புக்குக் காரணம் என்று சொல் லப்பட்ட, ஏன் எழுதியவர் என்று சொல்லப்பட்டவரையே உயிர்ப்பலி எடுத்த இந்த தேசியகீதம், தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தத் தமிழ் தடையால் இன்னமும் எத்தனை பேரை பலி எடுக்கப்போகிறதோ தெரியவில்லை?

# ஒரு தாயின்....

(தொடர்ச்சி)

இன்னாருடைய பிள்ளை என் றால் தன்னை வேறு விதமாக - தீவிரவா தியின் பிள்ளையா என்று பார்க்கிறார் கள். இதனால் அவளுடைய எதிர்காலம் குறித்த நெருக்கடிகள் வேறு அவளுக்கு. அவளுடைய கல்வி, அவளுடைய எதிர் கால வாழ்க்கை எல்லாம் இந்த அடை யாளங்களால் பாதிக்கப்படலாம் என்ற நிலையும் சூழலும். எல்லாவற்றையும் விழுங்கித் துயரை உண்டே அவள் வாழ் கிறாள்.

இது இன்னொரு நெருக்கடி. இன்னொரு துயரம்.

"உலகம் எப்படியெல்லாம் இருக்குது பாத்தியா தம்பி" என்று கேட் கும் மணியக்காவின் கேள்விகள் என் னைப் பதிலற்று வெளியில் நிறுத்துகின் றன.

மணியக்கா இன்னொன்றை யும் சொன்னார், "தம்பி, என்ரை பிள்ளை யும் (முருகன்) மற்றாக்களைப்போல படிச்சு உத்தியோகம் பார்த்திருக்கலாம். அல்லது வெளிநாட்டுக்குப் போய் உழைச்சு நல்ல மாதிரி வாழ்ந்திருக்க லாம். இல்லாவிட்டால் தகப்பனைப் போல ஒரு கடையை வைச்சிருக்கலாம். அப்பிடியிருந்திருந்தால், அவனும் இப் பிடிச் சிறைக்கம்பியை இவ்வளவு கால மாக எண்ணிக் கொண்டிருக்க வேண் டியிருந்திருக்காது. எங்களுக்கும் அலைச்சலும் இந்தக் கண்ணீரும் இருந் திருக்காது...." ஏறக்குறைய என்னு டைய நிலையும் இதுதான். அன்றே வேறு வழியைத் தேர்ந்திருந்தால் இன்று இப்படிக் கிடந்து அல்லாட வேண்டியி ருந்திருக்காது.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மணியக்காவைப் பார்க்கிறேன். வெற்றி யண்ணரை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தேன். அதற்குப் பிறகு சந்திக்க வாய்க்கவில்லை. அதற்குள் நன்றாக உடைந்து விட்டார்கள். இவ்வளவு காலம் இருவரும் தாக்குப் பிடித்தி ருந் ததே பெரிய விசயம். இனி அவர்களால் முடியாது. இந்தப் பிள்ளைத் துயரம் விரைவில் அவர்களைக் கொண்டே கப்போகிறது என்று எண்ணும்போது இதயம் ஒரு கணம் கரைந்தது.

முருகனைப்போல நூற்றுக்க ணக்கானோர் இலங்கைச் சிறையிலும் ஆண்டுகளை எண்ணிக் கொண்டிருக்கி றார்கள். எந்த நம்பிக்கை நட்சத்திரமும் அவர்களுடைய கண்களுக்குப் புலப்ப டுவதே இல்லை. அவர்களுக்கு மட்டு மல்ல, சிறையிருப்போரின் உறவுகளுக் கும்தான்.

அரசியல் என்பது எவ்வளவு உக்கிரமானது? எவ்வளவு பொறியா னது? அதற்குக் கால மாற்றங்களோ, சூழல் மாற்றங்களோ பொருட்டல்ல. அது உண்டாக்கும் விளைவுகள் சில வேளை சாதாரணமாக இருப்பதில்லை. அது தொடர் பாதிப்பை உண்டாக்கிக் கொண்டேயிருக்கும். அதை இலகுவில் எவராலும் நிறுத்தி விடவோ மாற்றி விடவோ முடியாது.

இல்லையென்றால் 1990 களின் சூழலுக்கும், இன்றைய 2020 இன் சூழ லுக்கும் இடையில் எவ்வளவு பெரிய வேறுபாடுகள். எவ்வளவு மாற்றங்கள். ஆனாலும் கைதிகள்.. இன்னும் கைதிக ளாகவே. துயரம் தின்னிகள் இன்னும் துயரம் தின்னிகளாகவே. அன்று இனிப் பிலும் உப்புக் கரித்தது.



கதிர்

# முன்னை இட்ட தீ கடையிலே!! பின்னை இட்ட தீ உடலிலே!!

**கடந்த மாதம் யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பகுதியில் கடை ஒன்று எரிக்கப்பட்டது. அடுத்த நாள் கொடிகாமத்தில் ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டி உயிரை மாய்த்தார். இவ்விரு சம்பவங்களுக்கும் உள்ள தொடர்பையும் மறைந்திருக்கும் உண்மைகளையும் வெளிக்கொணர்ந்து வந்திருக்கிறது எமது புலனாய்வுக்குழு.**

ஒரு கோர உண்மைச் சம்பவம் பற்றிய **'திடுக்'** தகவல்கள்




*12.01. 2020 அதிகாலை 1.30 மணி.*

பருத்தித்துறை நகரம் சனசந்தடியற்று உறங்கிக் கொண்டிருந்தது. அந்த அமைதியைக் குலைத்தது ஒரு தீப்பிழம்பு. நகரின் மத்தியில் உள்ள "புதிய சந்தை" கட்டடத் தொகுதியில் உள்ள புடவை விற்பனை நிலையம் ஒன்றில் திடீரெனப் பற்றிக் கொண்ட நெருப்பு, தன் வித்தையைக் காட்டி, அங்கிருந்த பொருட்களையெல்லாம் எரித்து ஏப்பம் விட்டுக் கொண்டிருந்தது. சற்றுத்தூரத்தே காவல் பணியில் இருந்தவர் யதேச்சையாக நிமிர்ந்தபோதே, நெருப்பின் ருத்ரதாண்டவத்தைக் கண்டார். அதிர்ந்தார். தீயைக் கட்டுப்படுத்தவென, அயலவர்களிடம் உதவி கேட்க அவர் விரைந்தபோது, அவரது கவனம் நகரின் ஒதுக்குப்புறத்துக்குச் சென்றது.

" தடக், தடக், தடக்"

யாரோ வேகமாக ஓடும் சத்தம். கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டார் காவலாளி. ஒளி குறைந்த அந்தப் பகுதியில் தனது முகத்தை மூடிக் கட்டிய ஒரு மர்மமனிதன் ஓடிக்கொண்டிருந்தான். சர்வ நிச்சயமாக அவன் தான் தீமூட்டியிருக்க வேண்டும். அவனைப் பிடிப்பதா? தீயை அணைப்பதா? என்று குழப்பிய காவலாளி, இரண்டாவது தெரிவுக்கே வந்து, அயலவர்களை அழைத்தார்.

என்னதான் போராடியும் தீயை வெல்ல எவராலும் முடியவில்லை. கடையில் இருந்த அத்தனை பொருட்களையும் தின்று தீர்த்தபின்னரே தீயின் பசி அடங்கியது. கடை உரிமையாளர் ஓவென்று அழுவதைத் தவிர வேறெதும் செய்ய முடியவில்லை. இத்தனை வருட உழைப்பும், எதிர்காலமும் சில மணித்துளிகளில் கண்ணெதிரே கருகிப் போவதை எவரால் தான் தாங்கிக் கொள்ள முடியும்?

அடுத்தநாள் வந்திறங்கிய பொலிஸ் விசாரணையை முடுக்கி விட்டது. அவர்களுக்கு அதிக சிரமம் வைக்காமல் கடை தீப் பிடித்த சமயம் அங்கிருந்து ஒரு மர்ம மனிதன் தப்பி ஓடியதைத் தான் கண்டதாக காவலாளி கூறிவிட்டார். பொலிஸுக்கு அது போதுமே. தீயில் கருகிய கடைக்கு அருகில் இருந்த கண்காணிப்பு கமெராக்களின் காட்சிகளை உருவியெடுத்து துழாவத் தொடங்கினர். ஒரு கமெராவில் தீ வைத்த காட்சிகள் துல்லியமாகப் பதிவாகியிருந்தன.

---

பூட்டியிருந்த கடையின் கதவு திடீரென மேலெழுகிறது. கதவை இழுக்கும்போது கதவு காலில் லேசாகக் கீறிவிட ஒரு காயம் ஏற்படுகிறது. பின்னர் ஒரு கை மட்டும் தெரிகிறது. பின்னர் முகத்தை மூடிக் கட்டியபடி குளிருக்கு அணியும் மப்ளர் ஒன்றைப் போட்டபடி ஒரு உருவம். கண்கள் மட்டுமே வெளித் தெரிகின்றன. மேலெழும் கதவுக்கு தடி ஒன்றால், முண்டு கொடுத்துவிட்டு, ஒரு போத்தலை அந்த உருவம் எடுக்கிறது. போத்தலின் மூடியில் சிறிய துவாரம் ஒன்றைப் போட்டு, அமுக்க, பெற்றோல் கடையினுள்ளே சீறிப்பாய்கிறது. போத்தலில் இருந்த பெற்றோல் தீர்ந்து போக, சில நொடிகள் காணாமல் போன அந்த முகமூடி மனிதன், மீண்டும் வருகிறான். இப்போது கையில் ஒரு தீப்பந்தம்.

பழையபடி கதவு மேலெழ, பந்தத்தை உள்ளே விட்டுப் பிடிக்க 'பொசுக்'கென்று பற்றியெரிந்து சுழலத் தொடங்குகிறது நெருப்பு. பந்தத்தை அப்படியே உள்ளே போட்டுவிட்டு, ஓடத் தொடங்குகிறான் முகமூடிக்காரன்.

---

கண்காணிப்புக் கமெராவில் தோன்றிய முகமூடிக்காரனின் உடலமைப்பு, நடையுடை என்பவற்றை வைத்து , தனது கடைக்குப் பக்கத்தில் 'பான்சி கடை' வைத்திருப்பவரே இப்படித் தனது கடைக்குத் தீ வைத்திருக்க வேண்டும் என்ற சந்தேகத்தை எரியுண்ட கடையின் உரிமையாளர் தயங்கித் தயங்கிச் சொன்னார்.

அவர் அப்படிச் சொல்வதற்குப் பல காரணங்கள் இருந்தன. உண்மையைச் சொல்லப்போனால், கடை பற்றி எரிந்து கொண்டிருக்கும்போதே, பக்கத்து பான்சிக் கடைக்காரன்தான் இந்த வேலையைச் செய்திருப்பான் என்று பாதிக்கப்பட்டவரின் உள்மனம் சொல்லிக்கொண்டிருந்தது. ஏனெனில், இதற்கு முன்னர் ஏற்பட்டிருந்த முன்பகையும், அதனால் எழுந்த சில சம்பவங்களும் அப்படிப்பட்டவை.

புடவைக்கடைக்காரரும், பான்சிக் கடைக்காரரும் ஒரே பாடசாலை மாணவர்கள். அதனால் ஏற்கனவே அவர்கள் இருவரும் நெருக்கமான நண்பர்கள். ஆனால் அந்த நட்புக்கு வியாபாரம் உலை வைத்தது. இருவரது கடைகளும் அருகருகே இருந்தாலும், இரு கடைகளின் வியாபாரமும் வெவ்வேறானவை. ஒன்று புடைவைக் கடை. மற்றையது பான்சிக்கடை ( அழகுசாதன, பரிசுப் பொருட்கள் விற்பனையகம்). பான்சிக்கடையை விடவும், புடவைக் கடையில் கூட்டம் மொய்ப்பது கூடத்தான். இதனால் பான்சிக்கடைக்காரனுக்கு பொறாமைத் தீ பொறியாக எழத் தொடங்கியது. அந்தப் பொறாமைத் தீயைஇன்னும் அதிகரிக்கச் செய்வது போல, புடவைக்கடைக்காரர் இன்னொரு காரியம் செய்தார். தனது கடையிலும் பான்சிப் பொருட்களை விற்பனை செய்யத் தொடங்கிவிட்டார். அதன் பின்னர் நாளொரு சண்டையும், பொழுதொரு விஷமமுமாக நாட்கள் மாறின. தளபதி பட மம்முட்டிரஜினி போல நட்பாயிருந்தவர்கள், அதன் பின்னர் விவேகம் பட அஜித் விவேக் ஒபராய் போல ஜென்ம விரோதிகளாக மாறத் தொடங்கினார்கள்.

அதிலும் பான்சிக் கடைக்காரன் தனது குரோதத்தை வெறும் வாய்ப்பேச்சில் மட்டும் காட்டாமல் ஆத்திரமூட்டக் கூடிய செயல்களாலும் காட்டத்தொடங்கினான்.

ஒருநாள்............

புடவைக்கடைக்காரன் கடையைப் பூட்டிவிட்டு, வீட்டுக்குப் புறப்பட்டான். மோட்டார் சைக்கிளில் ஏறி, பலமுறை கிக்கரை உதைத்தபோதும், கால் வலித்ததுதான் மிச்சம், மோட்டார் சைக்கிள் 'ஸ்ரார்ட்' பண்ணவேயில்லை. என்னடா, ஒருநாளும் இல்லாத திருநாளாக, இன்றைக்கு இப்படி முரண்டு பிடிக்கிறதே என்று, மோட்டார் சைக்கிளை ஆராய்ந்தபோதுதான், உண்மை பிடிபட்டது. யாரோ மோட்டார் சைக்கிளின் ஒயில் தாங்கிக்குள் கற்கண்டைப் போட்டிருந்தார்கள். அது ஒயிலோடு கரைந்து, உருகி, இயந்திரத்தை இறுகச் செய்துவிட்டது. ஆத்திரம் மேலிட, அதைச் செய்தது பான்சிக்கடைக்காரன் தான் என்று பொலிஸில் முறைப்பாடும் செய்துவிட்டான் புடவைக்கடைக்காரன்.

இன்னொரு நாள் புடவைக் கடையைத் திறக்க வந்தவனுக்கு அதிர்ச்சி. கடைக்கு முன்பாகப் பழுதடைந்த முட்டைகள் கொட்டப்பட்டிருந்தன. வந்த கோபத்தை பல்லைக் கடித்து அடக்கிக் கொண்டு, கடையைத் திறந்துள்ளான் புடவைக் கடைக்காரன்.

ஆனால் எத்தனை நாள் தான் கோபத்தை அடக்க முடியும்? பிறிதொரு நாள், புடைவைக்கடைக்கு முன்னால் ஏதோ மின்னிக்கொண்டிருந்தது. கிட்டப் போய் பார்த்தபோது செப்புத்தகடுகள், திருநீற்றுக் குவியலோடு கொட்டப்பட்டிருந்தன. கூடவே தேசிக்காய்களும். 'செய்வினை' செய்யப்பட்டிருக்கிறது என்ற ரீதியிலான அச்சுறுத்தல் அது. எப்படியெல்லாம் புடவைக்கடைக்காரனை உளவியல்ரீதியாகத் தாக்க முடியுமோ அந்தளவுக்கு திட்டமிட்டு, விதவிதமாக உளவியல் போரொன்று அரங்கேற்றப்பட்டது.

சரி, இவையெல்லாம் போக கடைசியாக புடைவைக்கடைக்காரனின் எதிரி கையில் எடுத்த ஆயுதம், சிறுநீர். அண்மையில் சில நாட்களாக குறித்த புடைவைக்கடை வாசலில் 'இனந்தெரியாத ' யாரோ ஒருவர் சிறுநீர் கழிப்பது அடிக்கடி நிகழ்ந்துள்ளது. புறுபுறுத்தபடி அதனைக் கழுவிவிட்டு, கடையைத் திறந்த உரிமையாளர், கொஞ்சம் உஷாராகி அருகில் உள்ள கண்காணிப்புக் கமெராக்களின் காட்சிகளைப் பரிசிலித்திருந்தால், சின்னப்பிள்ளைத்தனமாக சிறுநீரால் சண்டையிடும் அந்த ஜென்மம் யாரென்று கண்டு பிடித்திருக்கலாம்.

சிலவேளைகளில் அப்படிக் கண்டு பிடித்திருந்தால் இந்தக் கடையெரிப்புக் கூட நடந்திருக்காதோ, என்னவோ. இருப்பினும், இந்த 'எளிய' வேலைகளையெல்லாம் செய்வது தன்னுடைய பக்கத்துப் பான்சிகடைக்காரன்தான் என்பதே புடவைக்கடைக்காரனின் அசைக்கமுடியாத நம்பிக்கை.

அதன் பின்னர் ஒருநாள் புடைவைக்கடையில் வழக்கம்போல காலையில் மஞ்சள்நீர் வாசலுக்குத் தெளித்தபோது, அதில் சில துளிகள் தன்னுடைய கடைவாசலில் விழுந்து விட்டதாக, பான்சிக்கடைக்காரன் 'தாம் தூம் திருப்திகரமாக நடக்காமை ' என்று குதிக்க. அது பெரும் சண்டையாகி,பொலிஸ் வரை சென்றது. கடைசியில் "வியாபாரம் தொடர்பான மனவுளைச்சலால் இப்படி நடந்துவிட்டேன்" என்று மன்னிப்புக்கேட்ட பின்னரே, அந்தப் பிரச்சினை அப்போதைக்கு முடித்து வைக்கப்பட்டிருந்தது.

# 19 அழிக்க வேண்டிய சட்டங்கள் 13

தமிழாக்கம் ந.பரமேஸ்வரன்

'ஜலண்ட்' பத்திரிகையில் 'Midweek Review' 'என்ற பத்தியில் டாக்டர் கமல விஜயவர்தன எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது. சிங்களப் பெருந்தேசியத்தின் மனோநிலையை தமிழ் மக்களும் உணர்ந்து கொள்ள இந்தக் கட்டுரை உதவும்.

கடந்த நவம்பர் 17இன் அரசியல் மாற்றத்தின் பின்னர், முன்னைய அரசின் திருத்தங்களைப் பழுதுபார்க்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பதே கடந்த அரசாங்கத்தின் பேசு பொருளாக இருந்தது. 13வது 19வது திருத்தங்கள் மூலம் விட்ட தவறுகளை திருத்த வேண்டிய நேரம் வந்து விட்டது. இந்திய இலங்கை ஒப்பந்தம்,கைச்சாத்திடுவதற்கு முன்னர் 1987 ம் ஆண்டு ஜூன் மாதம் வடக்கில் பருப்புப் பார்சல் போடப்பட்டது. ஜே.ஆர். வேண்டா வெறுப்பாகச் செய்துகொண்ட ஒப்பந்தம் இறுதியில் காந்தி குடும்பத்தின் மீதான பழிவாங்கலில் முடிவடைந்தது.

இந்தியாவின் திருப்திக்காக ஜே.ஆர். செய்த ஒப்பந்தம், எம்மை ஒரு இக்கட்டான சூழலுக்குள் தள்ளியது. 1977 முதல், ஜே ஆர் எப்போதும் இந்தியாவை இரண்டாம் பட்சமாகவே கையாண்டு வந்தார். அமெரிக்காவின் தத்துப்பிள்ளையான, இந்தியாவின் அரசியல் எதிரியான பாகிஸ்தானுடன் நெருக்கமான உறவைப்பேணி வந்தார் ஜே ஆர். இது இந்தியாவுக்குச் சீற்றத்தை ஏற்படுத்தியது. இந்தியப் புலனாய்வு துறையிலும், வெளிவிவகாரத் துறையிலும் தென்னிந்தியர்கள் உயர் பதவிகளை வகித்தார்கள். இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவாகுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

2009ஆம் ஆண்டில் யுத்தம் முடிந்தவுடன் ரணில் ஒரு சதித்திட்டம் தீட்டினார்; பொதுவேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தி, பின்னாலிருந்து இயக்கி, ஜனாதிபதி முறையை ஒழித்து விட்டு, நாட்டின் பிரதமராகத்தான் வருவதே ரணிலின் நோக்கம். அரசமைப்பில் ராஜபக்ச குடும்பத்தினருக்கு எதிரான ஷரத்துகளைப் புகுத்தி, அதனை மக்களுடைய விருப்பம் என்று சொன்னார். இது தெளிவாக ராஜபக்ச குடும்பத்தினர் மீது பிரதி பலித்தது. அரசமைப்புக்கான 13 ஆம், 19 ஆம் திருத்தச் சட்டங்கள் நாடாளுமன்ற நீதி பரிபாலனத்தை துஷ்பிரயோகம் செய்பவை, மக்கள் விரோதச் செயற்பாடு, அடிப்படை ஜனநாயக விரோத செயற்பாடுகள். அரசியல்திருத்தம்ஒன்று நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டால், அதற்கு சர்வசன வாக்கெடுப்புத் தேவை. அத்துடன் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையும் தேவை.

ஆனாம் 13 ஆம், 19 ஆம் திருத்தச் சட்டங்கள், 1978ம் ஆண்டு அரசியல் யாப்பின் இரண்டாவது பிரிவான இறைமையுள்ள ஒற்றையாட்சி நாடு என்ற விடயத்தை மீறும் செயற்பாடு. பெரும்பான்மையினரின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் 21 உயிர்களைப் பலி எடுத்துக்கொண்டு மாகாணசபைகள் சட்டமூலம் உருவாக்கப்பட்டது. அச்சுறுத்தி, பலவந்தப்படுத்தி, பெற்றுக்கொண்ட மூன்றிலிரண்டு பெரும்பான்மை மூலம், 13வது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. நீதியரசர் பரிந்து ரணசிங்க தலைமையிலான 9 பேர் கொண்ட உயர் நீதி மன்ற நீதியரசர் குழாம் இனப்பிரச்சனை தொடர்பில் சர்வசன வாக்கெடுப்புத் தேவை என 14.11.1987 அன்று தீர்ப்பளித்தது. இலங்கை இந்திய ஒப்பந்தம் 2000 பேர் வரையான இந்தியச் சிப்பாய்களின் உயிர்ப்பலியுடன் நடைமுறைப் படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் 13வது திருத்தம் முப்பது வருடங்களில் முற்றாக செயலிழந்துள்ளது. விக்னேஸ்வரன் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக இனவாதத்தை தூண்டுகிறார். சுமந்திரன் பிரிவினைவாதத்துக்கு எண்ணெய் ஊற்றுகிறார், இந்தத் திருத்தச் சட்டம் நாட்டை அபத்தமான ஒரு நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. மாகாண நிர்வாகம் மத்தியின் கண்ணாடியாக இருக்க வேண்டும்.



மாகாண நீதிபரிபாலனத்துறையினரின் போக்குவரத்துச்செலவு நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அத்துடன் மாகாண நிர்வாகம் பெரும் ஊழல் மோசடிகளுக்கு வழி வகுத்தது. ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என்பவற்றை விட மாகாணசபை தேர்தல்கள் மோசடி நிறைந்தவையாகக் காணப்பட்டன. மாகாணசபைத் தேர்தல்களில் மரபுரீதியான அரசியல்வாதிகளின் பங்களிப்புக் குறைவாகவே இருந்தது. எதிர்மறையான விளைவு களையே மாகாணசபைகள் ஏற்படுத்தியிருந்தன. 13 ஆது திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. அதிகாரப்பகிர்வு தொடர்பாக ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை இந்தியாவுக்கு ஏற்கனவே தெரிவித்து விட்டார். 19 ஆவது திருத்தத்தில் வெளிப்படைத் தன்மை இல்லை. அவசர அவசரமாக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு அன்றைய தினமே அது நிறைவேற்றப் பட்டது. 19 ஆவது திருத்தம் இப்போது பாலத்தின் மேலாக மேவிப் பாயும் தண்ணீர் என்ற நிலைக்கு வந்து விட்டது. எனவே இரண்டையும் நீக்க வேண்டிய தருணம் இதுவே.

## முன்னை இட்ட தீ கடையிலே....!!

முன்னர் இடம்பெற்ற அத்தனை விடயங்களையும் ஒன்றும் விடாமல் பொலிஸிடம், புடைவைக்கடைக்காரன் சொல்ல, பொலிஸ் பான்சிக்கடைக்காரனை விசாரிக்க அவனது வீட்டுக்குப் போனது. ஆனால் அங்கு அவன் இருக்கவில்லை.

"அவர் கடைக்குச் சாமான் வாங்க, நேற்றே கொழும்புக்கு போட்டார்" என்பதே அவரது வீட்டாரின் பதிலாக இருந்தது. " சரி , ஆள் வந்ததும் உடனடியாக பொலிஸ் நிலையத்துக்கு வரச் சொல்லுங்கள்" என்று அறிவித்து விட்டு, பொலிஸார் வந்துவிட்டனர். எப்படியும் பொலிஸ் தேடிவந்த தகவல், பான்சிக்கடைக்காரனுக்கு வீட்டாரால் குறைந்தபட்சம் தொலைபேசி ஊடாகவேனும் தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அத்தோடு கதவை இழுக்கும் போது அவனது காலில் காயம் ஏற்பட்டதையும், பொலிஸ் அதனையும் ஒரு முக்கிய தடயமாகப் பதிவு செய்ததையும் யாரோ பான்சிக்கடைக்காரனுக்கு சொல்லியிருக்கிறார்கள். தன்னுடைய வீட்டுக்கே பொலிஸ் வந்ததை அறிந்த பான்சிக் கடைக்காரன், தான் வசமாகச் சிக்கிவிட்டதை உணர்ந்தான். என்ன செய்தாலும், கடைசியில் தன் பக்கம் தோல்வியாக முடிகின்றதே என்ற நினைப்போ என்னமோ , கடைசியாக ஒரு முடிவுக்கு அவன் வந்தான்.

இருளை விட்டுப் பிரிய மனமில்லாத அந்த விடிகாலைப் பொழுதில் கொடிகாமம் சோம்பல் முறித்துக் கொண்டது. கொஞ்சம் பதற்றத்தோடு அவன் வந்தான். கையில் ஒரு சிறிய பை. சுற்றும் முற்றும் ஒருவித அச்சத்தோடு பார்த்துக் கொண்டான். அந்தப் பனிக்குளிரிலும் அவனுக்கு வியர்த்தது. கையில் இருந்த கைபேசியை எடுத்து, மனைவிக்கு அழைப்பெடுத்தான்.

" எனக்குக் காலில் காயம் இருக்கா?"

" ஏன் இப்பிடிக் கேக்கிறீங்கள். பழைய காயத்தின்ர அடையாளம் தானே இருக்கு" என்று மனைவி சொன்னார்.

"ஒண்டுமில்லை. பிள்ளையளை வடிவாப் பார்த்துக் கொள்" என்று கூறிவிட்டு அழைப்பைத் துண்டித்தான்.

அதன் பின்னர் தன் மூத்த சகோதரனுக்கு அழைப்பெடுத்தான்.

" அண்ணை,என்ரை கடையையும் பிள்ளையையும் நீதான் இனிப் பாதுகாக்க வேணும்"

" ஏன்..? என்னடா இந்த நேரத்தில இப்பிடிச் சொல்லுறாய். குழம்பாம வீட்டை வா" என்று தமையன் சொன்னார்,

"என்ரை முடிவை நான் பார்க்கிறன்" என்பதே அவன் இறுதியாகச் சொன்ன வசனம். அத்தோடு தொலைபேசி அழைப்பு துண்டிக்கப்பட்டது. அவனது இந்த வார்த்தைகள் தமையனுக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது. உடனேயே கொடிகாமம் பஸ் நிலையத்துக்கு விரைந்தார். வழக்கமாக கொழும்பால் அவன் வந்தால், கொடிகாமத்தில் இறங்கி இன்னொரு பஸ் எடுத்துத் தான் ஊருக்கு வருவது அவன் பழக்கம். எனவே இன்றும் அங்குதான் நிற்பான் என்ற ஊகத்தில் அவர் சென்றார்.

ஆனால் அவன் அங்கில்லை. அவனது செல்போனுக்கு பலமுறை அழைப்பெடுத்தும் பதில் இல்லை. இருப்பினும் அந்தச் சூழல் ஏனோ ஒரு பதற்றத்தை அவருக்குள் உள்வாங்கியிருந்தது. பஸ் நிலையத்துக்குப் பக்கத்தில் இருப்போரெல்லாம், ஏதோ ஒன்றை வேடிக்கை பார்க்க விரைந்து கொண்டிருந்தார்கள். அண்ணனுக்கு ஏதோ இனம்புரியாமல், நெஞ்சு துணுக்குற்றது. வேடிக்கை பார்க்கும் கூட்டத்தோடு தானும் சேர்ந்து கொண்டு , சற்றுத் தள்ளி இருக்கும் புகையிரதநிலையத்தை அடைந்தார். தண்டவாளத்தைச் சுற்றிலும் பெரும் கூட்டம். விலக்கிக் கொண்டு பார்த்தார். அங்கே ஒரு ஆணின் சிதைந்த உடலம் அக்குவேறு ஆணிவேறாகக் கிடந்தது. இரு கைகளும் தண்டவாளத்தின் இருபுறமும் தூக்கி வீசப்பட்டிருந்தன. தண்டவாளத்தின் நடுவே குடல். ஆங்காங்கே சிதறிக்கிடந்த உடல் துண்டங்களை காகங்கள் சூடாற முன்னரே கொத்தத் தொடங்கியிருந்தன.

" ஆரோ ஒருத்தன் தனக்குத்தானே நெருப்பு மூட்டிக் கொண்டு, ரெயினுக்கு முன்னுக்கு பாய்ஞ்சிட்டானாம்" அது தன் தம்பியாயிருக்க முடியாது என்று முடிவெடுத்த அண்ணன், அங்கு எங்காவது தம்பி நிற்கிறானா எனத் தேடலைத் தொடர்ந்தார். கொஞ்சத்தூரம் நகர்ந்த அவரை ஒரு குரல் தடுத்தது.

" ஐயா, இதில ஒரு பை இருக்கு. பாருங்க இது உங்கட தம்பியின்ரையா எண்டு" என்று ஒரு பொலிஸ்காரர் அவரைக் கூப்பிட்டுச் சொன்னார். ஒரு சந்தேகத்தில் தனது தம்பியின் செல்போனுக்கு அழைப்பெடுத்தார். செல்போன் சிணுங்கும் சத்தம் அந்தப் பையில் இருந்து வந்தது. அவசர அவசரமாக பையைப் பிரித்தார். அங்கே தம்பியின் செல்போன். 'அப்படியானால்...... தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டு ரயில் முன் பாய்ந்து இப்படிச் சிதைந்து கிடப்பது என் தம்பியா?'

அண்ணனுக்கு தலை சுற்றிக் கொண்டு வந்தது.

தொழில் போட்டியால் உருவான பொறாமைத் தீ, ஒரு கடையை எரித்து , குற்ற உணர்ச்சி மேலீட்டால் அநியாயமாக மனித உயிர் ஒன்றையும் காவு வாங்கியிருந்தது.

தனக்குத்தானே தீமூட்டி விட்டு, ரயில் முன் பாய்ந்து உயிரை மாய்த்த பான்சிக்கடைக்காரர், வெளிநாட்டுக்குச் சென்றுவந்து விட்டு, வாழ்வில் முன்னேற வேண்டுமென்ற இலக்கோடு பான்சிப் பொருள்கள் வியாபாரத்தை ஆரம்பித்திருந்தார். ஐந்து வயதில் ஒரு பிள்ளையும், இப்போது இரட்டையாகப் பிறந்த ஒன்றரை வயதுப் பாலகர்களுமாக அவருக்கு மூன்று பிள்ளைகள்.

தொழில் போட்டியால், எடுத்த தவறான முடிவு, இப்போது அவரின் குடும்பத்தாரை தீராப்பழிக்கு உள்ளாக்கியுள்ளதோடு , அவர்களின் எதிர்காலத்தையும் இருளச் செய்துவிட்டது.

இனி அந்தப் பிள்ளைகளை வளர்த்தெடுக்க, தனியனாக தனது மனைவி என்ன பாடுபடுவார் என்பதை அவர் யோசித்திருந்தால், இப்படியான தவறைச் செய்திருக்கவோ, அல்லது அதன் பின் உயிரை மாய்த்திருக்கவோ மாட்டார். அத்தோடு இன்னொரு, முயற்சியாளரின் தொழிலையுமல்லவா எரித்துக் கருக்கி விட்டார்.

இன்னொன்றையும் இங்கே சொல்லியே ஆக வேண்டும். பருத்தித்துறை நகர சபையின் பொறுப்பில் உள்ள கடைக் கட்டங்களுக்கான பாதுகாப்புக் கட்டமைப்புச் சீரானதாக இல்லை. குறிப்பாக சில பகுதிகளில் கண்காணிப்புக் கமெரா செயலிழந்தும் இருக்கிறது. அவற்றைச் சீர்செய்து, இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டால் , வர்த்தக நிலையங்கள் மீது விஷமிகள் செய்யும் நாசவேலைகளையும், அதன் சூத்திரதாரிகளையும் கண்டறிய முடியும்.

முன்னை இட்ட தீ கடையிலே!!
பின்னை இட்ட தீ உடலிலே!!
கணநேரத் தவறான முடிவுகள், இமாலய இழப்புகளை ஏற்படுத்திவிடும். அவதானம்!!

# மாணவர் கழகம்

அங்கத்துவ இல. 011



**பெயர்:** அபயகரன் கிருஸ்ணி
**முகவரி:** 228, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
**பிறந்த திகதி:** 2009.12.05
**பாடசாலை:** யா/ கனகரத்தினம் ம.ம.வி.

அங்கத்துவ இல. 012



**பெயர்:** லிங்கேஸ்வரன் லக்ஷிகன்
**முகவரி:** இல.439, இராமலிங்கம் வீதி, நீர்வேலி கிழக்கு, நீர்வேலி
**பிறந்த திகதி:** 2006.07.19
**பாடசாலை:** யாழ்.இந்துக் கல்லூரி.

அங்கத்துவ இல. 013



**பெயர்:** குணேசன் நிரோயன்
**முகவரி:** நீர்வேலி வடக்கு, நீர்வேலி
**பிறந்த திகதி:** 2001.11.15
**பாடசாலை:** யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

அங்கத்துவ இல. 014



**பெயர்:** இராசலிங்கம் சஜீஸ்னன்
**முகவரி:** நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
**பிறந்த திகதி:** 2008.01.21
**பாடசாலை:** யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

அங்கத்துவ இல. 015



**பெயர்:** ஜெயராசா மனோரஜன்
**முகவரி:** இல.10, பிள்ளையார் வீதி, திருநெல்வேலி.
**பிறந்த திகதி:** 2005.01.27
**பாடசாலை:** யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி.

அங்கத்துவ இல. 016



**பெயர்:** அருள்ராசன் தர்சினி
**முகவரி:** இரத்தின இல்லம் வட்டு கிழக்கு, சித்தன்கேணி.
**பிறந்த திகதி:** 2008.12.22
**பாடசாலை:** யா/ வட்டு இந்துக் கல்லூரி

அங்கத்துவ இல. 017



**பெயர்:** கணேசானந்தன் கனிமொழி
**முகவரி:** வியாளியக்கடவை, பன்னாலை, தெல்லிப்பழை.
**பிறந்த திகதி:** 2007.08.06
**பாடசாலை:** யா/ மகாஜனாக் கல்லூரி.

- சஞ்சீவியில் பிரசுரமாகும் படைப்புகளில், மாணவர் கழகத்தில் அங்கத்துவம் வகிக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- மாணவர்கள் தமது படைப்புக்களை அனுப்பும்போது தமது அங்கத்துவ இலக்கத்தை தவறாது குறிப்பிட்டு அனுப்பவும்.
- மாணவர் கழக அங்கத்தவர்களுக்கு எதிர்பாராத பரிசுகளும் சிறப்புச் சலுகைகளும் வழங்கப்படவுள்ளன. (இது தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்)



சஞ்சீவி

## மாணவர் கழகம்

1. முழுப்பெயர்: ..................................................
2. முகவரி: ..................................................
..................................................
3. பிறந்த திகதி: ..................................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..................................................
5. கற்கும் தரம்: ..................................................
6. தொலைபேசி இலக்கம்: ..................................................

..................................... .....................................
மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*

இந்த விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி பாஸ்போட் அளவு புகைப்படத்துடன் அனுப்பி வைப்பதன் மூலம் எமது **உதயன் - சஞ்சீவி** மாணவர் கழகத்தின் அங்கத்தவர்களாக நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

